# எழில்

6266



6266

DEC 946
THE MADURA TAMILSANGAM
THE MADURA TAMILSANGAM
திருமுகமுதலியார் M.A., B.T., M.O.L.
20.



நூலாசிரியர்

திரு. J. முத்துவீராசாமி நாயுடு, B.A.

# எழில்

TEACHERS COLLEGE
DEC 1946

காவேரிப்பாக்கம்
ஆவணப் பதிவாளர்
திரு. J. முத்துவீராசாமி நாயுடு, B. A.
இயற்றியது

---

திரு. இளவழகனார்
எழுதிய குறிப்புரையுடன்

---

1945

உரிமை
ஆசிரியர்க்குரியது

::

விலை
ரூ. 1—2—0

First Edition

Published by the Author

All Rights Reserved

1st December 1945

Printed at the Sengunthа Mithran Press, Madras.

TEACHERS COLLEGE
DEC 1946

# பதிப்புரை

கல்லூரியில் மாணவனாய் இருந்தபோது செய்யுட் பாடங்கள் என் மனதைப் பெரிதுங் கவர்ந்தன. செய்யுளுக்கும் எனக்கும் உள்ள இயைபை உணர்ந்து ஆங்கிலத்தில் சில பாட்டுகள் யாத்தேன். என் ஆசிரியர் என் கவி நிலைமையைக் கண்டு மகிழ்ந்து பேசி, திறமையை வீணாக்காது பயன்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தினார். இதை யறிந்த என் நண்பர்கள் செய்யுள் செய்வதாயிருந்தால் தமிழில் யாத்தலே கடமையாகுமென்று சொன்னார்கள். ஆனால் எனக்குத் தமிழ்ப் புலமை இல்லாதிருந்ததனால் அவர்கள் சொன்னதைமட்டும் கருத்தில் இருத்திக்கொண்டேன்.

பதவிக்கு வந்தபின் தமிழ் கற்கவேண்டுமென்ற விருப்பம் இருந்தும் பல இடர்ப்பாடுகளாற் கற்பதற்கில்லாம லிருந்தது. சில ஆண்டுகட்கு முன்னமே தமிழைக் கற்கத் தொடங்கினேன். சிறிது மொழியாட்சியும் ஓரளவு கவியாக்குந் திறமும் என்பால் வந்தெய்தின என்றுணர்ந்தும் நூல் செய்ய முயலாமலே இருந்தேன். நூல் செய்யும்படி என் உள்ளத்திலிருந்து உந்தி வந்த ஆக்கவியலே உரிய பருவத்திற் கொன்னே இருக்கும் என் இயல்பையும் சிற்றறிவையும் இகந்து என்னை ஊக்க, இச் சிறு நூல் எழுவதாயிற்று.

முறையாக நூல் பயிலாது வேறு துறையில் ஒரு பதவியிலிருக்கும் எனது நூலைத் தமிழுலகம் எப்படி ஏற்குமென்ற கவற்சி இருந்துவந்தது. இக் குறையை நீக்க வெண்ணி, செந்தமிழுலகின் முன்னணியிலுள்ள பெரியார் சிலருடைய கருத்தை அறிய விரும்பினேன். நூல் அச்சான

தும் அதனை அவர்கள் பார்வைக்கு அனுப்பினேன். அவர்கள் என் கன்னிச்செயலை ஆதரித்து ஆங்கில முன்னுரையும் அணிந்துரையும் மதிப்புரைகளும் சிறப்புப் பாயிரமும் வழங்கி நூலுக்கு ஆசியும் கூறியுள்ளார்கள். அப் பெரியார்களுக்கு யான் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவன்.

தமிழ்ப் பெரியார் பலர் ஆதரவும் ஆசியும் பெற்று வெளி வரும் இச் சிறுநூலைத் தமிழறிஞர் விரும்பிக் கற்று மகிழ் வார்களென்று நம்புகிறேன்.

காவேரிப்பாக்கம்.
1-12-45

முத்துவீராசாமி.

THE MADURA TAMIL SANGAM
CHAMBERS COLLEGE
DEC 1946

# INTRODUCTION

The Tamils had a glorious past; glorious were their culture and civilization. They had a superb literature of their own. Their great and noble thoughts were all recorded in their poems. Their conception of poetry and literature was not a whit behind the modern conception and most of their poems which have survived deserve a place among the best literature of the world.

In the early centuries of the Christian Era this ancient culture of the Tamils was exposed to the influence of the great cultures of the past, the Jain, the Buddist and the Aryan cultures, which invaded the Tamil land from the North. Each of these cultures left its impress upon Tamil Literature but none of them did subdue or alter its nature. There was indeed a great effervescence at the time of the commingling of these cultures but this subsided in the course of the centuries which followed leaving down precipitates marked with characterisitics predominently Tamilian.

The last of the alien cultures to invade the Tamil country and affect its literature was the culture of the West or the English culture. One visible effect this western culture has produced is the development of Prose. The Modern age is an age of Prose throughout the world and is more so in the Tamil country. Prose is practised, encouraged and spread with all the zeal and enthusiasm of a new conversion, to the exclusion of all other vehicles of expression. Poetry, the noblest and the best vehicle of human expression has been utterly neglected, nay, even tabooed in some quarters. This craze for prose to the exclusion of poetry cannot be regarded as a healthy sign

of growth. Divorced of poetry, any growth in literature is but a tumour.

Worthy and noble thoughts of all great nations of the world, ancient or modern, have found expression in poetry. The lure of materialism and the progress of science have not unseated poetry from the lofty pedestal it has occupied for ages. Countries which attained the zenith of their civilization, countries which rose to their highest position in moral and spiritual spheres and countries which soared to the dizzy eminence of thought, have all cherished poetry as the highest expression of their thoughts and as the noblest embodiment of their culture It is in the concentrated essence of poetry we find the living forms of genius the eternal fountain of wisdom mingled with joy, delight and rapture.

The objection to poetry proceeds from a failure to understand its importance and its unlimited powers when rightly directed. It is due also to the failure to understand the manner in which it acts and produces the wonderful improvement of man's mental and moral nature. The educational aspect of poetry is all pervasive. The experiences which poetry offers are not attainable elsewhere. These experiences into which we willingly or whole heartedly enter or into which we are enticed, elevate and ennoble the soul, alter and modify the entire being of man. Undoubtedly, the promoters of utility, the patrons of Science and the advocates of Prose have their appointed places in the civilization of a country and its culture. But to develop these to the detriment of poetry, and to exclude poetry altogether is the greatest harm which could be done to any civilization or culture.

The spirit of poetry is divine and immortal. No human effort can crush or destroy it. Even in the present atmosphere of apathy, aversion and hatred, poetry has

not ceased to exist. There have been spontaneous outbursts in many cases unknown to the public. There have been mushroom growths, thorny brambles, and leafy growths, which have long passed their fruit-bearing age but which still sprout and have their days. Towering over these, some tall oaks still lift their heads to the radiant sunshine. A medley of growth as this, is but natural when the growth is spontaneous and there is no gardener to prune, to weed out, and nurture only the beautiful and the lofty. No University encourages this growth; no patron directs it in any particular line, useful to himself or to others and no public taste has yet been formed to cherish the lovely and the noble. It is amidst these conditions now prevalent in the land that Mr. Muthuveerasami has come out with his book of verses called 'எழில்' or Beauty.

There is a remarkable originality in the conception of the subject of the poem and boldness in its execution. Perhaps for the first time after the lapse of centuries, the subject matter of a poem in Tamil literature has been elevated to its pristine dignity. The author has lifted the poem from the shackles of religion, ethics and morals which fettered poetry for years. He has raised poetry from the depths of vulgarity and obscenity into which it had fallen in the hands of some doggerel rhymesters. No doubt in his conception of the subject the author has been greatly influenced by the Western culture; but the thoughts and ideas are his own. It is for the first time in Tamil literature—except of course, the occasional gleams in the works of great poets—the subject of "Beauty" has been put forth in a literary form and 207 stanzas have been sung in glorification of "Beauty". The author has seen Beauty of Nature in all its aspects. He has seen it at night, at dawn, during the day and in the evening. He has seen "Beauty" in the all human actions spontaneously springing up, day and night. His metaphors and similies

explaining and expressing these are original, imaginative, and elevating.

In the composition of the stanzas, the author has been as bold as he has been remarkable in the selection of the subject of his poem. In most of the stanzas, he has dispensed with "Monai" or the repetition of the same or similar sounds at intervals in a line itself. The use of "Monai" has been traditional in Tamil Literature. Though in the Sangam period much attention was not paid to this "Monai" yet in the subsequent periods, poets have indulged in it, especially in the verse of the kind the author has adopted for the mere pleasure of its elusive sound even sacrificing the thought. It is no wonder that a reaction has set in. The author has successfully dispensed with this device. Though to an ear accustomed for ages to the repetition of this harmonious sound, the poem may read strange, none the less it has a pleasing rhythm, all its own. The Monai and similar restrictions in poetry are no doubt shackles to a poet and fetter the free flow of words and ideas of an author but in the hands of great poets like Kamban and Elanko these have enlivened their art, added beauty to their thoughts, and enraptured the reader. "Sounds as well as thoughts have relations both towards each other and that which they represent". This harmonious recurrence of sound in the hands of great poets has proved so sweet and majestic as to satisfy the senses, to brust, the circumference of the reader's mind and to draw it out into undiminished joy and rapture. When, however, the creative energy takes hold of an author's mind it will never be curbed by restrictions and will not rest content unless pours itself forth, with or without these traditional modes or restrictions. In this connection and in the interest of the future development of Tamil poetry, I give below a few lines from Tagore;—

"The art ideal of a people may take fixed root in a narrow soil of tradition developing a vegetable character, producing a monotonous type of leaves and flowers in a continuous round of repetitions. Because it is not disturbed by a mind which ever seeks the unattained, and because it is held firm by a habit which piously discourages the allurements of all adventures, it is neither helped by the growing life of the people nor does it help to enrich that life. It remains confined to coteries of specialists who nourish it with delicate attention and feel proud of the ancient flavour of its aristocratic exclusiveness. It is not a stream that flows through and fertilises the soul but a rare wine stored in a dark celler underground acquiring a special stimulation through its artificially nurtured barren antiquity. In exchange for a freedom of movement which is the prerogative of vigorous youth, we may gain a static perfection of senility that has minted its wisdom into hard and rounded maxims. Unfortunately there are those who believe it to be an advantage for a child to be able to borrow its grand parents' age and be spared the trouble and risk of growing and think that it is a sign of wealthy respectability for an artist lazily to cultivate a monotonously easy success by means of some hoarded patrimony of tradition.

And yet we may go too far, if we altogether reject tradition in the cultivation of art, and it is an incomplete statement of truth to say that habits have the sole effect of deadening our mind. The tradition which is helpful is like a channel that helps the current to flow. It is open where the

water runs onward, guarding it only where there is danger in deviation. The bee's life in its channel of habit has no opening—it is involved within a narrow circle of perfection. Man's life has its time-honoured institutions which are its organised habits. When these act as enclosures, then the result may be perfect, like a bee-hive of wonderful precision of form, but unsuitable for the mind which has unlimited possibilities of progress."*

This great poet who was himself a leader of the Renaissance Movement in one of the modern progressive languages is an authority whose views young authors could rely on for guidance. Surely no better criterion than the view expressed above could be thought of for judging a work of art which is the outcome of Renaissance in any language. I congratulate the author on his composing a poem conforming to the standard set up by a modern poet of international repute and gladly recommend his work to every Tamil scholar.

† K. KODANDAPANI PILLAI.

---

* Extract from "The Meaning of Art" by Rabindra Nath Tagore.

† Rao Saheb K. Kodandapani Pillai, B.A. Spl. Officer, and Protector of Emigrants, Madras.

# அணிந்துரை

இயற்கை யாண்டும் போற்றப்படுகிறது. காரணமென்ன? காரணம் பலபட விரிக்கலாம். அவைகளுள் தலையாயது இயற்கையினூடே ஒன்று இடையீடின்றி விராவி நிற்றல் என்று அறிஞர் கூறுப. அவ்வொன்று எது? அஃதே எழில் - எழில் என்பது. எழில் உயிர்; இயற்கை உடல்.

எழில் இரு நிலையுடையது. ஒன்று இயற்கையைக் கடந்த தனித்த நிலை; மற்றொன்று இயற்கையுடன் கலந்த நிலை. முன்னையதை உணர்தல் அருமை. அவ்வருமை பின்னையதைக் கொழுகொம்பாகப் பற்றப் பற்ற எளிமையாகும். இதற்கு இயற்கை வழிபாடு தேவை.

இயற்கை வழிபாடு சிலரை இயற்கையாக்கும். இயற்கையானவரிடத்திருந்து சிற்சிலபோது கலைகள் முகிழ்ப்பதுண்டு.

இயற்கை வழிபாடு இந்நூலாசிரியர் மாட்டும் அமைந்தது. அதனால் "எழில்" முகிழ்த்தது. "எழில்" ஒரு நிலையம் - இயற்கை நிலையம் - தமிழ் நிலையம். "எழில்" வாழ்க; ஆக்கியோர் வாழ்க.

"எழில்" நிலையத்துள் நுழைந்தேன்; அதை அங்கும் இங்கும் நோக்கினேன். எங்கும் இயற்கைக் காட்சி!—வான நீலத்தின் விதானப் பரவை; கடல் நீலத்தின் கிடந்த நோக்கு; அஃது இதை முத்தமிடல்; முத்த இதழ்களினின்றும் பவளப் பிழம்பு வீறி வட்டமிட்டாலென இளஞாயிறு தோன்றி ஒளி காலல்; மாலையில் வெண்டிங்கள் உழவு; பொழுது புலர்வு; பசுமை போர்த்த மலைக்குலங்கள்; பசுங்குடைக் கீழ்க் கலைஞர்

குழாம்; மயிலின் ஆட்டம்; குயிலின் கூவல்; அருவியின் முழவு; வண்டின் யாழ்; மக்கள் ஈட்டம்; உழவுக் கூட்டம்; காதல் வாழ்க்கை; மங்கல வினைகள்; மலர் முகங்கள்; தெய்வக் குழவிகள்; பாட்டுப் பொங்கல்—"எழில்" வழங்குங் காட்சி என்னே! என்னே!!

"எழிலி"ல் உள்ளங் கவரத் தக்க பொருள்கள் பல பொலிகின்றன. அவைகளுள் ஒன்று ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கற்பாலது. அது தாய்மையின் ஓவியம் பற்றியது.

நூலாசிரியர் நெஞ்சம் பலதிற எழிற்கூறுகளில் ஈடுபடுகிறது; இயற்கைப் படிவமாகிய பெண்மை எழிலிலும் ஈடுபடுகிறது. ஈடுபாடு முதிர்ச்சி அடைகிறது. முதிர்ச்சியில் பெண்மை எழில் தாய்மை எழிலாய் முழுமை எய்துகிறது. முழுமை, ஆசிரியர் நெஞ்சில் படிந்து அவர் எழுத்தில் ஓவியமாக வடிகிறது. அத் தாய்மை ஓவியம் பண்டைப் பாட்டோவியரின் பண்புக்கோர் இலக்கியமாய் இக்காலத்தவர்க்கு அறிவு கொளுத்துகிறது.

இயற்கையின் உயிராகிய எழிலையுணர்தலும், அதை வரைதலும் அருமை. அவ்வருமை அத்துறையில் இறங்கி உழைப்பவர்க்கு நன்கு விளங்கும். இந்நூலாசிரியர் அவ்வருந்துறையில் ஒல்லும் வகை முயன்றுள்ளனர்; முயற்சியால் விளைந்தது வெற்றியே.

"எழில்" நிலையம் இக்காலத் தமிழ்நாட்டுக்குத் தண்மை வழங்குதல் ஒருதலை. இத்தகைய விழுமிய நிலையம் கோலிய ஆசிரியர் முத்துவீராசாமிக்கு எனது வாழ்த்து உரியதாக. அவர்வழி இன்னும் பன்னூல் மலர்வதாக.

சென்னை,<br>
13-12-44.

திரு. வி. க.

# மதிப்புரை

ஆசிரியர் மறைமலையடிகள்,
பொதுநிலைக் கழககுரு, பல்லாவரம்.

"'எழில்' என்னும் இந்நூலின் முன்னுரை உரைநடையி னும், இதன் பிற்பகுதி செய்யுள் நடையிலும் ஆக்கப்பட் டிருக்கின்றன. முன்னுரை அழகிய இலக்கியச் சொற்களால் வரையப்பட்டிருக்கின்றது. பிற்பகுதியும் அழகிய இலக்கி யச் சொற்கள்பல கொண்டு பல வகைப் பாக்களால் இயற்றப் பட்டிருக்கின்றது. இயற்கைப் பொருள்களின் வனப்பும், மக்கள் முதலான உயிர்ப் பொருள்களிற் காணப்படும் அழ கும் இந்நூலின்கட் செவ்வையாக எடுத்து நுவலப்பட்டிருக் கின்றன. இந்நூல் பொதுமக்கட்கன்றிக் கற்றார்க்கே பயன் படும் தகையதாயிருக்கின்றது. இந் நூலாசிரியர் தமக்குள்ள சிறந்த தமிழறிவைக் கதை தழுவிய உரைநூல்களும் செய் யுள் நூல்களும் இயற்றுதற்குப் பயன்படுத்துவாராயின், நம் தமிழ் மக்கள் இவர்க்குப் பெரிதும் கடமைப்பட்டவராவ ரென்று கருதுகின்றேன்."

நாவலர், சோமசுந்தர பாரதியார், எம்.ஏ., பி.எல்.,
மலையகம், பசுமலை.

"தாங்க ளன்போ டனுப்பிய 'எழில்' என்னும் தொகுப் பாவின் முறை பெற்றுப் படித்து மகிழ்வுற்றேன். மேல் புலப் புலனெறி முறையில், 'அழகு' தரு முணர்வுவகை பல திரட்டிப் புதிய துறைச் செய்யுள் பல பாடித் தமிழறிஞர்க் குதவிய தம் வேளாண்மை பாராட்டத்தக்கது. பாக்கள் பொருளளவில் அரிய பல கருத்துக்க ளடங்கியவை. தற்கா

லத் தமிழுலகு விரும்பாத அரிய நடை சுவைக்கச் சொல்லளவில் வல்லுநர்க்கே ஒல்லுமல்லால் வல்லார்கட் கெளிதன்று. எனினும், ஒழுகோசைத் தூக்கும், இடைகுறையா ஒரு நிறையை ஓம்பும் நடைப்போக்கும் வியப்பு விளையாதிரா. "சதிர்க்கலே" போன்ற சேரி மொழி ஒரு சில இடம் பெறினும் பெரிதும் தூய தமிழ்ச் செய்யுள் மொழியா னடக்கும் பாட்டுக்கள் தமிழினிமை விரும்புபவர்க் குளங் குளிரச் செய்யுமென நம்புகிறேன். பல்லாண்டு ஆங்கிலமே பயின்று, தாய் மொழியும் தமிழாகாத் தம்மனோர்க்கு, செம்மையொடு செறிவழகும் சேர்ந்த தமிழ்த் தீம்பாக்கள் செய் திறத்தை வியவாதார் பாவருமை நயவாதாரே. ஒரு பொருளைப் பல துறையில் தருஞ் செய்யுளினத்தி லிது மதிப்பிடப்பெற் றிலகுவதி லையமில்லை. புதிய புலனெறி பயின்று புலவர்களைப் பாவியற்றத் தூண்டு துணை இக்கோவையாமென நானெண்ணுகிறேன். இந்நூற்குப் பெருவழக்கும், தங்களுக்கு நெடுவள நல்வாழ்வும் விரும்புகிறேன்."

தமிழ்ப் பெருங்கவி, முதுபெரும் புலவர்,
இராவ்சாகிபு வி. பி. சுப்பிரமணியமுதலியார், ஜி.பி.வி.சி.,
ஓய்வுபெற்ற கால்நடைத் துணைக் கண்காணிப்பாளர், வெள்ளக்கால்.

"நூலின் முன்னுரையில் 'எழில் மாண்பு' பற்றி எழுதியிருப்பது முழுவதையும் படித்து மகிழ்வுற்றேன். நூலின் செய்யுட் பகுதியிற் சில பாகம் படித்தேன். முன்னுரையினும் நூலினும் தங்களுக்குச் சங்கநூல்களிலும் பிற்பட்ட நூல்களிலும் உள்ள ஆழ்ந்த பரந்த தேர்ச்சி கண்டு வியப்புள்ளவனானேன்.

செய்யுள்களில் மோனை சற்றுக் குறைய முற்றும் இல்லாமையால் பாட்டுக்கு மோனை வேண்டா மென்னுங் கருத்துடையீர்கள் போலும்"

ரா. இராகவய்யங்கார்,
சேதுஸமஸ்தான மகாவித்வான், இராமநாதபுரம்.

"ஸ்ரீமான் முத்துவீராசாமி நாயுடு அவர்கள் இயற்றிய 'எழில்' என்னும் நூல் பலவகையாலும் உயர்ந்து சிறந்து விளங்குகின்றது. செய்யுணடை இனிதாக உள்ளது. உள்ளங் கவருந் தன்மை வனப்பு எனக்கொண்டு அதனை ஆராய்ந்து துய்க்கும் முறையை நன்கு எடுத்துக் காட்டு கின்றது. ஆளுடைய அடிகள் "அருமையி லெளிய அழகே போற்றி" என்புழிக் கடவுளை அழகு என்று கூறினர். இம் முறையை எழிலைப்பற்றிய ஆராய்ச்சி உரை நடை நன்கு விளக்கி உள்ளது. இது பலவாற்றானும் தமிழுலகிற்குப் புது விருந்தாகப் பாராட்டத் தக்கது."

S. VAIYAPURI PILLAI, B.A., B.L.,
Reader in Tamil, University of Madras.

"Thank you for the copy of your poem on 'எழில்' which you have been kind enough to send me. Please accept my congratulations. Even a cursory perusal of the Tamil Introduction will convince any one of your erudition and scholarship. Carlyle and Emerson are the two masters you have deeply studied and they have influenced both your thought and style.

The poem itself is conceived in a thoroughly original manner and I am doubtful whether any ordinary reader will be able to follow your ideas with ease. The formal aspect of the poem also reveals your originality. The requirements of 'monai' are set at nought boldly in almost every stanza and unaided by such extraneous embellishments the poem stands in a unique manner as a challenge to the time-honoured conventional poems.

தெ. பொ. மீனாக்ஷிசுந்தரனார், எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல்.
*பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.*

"அழகுநூல்" மேனாட்டில் பெரிதும் ஆராயப்பெற்று வருகிறது. தமிழ்நாட்டில் அந்த ஆராய்ச்சி இன்னமும் வேர் கொள்ளவில்லை. தாங்கள் எழுதிய 'எழில்' என்ற நூல் அத்தகைய ஆராய்ச்சியின் சாற்றைப் பிழிந்து தமிழ்த் தேனோடு கலந்து பாவிருந்தாகத் தமிழருக்கு ஊட்டி நிற்கின்றது. தங்கள் நூல் வாழ்வதாக. தாங்கள் மேலும் மேலும் இத் தொண்டில் ஈடுபட்டுத் தமிழ் எழிலை வளர்ப்பீராக."

ஈ. த. இராஜேசுவரி அம்மையார், எம்.ஏ., எல்.டி.,
*விரிவுரையாளர், மேரியரசி கல்லூரி, சென்னை.*

"திரு முத்துவீராசாமியார் பத்திரங்களைப் பதிவு செய்பவர். அவ் வேடுகளில் அழகற்ற உயிரற்ற சொற்களையே கண்டுவரும் இவரது உள்ளமானது வாடாத 'எழில்' பூத்து நிற்பது ஒரு வியப்பேயாகும்; போரிடையே புழுங்கும் நமது மனதிற்குப் பொருந்தியதொரு மருந்தாகும். இஃது அவரது பண்பாட்டையும் எதிர்காலத்து எழ இருக்கும் நமது நாட்டையும் சுட்டுகிறது எனலாம். தமிழர் உள்ளம் அத்தகைய அழகின் வடிவமாகும்.

"கல்வி அழகே அழகு" "ஒழுக்கத்து அழகு" "அழகுக்கு அழகு" என்று அறிவு நிலையையும் ஒழுக்க நிலையையும் இன்ப நிலையையும் அழகென்றே பாராட்டிய பெருந்தகையோர் தமிழர் ஒருவரேயாம். இயற்கையிற் றோன்றும் ஐம்புலத் திரு நிலையினையும், மாறுதற்கிடையே தோன்றும் மாறாப் பெரு நிலையினையும் அப்பாலுக்கப்பாலான அரு நிலையினையும் முருகு என வழங்கி அழகு வழிபாடு செய்த மரபி

னர் தமிழரேயாம். அத்தகைய மரபு மேனாட்டுப் புலவர்கள‌து அழகாராய்ச்சியைத் தூய்மை செய்து உயர்த்துவதனை இந்நூலின் அடிக் குறிப்புகளில் கண்டு களிக்கலாம். ஆசிரியர் எழிலின் உண்மைத் தன்மையினை முன்னுரையாகச் செந்தமிழ் உரைநடையில் விளக்கி அவ் வெழிலின் இன்பத்தைப் பைந்தமிழ்ப் பாட்டாகப் பாடி மனதிற்கு ஓர் மகிழ்ச்சியை ஊட்டுகின்றார்.

கன்னிப் பாடலாக எழுந்த இப் பாக்கள் மேலும் பொங்கிவரக் கூடிய பாட்டு வெள்ளத்தைச் சுட்டுகின்றன எனலாம். பாட்டின் இயல்பை,

"ஆக்கிய வுள்ளந் தோய்ந்து செந்தெரு ளறிவிற் றைத்து
நோக்கியற் பொருள்கண் மொய்ய வணிகொளத் தாங்கிச்செய்ய
நாக்கிசை பயின்று யாப்பிற் றருமொழி யுருவிற் பூத்துத்
தேக்கரு மருளின் மாண்பு மணப்பதே செய்யு ளென்ப"

எனத் தெளிவுறுத்துகின்றார். மாதவியும் சகுந்தலையும் தமையந்தியும் திளைத்து விளையாடும் இந்தப் பாட்டு வெள்ளமே உண்மையாம் அழகு வெள்ளம் என்ற துணிவோடு,

"அரும்பொடு போது தாங்குஞ் செறியிணர்க் கொடியு மொன்றே
வரம்பில வுயிரிற் பொங்கும் வேனிலின் செவ்வி யொன்றே
யரும்பொல முகமெய் பூக்குஞ் செவ்வியு முள்ளத் தொன்றே
யிரும்பொழின் முதல வண்டம் தனியிறைப் பாவே யன்றே"

எனப் பாடி முடிக்கின்றார்.

வாடி வதங்கும் தமிழ்நாடு இந்த எழிலோடு உயர்ந்து ஓங்கி இன்ப வாழ்வு வாழ்வதாக."

திரு. நாராயணையங்கார்,
ஆசிரியர், "செந்தமிழ்", மதுரைத் தமிழ்ச் சங்கம்.

"எழில் என்பது அணி அழகு வனப்பு காரிகை திரு என்றற் றொடக்கமான உரிச்சொற் பெயர்களால் உணர்த்தப் படும் பொருட்டன்மை. இது உணர்ந்தாரை உவப்பிக்குந் தன்மையால் உலகைத் தன் வயப்படுத்திக்கொண்டிருக்கும் மாட்சியிற் சிறந்தது; தெய்வத் தன்மையும் உடையது. இதன் மாட்சி முதலிய பலவகை இயல்புகளையும் பாகுபாடு களையும் ஆராய்ந்தறிந்த திருவாளர் முத்துவீராசாமி நாயுடு அவர்கள் பி. எ. அரிதின் முயன்றறிந்த கருத்துக்கள் அவம் போகாது உலகிற்குப் பயன்படல் வேண்டி இந் நூல் எழுதி யுதவப்படுகிறது.

இது, முதல் வழி சார்பு என்னும் நூல் வகையுள் ஒன் றன்பாற் பட்டிலதாயினும் இன்னோரன்ன நூல்களைத் தனி நூல் என ஒரு நூல் வகை கொண்டு ஆதரிக்கவேண்டும். அல்லாக்கால் இத்தகைய ஆராய்ச்சிநூல்கள் பல்குதலின்றித் தமிழறிவின் வளர்ச்சி தளர்ச்சி யடையத் தலைப்படும்.

இந்நூல், உலகு துயிலொழிந்து எழுந்த நிலையில் பற் பல பொருள்களில் தோன்றும் பலவகை யெழில்களை விளங் கக் கூறுதலால் எழில் நூல் எனப் பெயர்பெற்றதென்று தோன்றுகிறது.

இந்நூல் கற்பார்க்கு இன்பம் பயப்பதோடு புலமைத் திறமையும் தோற்றுவிக்கத்தக்கது. இந்நூலுள் எழில் இலக் கண வகைபாற் கூறப்பட்டிலதாயினும் இதன் முன்னுரை யுள் அவ் வெழிலின் வரலாறுகளும் ஆராய்ச்சி முடிவான கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

இந்நூலை எழுதியுதவிய ஆங்கிலக் கல்வியும் அருந் தமிழ்ப் புலமையும் அமைந்த ஆசிரியர் இன்னும் இதனைப் பன்முறை யாராய்ந்து எழில் வரலாறுகளை தொகை வகை விரியாற் பெருப்பித்துதவுமாறு எல்லாம் வல்ல எழில்னங்கு அருள்புரிவாளாக.''

ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.
*தலைமை விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.*

எழிலை விரும்பாதார் யார்? 'எழில்' என்ற சொல்லில் இனிமையுண்டு; அழகுண்டு. இயற்கையின் எழிலைக் கண்டு இன்புற்றனர் பழந்தமிழர். புறத்தும் அகத்தும் எழிலைப் போற்றினர். மழை வளந்தரும் மேகத்தை எழிலி (a thing of beauty) என்றே அழைத்தனர். ஓவியம், சிற்பம் முதலிய கலைகளுக்கு எழிலே உயிர். இத்தகைய எழில் இன்னும் தமிழர் போற்றுகின்றனர் என்பதற்கு இந்நூல் ஒரு சான்று. எழில் என்னும் பேர்பெற்ற நூலில் ஆசிரியர் முத்துவீரனர் கலைப்பாலைத் தமிழ்த் தேனிற் கலந்து தருகின்றனர். அவர் கவிதை ஒரு வகையிற் புதுமை வாய்ந்தது. பழமையும் புதுமையும் வாய்ந்த எழில் நம் கருத்தைக் கவர்ந்து நல் விருந்தளிக்கின்றது எழிலை ஏற்றுப் போற்றி இன்புறு வோமாக.

ஆசிரியர், தமிழ்ப் பொழில், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

'' எழில் என இந்நூல் பெயர் பெற்றதற் கேற்ப இந் நூற் பாக்களும் எழில் கொடு விளங்குகின்றன. எளிமை யும் இனிமையுங் கலந்த சொன்னயம், பொருணயம் அமைந்த 207 - பாக்களால் இந்நூல் இயற்றப்பெற்றுளது. ஒவ்வொரு பாட்டிற்கும் இன்றியமையாத குறிப்புரைகளும் விளக்க வுரைகளும் மேற்கோட் குறிப்புக்களும் ஆங்காங்கு அமைத் தெழுதி விளக்கப்பெறுஞ் செய்தி போற்றத் தக்கதாகும். இந்நூலாசிரியரின் சங்கநூற் பயிற்சியினையும் ஏனைய நூற் பயிற்சியினையும் புலமை நலன் முதலியவற்றையும் அன்பர் கள் இந்நூலை வாங்கி ஓதி யுணர்வதன் மூலம் நன்கறிந் தின்புற வேண்டுகின்றோம்.''

## சிறப்புப் பாயிரம்

திண்டுக் கல்லே தமதூ ராத் திருவார் செம்மைச் **செயராமர்**
பண்டு செய்த தவப்பயனாய்ப் பண்பார் கற்புத் **தாயம்மை**
கண்ட மகவாய்ப் பீ. ஏ. ஆய்க் கவிஞர் ரிஜிஸ்ட்ரார்ப் பணிபூண்டு
கொண்டு தனது நுண்ணறிவு குறிப்பா லுணர்த்த ஆய்ந்துவந்து.

சீராம் சிறப்பாம் செல்வமாம் தெவிட்டா ருசியாம் தேனாகும்
ஏராம் இறைபாம் இன்பங்கள் எல்லாம் தானாம் எழிலேயென்
றூரா அன்போ டாய்ந்தறிந்தே அரிய நூல்தந் தான்முத்து
வீரா சாமிப் பேர்பெற்ற விறலோன் பலரும் மெச்சிடவே.

—தணிகைமணி
ராவ்பகதூர் - வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ.

# முன்னுரை

## எழிலின் மாண்பு

நீலம், பொன், வெள்ளை, சிவப்பு முதலிய வண்ணங்கள் மலர்கள் சிந்திக் கிடக்கும் பசும்புற் றரையிலும், ஆங்குத் தண்ணிழல் படுமாறு உருமலர்களும் கனிகளும் போர்த்துத் தூங்கும் மரப் பொதும்பரிலும் பல மணிப் புட்கள் தத்தித் தத்தி இசைபாடித் திரிந்திட, வண்டினங்கள் தேனை யுண்டு களித்து இரவும் பகலும் ஓய்வென் றொலித்துப் பொங்கும் நறுமணச் சோலையி னிடையில், செம்பொற் கும்பங்களை உச்சியிலேந்தியும் உருவங்கள் மலிந்தும் அப் பொழிலின் உயர்ந்த தென்னையினும் பன்படங் குயர்ந்து விண்ணளாவியவையுமான மாடப் புறாக்கள் களித்துத் திரியும் நாற்றிசைக் கோபுரங்களைக் கொண்ட மதிலின் நடுவில், நுட்பமேந்திய அரிய வேலைப்பாடமைந்துருத்த சிலைகளொடு பொலியும் உயர்ந்தகன்ற மண்டபங்களில் தோகைகள் உலவிடும் திருக்கோயிலொன்றைக் கண்ணுற்றபோதே அதன் அழகில் ஈடுபட்டு, இன்பமும் துன்பமும் புல்லிய உணர்வின் சிறு வரம்பைக் கடந்து எல்லையற்ற இன்பத்தி லாழ்ந்து, பின்னர், அவ்வண்ணக் கோயிலை யமைத்த பெருஞ் சிற்பியின் ஆற்றலை நினைந்து நினைந்து வியக்கின்றோம். இன்னும் நீண்டகாலம்வரையில் இடையிடையே அத் திருக்கோயிலின் எழிலுரு நம் மனவெளியில் மீண்டும் மீண்டும் தோற்றும்போதெல்லாம் கரையற்ற இன்பவாரியிலேயே மூழ்கித் துய்க்கின்றோம். எழிலின் இணையற்ற மாண்பு இருந்தவாறு தான் என்னே! உணர்வை இகந்து நின்ற இன்பத்தின் வரம்பை உணர்வின்பாற் படுத்து எடுத்துரைப்பது இயலாததொன்றன்றோ? எனவே, இன்பத்திற்குக் காரணமாய் நின்ற எழிலின் பெற்றி முற்றிலும் கண்டுரைப்பது ஆவதன் றென்பது சொல்லாமலே யமையும்.

அழகு ததும்பும் உருவமைந்த அக்கோயிலின் வண்ணம், அதனை யமைத்தற்கு முன்னே அதனை யமைத்த சிறந்த ஆற்றலுடைய தச்சன் மனத்தில் கருவாயிருந்து, செவ்வனே உருநிறைந்து, தக்க பருவத்தே கல்லும் மற்றவையுங் கொண்டு உருவாயிற்றென்று தெரிகின்றது: உருவின் மாட்சி யெல்லாம் முற்பொழுதில் கருவில் அமைந்திருந்தது திண்ணம்.

அதுபோன்றே பரந்த நீலமேற்கட்டியில் இளை நிலவெரிக்கும் பலதிற மணிகள் தோய்ந்து கிடந்தனபோன்று இரவில் இருண்ட நீலவானில் மின்னும் எண்ணிறந்த விண்மீன்களையும், அவற்றிடையே தோன்றிப் படரும் அமுத வெண்ணிலவு காலும் தண்கதிர் மதியத்தையும், பொழுது புலரும்போது கீழ்த்திசையினின்றும் பரவும் பொன்னும் செம்பொன்னும் போன்ற காலையொளி ததுவப்பெற்ற மீதுலவும் முகிற்கூட்டங்கள், வானளாவிய நீலச் சிகரங்கள், தண்காற்றிற்றிரையும் நீர் நிலைகள், ஆறுகள், பசும் பயிர்ப் பரப்புகள், வண்ணமலர்களும் காய்கனிகளும் நிறைந்த பைம்பொழில்கள் ஆகிய இவைகளின் தோற்றத்தையும், மாலையிலும் அவ்வாறே செம்பொற்கதிரொளியில் பல்லுயிரும் பல பொருளும் பொலியத்தோன்றும் தோற்றத்தையும் கண்டு அவைகளின் மாட்சியை நினைக்கும்போது அவைகளுக்கு ஆதியாய ஆக்கவியலின் அளவிடற்கரிய செம்போக்கை என்னென்று சொல்வது! யாரே அதன் மாட்சியைத் தக எடுத்துச் சொல்ல வல்லார்? சிற்பியின் சீரிய கருத்து கோயிலாய் மலர்ந்தது போன்றே, ஆக்கவியலே அண்டமாய் மலர்ந்து பல பொருள்களிலும் பல்லுயிர்களிலும் எழிலாய்த் தோற்றுகின்றது. தச்சன் கருத்துக்கு முதலும் இவ்வியலே யென்பது பின்னே காண்போம்.

இப்படித் தோன்றும் எழிலின் மாண்பு, வடிவுநலத்திலேயே பெரும்பாலும் கண்டு மகிழப்படினும், அதன் பெற்றி வடிவத்திலும் உயிர்களின் உள்ளப் பண்பிலும் அறிவிலும் அவற்றின் பயனுய இயக்கத்திலும் பொலிவதாகும்.

## உருநலன் மாண்பு

இனமணியொளி தெறிக்கும் பளிக்குப்போன்ற பனிக் கட்டிகளால் மூடப்பெற்று மழைக்குலங்களால் கதுவப் பெற்ற வானளாவிய சிகரங்களேந்திய நீல மலைகளுக் கிடையே அசைவற்றும் தண்காற்றுக் கதுவச் சிறிதே திரைந் தும் படிகம்போன்று நிற்கும் மலையேரிகளையும், வனமலர்ப் புதல்களைக் கதுவி, உயர்ந்த நீல மலைகளிலிருந்து பக்கத்தே யுள்ள சிறுவரைகளிலும் அடிவாரங்களிலும் வீழ்ந்து, கொதிக்கும் நீர்போல் கொப்பளித் தெழுந்து, வனத்திடை யணிபெற்றுச்செல்ல, சிறு நீர்த்திவலைத் தொகை வெண்புகை போன்றும் பனிபோன்றும் அவ்விடை போர்த்திடவும், அருகிலுள்ள குலமலர்த்தொகை யேந்திய புதல்களிலும் மரங்களிலும் படிந்த திவலைகள் மணிகள் போன்று மிளிர வும் பொலியும் நீர் வீழ்ச்சிகளையும், அவைகளை யொட்டி யுள்ள பரந்த பைம்புல் வெளிகளடங்கிய உலகின் பல பகுதி களிலுள்ள இயற்கைக் காட்சிகளையுங் கண்டு மகிழப் பலர் அகன்ற நிலப் பரப்புகளையும் கடல்களையுங் கடந்து செல் கின்றனர். இன்னும் எழிலவர் சிறுவெண்மூரல் போன்று மிளிரும் முத்தினங்கள், ஒளிரும் பலவண்ணம் போர்த்த மீன்கள், வண்டினங்கள், வண்ணப் பூச்சிகள், நிறமும் சாய லும் பீடும் மலிந்த அழகுடைய புள்ளினங்கள், மாவினங் கள் ஆகியவைகளில் மணக்கும் இயற்கை வனப்பைக் கண்டு மகிழாதார் யார்?

இக் கைபுனைந்தியற்றாக் கவின் பெரு வனப்பிற் சிறந்தது மாதருருவமே.[1] வரம்பிலாவழகுக்கு வரம்பாயது பெண்ணுரு என்றற்குப் போலும் பெண்களை மாதரென் பது. உருநலன் இயற்கைப் பொருள்களிடத்தும் உயிர்க ளிடத்தும் பலதிறப்படத் தோன்றினும் வடிவு, நிறம், ஒளி, சாயல் முதலிய பல வனப்பின் கொழுந்துகளும் பெண்மக

---

1 "It (Beauty) reaches its height in woman."
—R. M. Emerson.

ளிடத்தே மிகுந்து காணப்படுகின்றன. அந்நலனையொப்ப நலன்தானில்லை என்றால் [1]அதை உள்ளபடியே படத்தில் எழுதி அமைத்தலும் அருமையே.

## அகத்தினழகு

உள்ள உணர்ச்சிகளில் அன்பே சிறந்தது. பிள்ளைகளிடத்தும், பெற்றோரிடத்தும், துணைவரிடத்தும், தாழ்ந்தோரிடத்தும், மேலோரிடத்தும், கடவுளிடத்தும் எழும் உள்ளப் பரிவு பலதிறப் பட்டதாய்க் காணப்படினும் உணர்வு ஒன்றேயென்பதை நோக்கிப் போலும் அன்பென்றே வழங்குகின்றோம். பெரியோரிடத்தும் கடவுளிடத்தும் உள்ள அன்பின் சிறப்புத்தோன்ற அருளென்றுலும் "அன்பே கடவுள்" என்னும் உண்மைபற்றி அருளும் அன்பின் முதிர்வேயாம். பறவைகள் தங்கள் வயிறு நிறைத்தலைப் பொருட்படுத்தாது பார்ப்புகளுக்கு உணவு தேடிக் கொணரும் நேரம் போக எஞ்சிய பொழுதிற் பெரும்பாலும் அவைகளுடனுறைந்து கொஞ்சிக் குலாவுகின்றன; பசு முதலிய மாவினங்களும் தங்கள் கன்றுகளிடத்தில் அளவிலா ஆர்வம் காட்டி அவைகளைக் காக்கின்றன. இவையேயன்றி உயிர் கொன்று ஊனுண்டு கானிலுறையும் கொடிய விலங்கினங்களும் வல்லூறு போன்ற பறவைகளும் தங்கள் குருளைகளையுங் குஞ்சுகளையுஞ் சொல்லற்கரிய அன்போடு போற்றுகின்றன. [2] ஆக, அன்பும் அருளும் எல்லா உள்ளத்தும் இயற்கையாய் உள்ளன என்பதில் ஐயமில்லை.

---

1 "எழுதரு மெழிலாளே"—கம்பர் இராமாவதாரம்

"ஆதரித் தமுதில் கோல்தோய்த் தவயவ மமைக்குந் தன்மை
யாதெனத் திகைக்கு மல்லான் மதனற்கு மெழுத வொண்ணுச்
சீதையைத் தருத லாலே." —கம்பர் இராமாவதாரம்.

* *

2 "அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு." —திருக்குறள்.

இனி, துணையினிடத் தெழுமன்பு பறவையினிடத்தும் விலங்கினிடத்தும் பலதிறப்படக் காணப்படுகிறது. கோழி போன்ற பறவைகள் இணைவிழைச்சு வேண்டி ஒரு சேவல் பல கோழிகளோடு இணைந்து திரியும்; ஆனால் புறவினம் போன்றவை தந் துணை யொன்றுடனேயே உடனுறைந்து இன்பந் துய்த்து வாழ்கின்றன. இவைகளிற் சில, துணையை இழக்க நேரின் தனித்திருக்க ஆற்றாதனவாய் உயிரையும் விடும் பெற்றியன. [1] எனவே அன்பு உள்ளந்தோறும் நிற்கும் வரம்பற்ற இன்னிய லுணர்ச்சியே. மாவினங்களில் ஆடு, மாடு முதலியவைகளின் ஆண்கள் பல பெண்களைப் புணர்ந்து பிரியவும், புலியும் அதைப் போன்றவையும் தன் துணை ஒன்றுடனேயே கூடி வாழும் பெற்றியன. மக்களிடையும் அறிவு பொறிவா யழுங்க இணைவிழைச்சு வேண்டி ஒருவர் பலரைக்கூடிக் களிக்கும் இழிதகவும், அன்பு இயக்கப் பிறந்த காதல் வயப்பட்டுத் தந் துணைவர் ஒருவருடனேயே வாழ்ந்தின்புறும் உயர்தகவும் உண்டு.

---

[1] அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றா ரக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;

இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த உலவையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்
அன்புகொண் மடப்பெடை யசையிய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்
இன்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே;"

—கலித்தொகை, 11.

## எழில், நன்மையின் கனிவு

இப்படி உள்ளந்தோறும் அரும்பி ஒழுக்கத்திற் பொலியும் அன்பு அந்தணரிடத்தே சிறந்து மிகுந்து நிற்கின்றது. அன்பின் அழகு உள்ளத்தே துய்க்கப்படுவதன்றித் தகஎடுத்துரைக்கலாவதொன்றன்று. உருவழகையே கண்டு மகிழ்வதை யொட்டி அழகென்பது உருநலனையே பொதுவாகக் குறிப்பதொன்ருனலும், உள்ள நிகழ்ச்சியிலும் அழகுண்டென்பது ஒருதலே. என்னே? மக்களிற் சிறந்தோரை அழகிய தட்பமுடையவரென்று குறித்து அந்தணரென்று சொல்வது வழக்கன்ருே? அவர்கள் உள்ளத்தைத் திருவுள்ள மென்கின்ருேம். "அகத்தின் அழகு முகத்திற்றெரியும்" என்றதில், உள்ள நிகழ்ச்சியின் அழகை வெளிப்படையாக வழங்குவது பாராட்டத் தக்கதே.

எழிலென்பது செப்பத்தைக் குறித்தோவெனின் அது செப்பத்தைத் தன்னகத் தடக்கிய தொன்றென்றே கொள்ளலாம்: செப்பமென்பது தேன்கூடு போன்றதென்று கொள்ளின், எழில் தேன் நிறைந்த கூடுபோன்றதாகும்; நன்மையைச் சிறந்த வடிவுடைய முகமென்று வைத்துக்கொண்டால், எழிலென்பது காதல் மெய்ப்பாடு ததும்பும் அம்முகத்தை யொக்கும். பெற்ருேரும் உற்ருரும் கூடி ஆண்மகனேயும் பெண்மகளேயும் மணத்திற் கூட்டுவிப்பது நல்ல முறை யென்று கொண்டு அது வழக்கிலுள்ளதானுலும் அச் சேர்க்கைக்குரியாரும் காதற்றளேயிற் பிணிப்புண்டவர்களாயிருப்பின் அந்நன்னிகழ்ச்சி அழகு பொதிந்து கனியும் அம்மணமாமன்ருே? இன்னும் அம் மணம் ஐந்திணையொழுக்கை ஒட்டியதாயின் முற்றிலும் எழிலொழுக்காமன்ருே? இதனுனன்றே பொதுவாக முற்றிலும் உலக வழக்கிலில்லாவிடினும் இயற்கைப் போக்கை யொட்டிப் புலநெறி வழக்காய்ப் புலவர்கள் இலக்கியங்களில் அன்பினைந்திணையை ஓவியப்படுத்திக் காட்டுவதும்! இன்னும் அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் வறியோர்க்கீதலும் விருந்தினர்ப் பேணலும் போன்ற ஈதற்றெழிலாகிய அறம்

தன்னலம் கருதாது [1] அன்பாகிய உயிரால் இயக்கப்படின் அழகுடைத்தாமன்றோ? ஈவது, ஈவான் இம்மை மறுமைப் பயன் கருதிச் செய்யினும், தன் செயலுக்கு மிகக் குறைந்த அளவு செய்யினும், நற்செயலேயாமாயினும் ஊருணி போன்றும் ஊரிடைப் பயன் மரம் பழுத்தாற்போன்றும் பயன் கருதாதும் வரையாதும் கொடுக்கும் வள்ளியோர் செயலன்றோ அழகுடைத்தென்று கொண்டு செந்நாப் புலவர் பலரும் போற்றுவது! எனவே நலமென்பது நன்மையையும் அழகையும் குறிக்கு [2] மாயினும் அழகு நன்மையைத் தன்னிடத்தே அடக்கி நிற்பது என்க. அறவோர் எதையும் நன்மைக்கூறு பற்றியே நோக்குவர்; முனிவர் எவற்றுள்ளும் உண்மை நிலையையே பொருட்படுத்துவர்; புலவர்கள் எதையும் உண்மையின் பொலிவாகிய அழகுப் போக்கையொட்டியே நயப்பர். அறத்துறை கொண்ட சமயப் போக்குடைய இராம காதை, அகப்பொருட் சுவையும் புறப்பொருட் சுவையும் பொலிய வனப்புடைய 'இராமாவதாரம்' என்னும் இலக்கியமா யமைந்துள்ள பெற்றி கருதிப் பார்க்கத் தக்கது. சிலர் இந்நூலைச் சமய நோக்குடையவர்கள் பாராயணம் செய்வதற்குரியதாமென, மற்றவர் சிறந்த இலக்கியமாமென்பர். இரண்டும் உண்மையே. கோயிலொன்றில் நிற்கும் சிறந்த உருவச் சிலைகளமைந்த ஒரு கற்றூண், கட்டடத்தைத் தாங்கி நிற்கும் இயல்பை நோக்கத் தூணேயாயினும், அதன் உருநலனும் உண்மையே.

இலக்கியத்திற்குப் பொருளாவது அழகுறுத்தும் பொருளேயன்றோ? உள்ள நிகழ்ச்சிகளிற் சிறந்தது அன்பேயென்பதும் உண்மை. அன்பை அழகியற் கூறாகக் கொண்டு அகப்பொருளிலக்கியம் தோன்றிய மாண்புதான் என்னே! அகப்பொருள் புலநெறி வழக்காம். மற்ற இலக்கியப் பகுதிகளும் அவ்வாறேயாமெனினும் அகப்பொருள் புலநெறிவழக்

---

1 "அறத்தினுள் அன்புநீ." —பரிபாடல்: ௩: ௬௩-எ௬.

2 "The Beautiful is higher than the Good; The Beautiful includes in it the Good." —Goethe.

கென்பதில் ஒரு சிறப்புண்டு; தலைவன் தலைவியர் ஊரும் பெயரும் குறிக்கப்படாது, அவர் அன்பினைந்திணையில் ஆழ்ந்தொழுகும் காதலுள்ளம் மெய்ப்பாடுகளிலும் அன்புரைகளிலும் மற்ற ஒழுக்கங்களிலும் உருத்தெழுதலாகிய அழகைப் பல வனப்புமுற யாக்கப்பட்ட இலக்கியச் செழும்பொழிற் செறிவு முற்றிலும் அழகமுதின் உருவே யன்றோ! இத் தனிச் சிறப்புடைய அகப்பொருளெழிற் சோலையிற் படரும் மனம் எய்தும் இன்பத்திற் கவதியுண்டோ? என்னை? எழில் இன்பத்தின் உருவாகலின்.

## ஒழுக்க அழகு

இனி, அழகின் மற்றொரு கூறாகிய ஒழுக்கம் மெய்ப்பாட்டையும் தன்னகத்தடக்கும்; அகத்தினழகு முகத்திற் றோன்றுமாதலின் ஒழுக்கத்தைக் கொண்டே உள்ளத்தழகையும் காணலாகும். தண்பெயல் துய்த்துத் துகளகன்று, நறுமண வண்ண மலர்களேந்தி, மலைச்சாரல்களிலும் ஆற்றோரங்களிலும் சோலைகளிலும் தென்றலிலசைந்து நிற்கும் புதல், கொடி, மரங்களின் வனப்பும், இயற்கையாகவே உருநலனும் சாயலுமொருங்கே கொண்ட தோகை கார்காலத்தில் முகிற்றொகுதிகளைக் கண்டு தன் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கச் செருக்கி, கொடி போன்ற தன் கழுத்தைப் பின்னே வாங்கிச் சிறைகளைத் தாழவிட்டுத் தோகையை விரித்தாடும் வண்ணமும், இடைவிடாது தன் துணையோடு இணைந்து அன்பின் பெருக்கு ஒளிரும் தன் கண்களிற் றதும்ப அழகிய கழுத்தின் தூவி சிலிர்த்துப் பவழநிறக் குறுங்கால்களைச் சாயலொடு பெயர்த்துப் பெயர்த்து அசைந்தசைந்து செல்லும் புறவினத்தின் இயக்கச் செவ்வியும், மற்றுஞ் சில புள் தன் றுணை யகன்று சென்றாலும் பொறாது கூவியழைத்து அணுகும்போது அளாவி நாளெல்லாம் இசைத்துத் திரியும் போக்கும், மடநாகுடனுகச் செம்மாந்து செல்லும் மழவிடையின் பீடுடைக்

காட்சியும், உயிர்களின் உள்ளப் பண்பியக்க மலர்ந்த அழகுடை நிலையையும் போக்கையும் விளக்கி நின்றன. இனி யாதினும் சிறந்தது மடவாருரு என்பது கண்டோமன்றே? காதல் வயப்பட்ட அப் பெண்ணின் சாயலும், நடை யழகும், உள்ளத்திற் காதல் பொங்கப்பெற்றுப் புருவம் நெரிய மருண்டு நோக்கும் கண்களின் கூரிய கடை நஞ்சு மமுதுந் தோய்ந்த சரம் பெய்யவும் இதழ் கீறி இளநிலவுகாலும் முத்த முறுவல் பூத்தெழவும் தோன்றும் மெய்ப்பாடும் பிற மெய்ப்பாடுகளும் உள்ள நிகழ்ச்சிகளைத் தக வெளியிடும் அழகுடையன. இன்னும் அறத்திற் குயிராகிய அன்புக் களஞ்சியங்களாய்த் திகழும் நல்லியன் மாதர், இல்லறம் பண்பட ஒழுகும் இயல்பு உலகியற் செம்போக்குக்கு அடிப்படையாம். மற்றும், அன்பின் கனியாய அருள் மிக்க அந்தணர்ப் போக்கு மன்பதைகளைத் தேவர்களாக்கும் குறிப்புடையது. அன்பும் அருளும் இயக்க அமைந்த ஒழுக்கத்தின் சீர்மை என்னே! அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகும் கல்விக்குப் பயன் அறிவும், அறிவிற்குப் பயன் உயிரினு மோம்பப்படும் ஒழுக்கமுமாம். இப்பெற்றித்தாய ஒழுக்கத்தை அழகென்று உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் கூறுவர். ஒழுக்கம் வழுக்கியவனை நோக்கி 'இது உனக்கு அழகோ' என்று அறிவுறுத்தல் உலக வழக்கு; கல்வியிற் சிறந்த கம்பர் ஈவது விலக்க முயன்ற வெள்ளியின் இழிதகவை அழகன்றெனக் குறிப்பார் தன் இராமாவதாரத்தில்:—

> "எடுத்தொரு வருக்கொருவ ரீவதனின் முன்னந்
> தடுப்பது நினக்கிதழ கோதகவில் வெள்ளி."

என்று கூறியுள்ளது செய்யுள் வழக்கு. எனவே சீரிய அறவொழுக்கமும் அழகென்பது பெற்றாம். அழகிய தட்பமும் பலவேறு வகைப்பட்ட அறங்களெல்லாந் திரண்ட வடிவமும் உடையவர் எல்லாம் வல்ல கடவுளென்பார் திருவள்ளுவர் அவரை "அறவாழி யந்தணன்" என்றார். எனவே, அழகென்பது உள்ளத்தெழும் தகவுடை யுணர்ச்சியையும்,

மன்பதைகளிடையே சிரிய வொழுக்கங்களெனக் கருதப் படுபவைகளையும் குறிப்பதொன்றும்.

## அழகுணர்ச்சி

கண்டாரால் விரும்பப்படும் திருவெனப்படும் இவ் வெழிலின் வயப்படாதார் யாருமிலர். எனவே இவ்வெழி லுணர்ச்சி யாவரிடத்தும் உண்டென்பதுபற்றி அழகியல் யாவரிடத்தும் உள்ளதென்பது ஒருதலை. என்னை? இனம் இனத்தைச் சாரும் என்பதையும் அறிவை அறிவாலறிதல் வேண்டுமென்பதையும் போன்றே, எழிலுணர்ச்சி பற்றியே எழிலைத் துய்க்கக்கூடுமாதலானும் அதைப் போற்றுதவர் இலராதலினாலும் அழகியல் யாவரிடத்தும் உண்டென்று துணிதல் கூடும்.

ஆனால், எழில் விளக்கமும் எழிலுணர்ச்சியும் யாவ ரிடத்தும் ஒரு பெற்றித்தாகக் காணப்படவில்லை; பலரிடத் துக் குறைந்தும், சிலரிடத்து நிறைந்தும், அவரிடையும் ஒரு சிலரிடத்தே தனிச்சிறப் புடையனவாயுந் திகழ்கின்றன. செம்பட்டை மயிரும், பரந்த முகமும், தடித்த உதடுகளும், பருத்த விரல்களும், அகன்ற இடையும், இருண்ட நிறமு முடைய வேட்டுவப்பெண்கள்போன்றவர் வனத்திலேதிரிந்து தங்களுடம்பை அழகு செய்துகொள்ள உடலின் பெரும் பகுதியிலும் பச்சையிட்டெழுதி, பல வண்ணச் சங்கங் களையும் பவழம் பாசி முதலியவைகளையும் சாஞ்சரமாகக் கழுத்திலும் இடுப்பிலும் தோள்களிலும் கால்களிலுமணிந்து, பூங்கொத்துகளைத் தலையிலும் உடலிலும் சூடி, களித்த போது, தம் அழகுணர்ச்சிக் கேற்ப நிரம்பா எழில்பட நடித்தின்புறும் அவர் நிலையை, மின் றிரண்டனைய தேசுடை மேனியும், கறுத்தும் சுருண்டும் நீண்டும் நறுமண நெய்யூட் டிப் பின்னப்பெற்று நுனியில் குஞ்சமால மல்லிகைச் சரங் களின் இடையிடையே வண்ண மலர்களிமைக்கச் சூடிய பனிச்சையும், கூரிய கடைகளையுடைய மருண்டு நோக்கும்

பருத்த கண்களும், சிறிதே விரியும் செவ்விதழிடையே தோன்றும் தண்ணிலவெறிக்கும் நிரல் படுத்த முல்லையரும்பு போன்ற முறுவலும், வரையமைந்துருண்ட கழுத்தும், பவழப் பூணமைந்த மென்மையான பொற்பங்கெனை ஏந்திய இரு கொங்கைகளும், திரண்ட மெல்லிய தோள்களும், உருண்ட இறைகளும், சிறுத்து உருண்டு நீண்ட விரல்களும், தேய்ந்து நுடங்குமிடையும், அகன்ற அல்குலும், பொற்சிலம்பலம்பும் சிறிய சீரிய தளிரடிகளுமுடைய நல்லியலணங்கொருத்தியினுடம்பை மறைக்கும் புனைகலிங்கத்தையும் ஒளிரும் பலவணிகளையும் இகந்து சாயலொடு சிந்தும் வனப்பொடு ஒப்பிட்டுப் பேசவும் தகுமோ?

அழகுணர்ச்சி நாகரிகத்திற் சிறந்த மக்களிடையிலேயே சிறக்கப் போற்றப்படுவ தொன்றும். பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே நம் நாட்டில் அழகின் சிறப்பையும் அழகுணர்ச்சியின் மாண்பையு முணர்ந்த நம் முன்னோர் அழகுப் பயிற்சி யொன்றையும் வளர்த்து வந்த சிறப்பு வியக்கத் தக்கதே. [1] மாதவி ஏழாண்டுகள் ஆடலிலும் பாடலிலும் பயிற்சி பெற்றதோடு அழகுப் பயிற்சியும் பெற்றுத் தேறினாளென்று தெரிகிறது. [2] அக்காலத்திலேயே நம்மவர் தம்

---

1 "ஆடலும் பாடலு மழகு மென்றிக்
கூறிய மூன்றி னொன்று குறைபடாம
லேழாண் டியற்றி" —சிலப்பதிகாரம்—அரங்கேற்று.

2 "ஊடற் கோலமோ டிருந்தோ னுவப்பப்
பத்துத் துவரினு மைந்து விரையினு
முப்பத் திருவகை யோமா லிகையினு
மூறின நன்னீ ருரைத்தநெய் வாச
நாறிருங் கூந்த னலம்பெற வாட்டிப்
புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி
யலத்தக மூட்டிய வஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விர னல்லணி செறீஇப்
பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை
யரியகங் காலுக் கமைவுற வணிந்து

மழகை யணிபெறச் செய்யுந் திறத்தில் எத்துணை மேன்மை பெற்றிருந்தார்களென்பது இந்திர விழவு முடியுந் தறுவாயில் ஊடியிருந்த கோவலன் மகிழுமாறு மாதவி செய்து கொண்ட கோலத்தை நினைவுகூரிற் பெறப்படும். ஆனால், மாதவி கணிகை மாதுபற்றி அழகுப் பயிற்சிபெற்றுக்கோலஞ் செய்து கொள்வதில் சிறந்தவளாய்த் திகழ்ந்தாளென்று நினைக்கக்கூடும். அழகு செய்து கொள்வதில், அவள் வகுப்

(முன்பக்கத் தொடர்ச்சி)

குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்துப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகி னீர்மையி னுடீஇக்
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து
மத்தக மணியொடு வயிரங் கட்டிய
சித்திரச் சூடகஞ் செம்பொற் கைவளை
பரியகம் வால்வளை பவழப் பல்வளை
யரிமயிர் முன்கைக் கமைவுற வணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரங்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்செறி
காந்தண் மெல்விரல் கரப்ப வணிந்து
சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை
யங்கழுத் தகவயி னரமோ டணிந்து
கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்தாங்
கிந்திர நீலத் திடையிடை திரண்ட
சந்திர பாணி தகைபெறு கடிப்பிணை
யங்கா தகவயி னழகுற வணிந்து
தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம் புல்லகந் தொடர்ந்த தலைக்கணி
மையீ ரோதிக்கு மாண்புற வணிந்து
கூடலு மூடலுங் கோவலற் களித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியு ளிருந்தோள்."

—சிலப்பதிகாரம் - கடலாடுகாதை.

பினர் சிறந்த நோக்கமுடையவர்களென்பதும், மற்ற வகுப்புப் பெண்களில் பலரிடத்து அப் பழக்கம் அத்துணை இல்லையென்பதும் உண்மை. இதற்குக் காரணங்கள் பல உள. அவைகளை ஈண்டு ஆராய்தல் மிகை. மற்றும் கணிகையரொழிந்த மற்றவர்களிடையும் இப் பழக்கம் சிறக்கக் கடைப்பிடிப்பவர்களும் உண்டு;—

" மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
யரும்பெறற் பாவா யாருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ
தாழிருங் கூந்தற் றையால்"

எனத் தான் போற்றுமாறு அழகு மணக்க இருந்த கண்ணகிக்கு அணிகள் மிகையென்பான்,

" நறுமலர்க் கோதை நின்னலம் பாராட்டுநர்
மறுவின் மங்கல வணியே யன்றியும்
பிறிதணி யணியப் பெற்றதை யெவன்கொல் "

என்று கோவலன் சொல்லுகின்றானாயினும், இளங்கோவடிகள் அவ்வணிகளை விரித்துக் கூறிற்றிலரேனும் கண்ணகி சிறக்கக் கோலம் பூண்டிருந்தனளென்று தெரிகிறது. இன்னும்,

" நம்பியைக் காண நங்கைக் காயிர நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கு மன்ன தேயாம் "

எனவிருந்த இராமனுக்கும் சீதைக்குங்கூட வனப்புறக் கோலஞ் செய்த சிறப்பையும், கோலஞ் செய்தபின்

" கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்ந்துணும் வண்டுபோல
அஞ்சொற்கள் கிள்ளைக்கெல்லா மருளினா ளழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் தகைதடு மாறி நின்றார்
மஞ்சர்க்கு மாத ரார்க்கு மனமென்ப தொன்றே யன்றே."

எனவிருந்த சிதையின் நிலையும் நோக்கத்தக்கது. உயர்ந்தோர் அழகுணர்ச்சியைப் போற்றியே வந்திருக்கின்றனர்; இன்னும் போற்றுகின்றனர்; இனியும் போற்றுவர். மாதவியின் அழகுப் பயிற்சியையும் ஆடல் பாடல்களின் திறத்தையும் வழக்கையொட்டி முதலிற் கண்டு வியந்து போற்றியவன் அவளிருந்த நாட்டின் அரசனல்லனோ? மற்றும், நம் தெய்வங்களின் வடிவங்களை நம் பெரியார் அழகின் உருவங்களாகவன்றோ வரிவடிவிலும் படத்திலும் கல்லிலும் மற்றவைகளிலும் அமைத்துக் காட்டியுள்ளார்கள். இவ்வண்ணம் சிரியோரால் போற்றப்படும் எழிலுணர்ச்சி மாண்புடையதே. என்னை? உலகமென்ப துயர்ந்தோர் மேலதாகலின்.

## உருநல அமைப்பு

உருநலன், முகத்திலும் உடலிலுமுள்ள பகுதிகள் ஒன்றற்கொன்று தகுந்த அளவுடையனவாய் அமைந்து, தேசு ஒளிர, நற்போக்குடை யுள்ளத்தே தோன்றித் தம்மில் மலரும் நல்லுணர்வு தோய்வதாற் பொலியும் பண்பெனக் கொள்ளலாம். உருவழகு வடிவத்தில் மட்டும் நிற்பதொன்றென்று கூறுவதற்கில்லை. [1] நல்லுணர்வின் மலர்ச்சி உருவிலில்லையேல் அவ்வுரு எழிலுடைத்தென்று கூறுவதற்கில்லை. ஓடியாது சுருண்டு நிற்கும் கொடியின் போக்கைப்போலும், எங்கும் தட்டாதும் ஒடியாதும் ஏறியும் இறங்கியும் செல்லும் இசைப் போக்கைப் போன்றும் அழகுடை வடிவம் அமையும்; நீண்டு நுனி வளைந்த மூக்கு, கூன் முதுகு போன்றவை அழகைக் கெடுப்பனவாம். [2] தேசும் உரு

---

[1] "Beauty without grace is hook without the bait. Beauty without expression tires." —R. M. Emerson.

[2] "வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியில் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும்போனான்
மையோமரகதமோ மறிகடலோ மழைமுகிலோ!
ஐயோ விவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்."

—கம்பர் இராமாவதாரம்.

நலத்திற்கு இன்றியமையாததே. நல்லுணர்வு தெரிக்காத உருவம் எத்துணைக் கோலம் செய்யப்பெறினும் அழகு பெறாது. கோலம் பூண்ட விலைமாதர் வடிவினை உற்றுநோக்கின் இவ்வுண்மை விளங்கும். செய்ய வுள்ளப் பண்பு, சிறந்த அறிவின் ஆற்றல் ஆயவைகளின் மலிந்த மலர்ச்சி [1] உருநலன் நிறையாதவர்களிடத்தும் சிறந்த திருவாய்ப் பொலிகின்றது. அருள் நிறைந்த உள்ளமுடைய பெரியார் முகத்திற் பொங்கி வழியும் திரு சீரியதே.

## எழில் கண்டு உவக்கும் திறம்

இப் பெற்றித்தாய மாண்புடைய எழிலினை ஏற்பக் கண்டு துய்ப்பது செம்புலமும் பரந்த நோக்கமுமுடையார்க்கன்றி ஆவதொன்றன்று. சிறந்த வனப்புடைய இயற்கைக் காட்சிக் கணித்தே உறைபவரிற் பலர் அதன் மாட்சியை அறியார். ஆனால் எழில் கண்டுவக்கும் ஆற்றலுடையார் அவ்வியற்கை வனப்பின் மேன்மையைத் தாமும் உவந்து மற்றவர்க்கும் கட்டுரை, படம் முதலியவற்றால் அறிவிக்கப், பலர் அவ் வனப்பைத் துய்க்கும் ஆற்றலுடையவராகின்றனர். இரும்பைக் காந்தமே கவர்வது போன்றும், கற்றாரைக் கற்றாரே காமுறுவது போன்றும், அறிவையும் கடந்து நின்ற கடவுளின் எல்லையற்ற அருட் டெள்ளமுதைத் "தாகமதாய் நாடும்" அடியார்களின் அன்பே அடைந்து துய்க்கக் கூடுமாதல் போன்றும், [2] ஒரு துறையிற் சிறந்த ஆற்றலுடையாரை அப் போக்கில் மேம்பட்டாரே

---

[1] "உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து"
—திருக்குறள்.

"We love any forms, however ugly, from which great qualities shine. If Command, eloquence, art, or invention exist in the most deformed person, all the accidents that usually displease, please, and raise esteem and wonder higher." —R M. Emerson.

[2] "அறிந்தென்னை யாள்வார் தலந்தனில் வேறிலையே"
—கம்பர்.—கலைமகளந்தாதி.

அறிந்து ஆளக்கூடுந் தன்மைபோன்றும், சிறந்த எழி லுணர்ச்சியுடைய உள்ளத்தினரே எழிலைத் தக அறிந்து உவத்தல் கூடும். இளவேனிற் பருவத்தில் ஒருநாள் பகலவன் மறையுந் தறுவாயில் கவி இரவீந்திரர் கங்கையாற்றில் ஒரு படகின்மீது போய்க்கொண்டிருந்தார். மேலே தூங்கும் சில முகிற் கூட்டங்களும், தொலைவிலுள்ள நீலமால் வரை களும், ஆற்றின் இரு புறங்களிலுமுள்ள மலர்க் கொத்துக ளேந்திய புதல்களும், செந்தளிர்களும் செழும் பசும் இலைச் செறிவுகளுமேந்திய ஏனைய பல மரம் கொடி புதல்களும், இசையெனச் செல்லும் ஆற்றின் அலைகளும், மாலைச் செம் பொன்னொளியில் மிளிர்ந்துகொண்டிருக்கக் கண்டு இயற்கை வனப்பி லீடுபட்டிருந்த அப் பெரியார்முன் ஓர் உருநலனு டைய மீன், முத்தங்களெனத் தெறிக்கும் நீர்த்திவலைகளும் தன்னுருவும் பொன்னொளி கால நீரினின்றுந் துள்ளி மேலே யெழுந்து, மீண்டும் பொன் வெள்ளமென இயங்கும் நீரிடை மறைந்ததைக் கண்ணுற்று, தம்முணர்வு சிறிதே மயங்கி இன்பத்திலாழ்ந்திருக்க, அப் படகோட்டி 'எவ்வளவு பெரிய மீன்' என்று வியந்து சொன்னான். [1] மங்கிய எழிலுணர்ச்சி யுள்ள படகோட்டியின் இருண்ட மனவெளியைக் கடந்து நின்ற நிலவொளி போன்ற கவியரசரின் எழிலுணர்ச்சித் திறந்தான் என்னே! அறிவு ஒழுக்கங்களின் அழகைத் தகவுடையோரே அறிதல் கூடும்; அருங்கலைகளின் வனப்பு களை அன்னவைகளை அறியும் பெற்றியுடையாரே ஆராய்ந்து மகிழ்ந்து எடுத்துரைக்கும் ஆற்றலுடையவராவர்.

---

1 "இருவே றுலகத் தியற்கை; திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு." —திருக்குறள்.

## உண்மையின் மலர்ச்சியும் போக்கும்

உண்மையின் மலர்ச்சி, முனிவர்களின் மெய்யுணர்வாலன்றி உணரலாகாத [1]ஆன்மவெளியில் [2]போத வடிவாயும், இயற்கையை யொட்டி மேம்பட்ட புலவர்களால் துய்க்கப்பெறும் [3]அறிவு வெளியில் அறிவு ஓவியங்களாயும், அறவோர் கண்டு இன்புறற்பாலதாய் [4]அறவெளியில் அறவாழியந்தணன் வடிவாயும் [5]பூதவெளியிற் பொறிகளிற் சிறந்த கண் காது ஆகியவைகளைக் கொண்டு உணரப்பெறும் நல்லியல் வடிவு, ஒலி, ஒளி ஆகியவைகளில் மணக்கும் எழிலாயும் தோற்றுவதாகும். அதன் போக்கு, நடுவிற்பட்ட அதிர்ச்சி திரைந்து மலரும் நீர் நிலையின் பரப்புப் போன்று தோற்றுவதாகும். அது பருவத்திற் கேற்ப மாறி மாறிப் பொங்கிப் பொலியும். பூஞ்செடிகளும் கொடிகளும் செவ்விக்கேற்ப மலர் பூத்தும் பொன்றியும் மீண்டும் பூத்தும் இருப்ப, குலமணி நிறங்களுடைய பகலவன் கதிர்கள் அலைகளெனத் திரைந்து செல்கின்றன; காலம் கங்குல் பகலெனவும், கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனிலெனவும் மாறிமாறி அலையிற் செல்லும்; காதல் உவகையிற் பூத்தும் ஊடலிற் சிறிது மறைந்தும் மாறிமாறி யெழுந்தெழுந்து இயங்குகின்றது; காப்பியம் முதலிய நூல்களில் பாட்டின் சந்தமும் பொருட் செறிவும் ஏறியும் இறங்கியும் படர்கின்றன; மாதருரு இருண்ட முகிலென மலிந்த கூந்தலிடை வெண்மதியெனப் பொலியும் முகமும் [6]உருண்டு பருத்த மென்கொங்கைகளேந்திச் சிறிதகன்ற ஆகத்தைத் தாங்கி மிக ஒடுங்கிய இடையும் அவ்விடையைத் தாங்கிய அகன்ற

---

[1] Spiritual plane.

[2] "போதவுருவாகி யெங்கும் பொதிந்த விந்து நாதமும்"

—கம்பர். — கலைமகளந்தாதி.

[3] Mental plane. [4] Moral plane. [5] Material plane.

[6] "The graceful bend, and the voluptuous swell:
Let these describe the undescribable."

—Lord Byron.

அல்குலும் கொண்டு பூங்கொடிபோன்ற சொல்லொணுத நல னெடு பொலியும். இப்படி மாறி மாறிப் பொங்கித் தளிர்க்கும் வனப்பின் இயல்பால் புதுமை ஏற்படுகின்றது. ஊடலின் பின் நேரும் கூடல் இதுபற்றியே விருந்தாகும். பழகப் பழகப் பாலும் புளிக்குமென்பது பழமொழி. இவ் வுண்மை பற்றியே ஊடலின்றிக் காதல் சிறவாததாகும்; ஊடல் பற்றியே நீண்ட காலமும் காதலரிடையுள்ள அன்பு விருந்தமுதென நயக்கப்படுவதாம். எழிலுறுத்துவதிற் றலை சிறந்தவைகளாய காப்பியம் நாடகம் முதலருங்கலைகள் இப் போக்கையொட்டியே பலகால் பழகினும் குன்ருச் சுவை யுடைய விருந்தாகி இன்பமளிக்கும் மாண்பினவாம்.

## எழில் இன்னதேன்பது

இவ்வனப்பு இப்பெற்றித்தாயது, இவ்விக் கூறுகளில் நிற்குமியல்புடையதென்று தெற்றெனக் கூறலாவதொன் றன்று. எனினும் எழில் மலருமுண்மை என்று கொள்வது இழுக்காகாது. உண்மை என்பதை உள் + மை யென்று கொண்டு உள்ளத்தின் (அகத்தின்) தன்மையென்றும், உண்மை என்பதைச் சத்து எனக்கொண்டு முதலும்முடிவும் இல்லாத எங்கும் தங்கியிருக்கும் இறையின் தன்மை யென் றும் கொள்ளலாம்; [1]கரு உருவாகும் போக்கென்றும் கொள்ளலாம். எண்ணிலாத விண்மீன்களும், வெண்மதி யும் தண்ணிலவு கால்கின்றன; வலம்புரி முத்தும் குல மணித் தொகையும் வண்ணவொளி மிளிர்கின்றன; பருவத் திற் கேற்பவும் தத்தம் தனித்தன்மைக் கேற்பவும் செடி கொடி வகைகள் வளர்ந்து செழித்துப் பல்லுருவாய மருமலர் களைச் சொரிகின்றன; உள்ளத்தே நிறைந்த உவகை பொங்கி மணிப் பறவைகளின் வாய் வழியே இசையென வழிகின்றது; உள்ளப்பண்பு இன்னியல் மாதர் முகத்திலும்

---

1 "The beautiful is a manifestation of secret Laws of Nature, which but for this appearance had been for ever concealed from us" —Goethe.

உடம்பிலும் எழில் மணக்கும் மெய்ப்பாடுகளாய் மலர்கின்றது; உள்ளத்தின் பெற்றிகள் அவைகளின் கூறுகளாய மணம், ஒளி, இசை, சுவை, உரு வடிவுகளாக மலர்கின்றன: [1]உள்ளத்திலாத பண்பு வெளியில் மணப்பதில்லை. இவ்வண்ணமான எல்லா வனப்பும் போர்த்த இவ்வையமும் தத்துவங் கடந்து நிற்கும் உள்ளமாய இறைவனை முதலாகக் கொண்ட ஆக்கவியலின் உருவே. [2]எனவே இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் மிளிர்கின்ற வனப்பும் இறைவன் அருளொளியின் அமுதப் பண்பேயாம். [3]தூய உள்ளம் இவ்வுண்மை வெளியிலே ஆழ்ந்து கிடக்க அதிலிருந்து அவ்வுண்மையின் அருள் மணக்கும் இன்னியல் வனப்புகளமைந்த பல பாக்கள் மலர்கின்றன. இறைவன் மலரடிகளே பொருளென்று தம் மனத்தை அத்திருவிலேயே வைத்த பெரியார்களின் உள்ளத்தூறிய உவகைகள் அவ்வுள்ளத்தையு மிகந்து உலகம் தன் சென்னியிலேந்திப் போற்றும் இனிமை வாய்ந்த அழகுடைப் பாக்களாய் மலர்கின்றன.

## எழில் மலரும் தன்மை

எழில் பருவத்திற் கேற்ப மலரும். இயற்கை வனப்பு, இளவேனில், கார் ஆகிய காலங்களில் பொலிந்து மணக்கின்றது. இப்படிப் பொங்கும் வனப்பின் தோற்றம் பிற பருவங்களில் மங்குகின்றது. மாதர் நலன், மங்கை மடந்தைப் பருவங்களிலேயே மலிந்து காணப்படுகின்றது. எனவே எழிலுக்கும் தோற்றமும் மறைவும் உண்டுகொல்

1 "வெறும்பானை பொங்குமோ மேல்"—ஔவையார் நல்வழி.

2 "Life of my life, I shall ever try to keep my body pure, knowing that thy living touch is upon all my limbs" —Dr. Tagore's Gitanjali

3 "It is a man's sincerity and depth of vision that makes him a poet. See deep enough, and you see musically; the heart of nature being everywhere music, if you can only reach it" —Carlyle.

என்ற ஐயம் பிறத்தல் கூடும். தத்துவங்களின் கட்டி லமைந்த பருப்பொருள்களாய உடம்பு முதலிய பொருள் கள் தோற்றம், அழிவு முதலிய பல மாறுதலடையும் போக்கையுடையன. அத்தன்மையுடைய பொருள்களோடு எழிலும் தோன்றியும் நைந்தும் மறையுமென்று கொள்ளு தல் ஏற்புடைத்தன்று. ஒரு நீர்த் திவலையில் கதிரவன் ஒளி வனப்பொடு மிளிர்கின்றதென்றால் அத் திவலை மறைந்த போது அதனில் மிளிர்ந்த ஒளியும் தனிப்படக் காணப்படா விடினும் அதனோடு மறையவில்லை. இறைவனருள் நனி விளங்கிய உள்ளமுடையவர் உடம்பொடு இறைவன் அரு ளும் மறைந்திலது. எனவே எழிலும் இறைவன் அருட் பிழம்பின் ஒளியே; அது என்றுமுள்ளது. ஆனால், அது விளக்கமாகும் பொருள்கள் தோன்றியும் பல மாறுபா டெய்தியும் மறையக் கூடியன வெனினும், அது அவைக ளோடு தோன்றி மறையாது என்றும் நிலவுவதாகும்.

ஆக்கவியலின் தோற்றம் அண்டமென்றும், அண்டம் எழிலுடைத் தென்றும் கண்டோம். ஆனால், இவ் வையம் பொதுவாக எழிலுடைய தொன்றானும் அதன் பரப்பி லும் கொடிய நச்சுடைப் பாம்புகள் போன்ற ஊர்வனவும், வல்லூறு போன்ற பறவைகளும், புலி முதலிய கொடிய மிருகங்களும், முதலை போன்ற நீர் வாழ்வனவும் உள்ளன வென்றால் இத் தோற்றத்திற்குக் காரணமாய் உண்மையில் சற்று இழிதகவும் உண்டோ? எனில், இல்லை யென்றே துணிதல் கூடும். எழில் நிரம்பாதனவாய அவை தனிப்பட நோக்கிய போதே இன்னவுருவுகளாய்த் தோற்றுவன வன்றி, வையத்தின் ஒரு கூறாகப் பரந்த நோக்குடன் நோக் கின் அவ்வின்னல் தோற்றாது. பாவொன்றை யாக்கும் போது இடையிடையே சில சொற்களை நீட்டியும் குறுக்கி யும் வலித்தும் மெலித்தும் பல விகாரம் படச் செய்யுளின் வனப்புக்கேற்பச் செய்கின்றோமென்றால், விகாரமென்பது விகாரமடைந்த சொற்களில்மட்டில் நின்றதன்றிச் செய்யுளின் முழுவனப்பிற் றோன்றுவதொன்றன்றாதலோடு அச்செய்யு ளின் வனப்புக்கு அவ்விகாரம் இன்றியமையாத தொன்று

மாம். இன்னும் இலக்கியத்திற்குப் பொருளாவது எழி லுறுத்தும் பொருளே யென்று முன்னே குறித்தாம். அவலச் சுவையும் இலக்கியச் சுவையறிவார் மனத்தில் இனிமையின் வடிவாய எழிலைத் தோன்றச் செய்யுமெனின் அவலமும் இலக்கியத்தில் ஏற்றவிடத்தில் இன்றியமையாத தொன்றேயாம். இவை போன்றே இன்னலுருவாய் உலகிற் காணப்படும் சில, உலகின் வனப்புக்கும் உலக வாழ்வின் வனப்புடைப் போக்குக்கும் வேண்டுவனவேயாம். [1] அல்ல தூஉம், பரப்பிலே மனம் திரிய அறிவு புலன் வழிச்சென்று உண்மையை மறந்து, அயர்ந்து இன்னலுறுதவாறு இறை யின் தன்மையை யுணர்த்தி அறவழி (எழில் வழி) யுய்த்தற்குமாம்.

## அழகின் கவர்ச்சி

[2] கண்டார் மனத்தைக் கவரும் பெற்றியால் அழகு திருவெனப்படும். வண்ணமும் மணமுமுடைய உருமலர் களால் வெகு தொலைவிலுள்ள் வண்டினங்களும் தும்பி களும் கவரப்படுகின்றன; வண்ணமும் தேசும் சாயலும் பொலிவும் உரு நலனுமுடைய தந்துணையின் அழகிலீடு பட்டுப் புள்ளினங்கள் நாளெல்லாம் களித்து இசைத்துத் திரிகின்றன. எழிலுடைப் பல பொருள்களும் பல்லுயிர்க ளும், மாண்புடை யுருநலன், திருவருள், தெய்வப் புலமை ஆகிய இவைகள் மலரும் மக்களுடலங்களும், ஆக்கவியலின்

---

1. "When desire blinds the mind with delusion and dust, O Thou Holy One, Thou wakeful, come with thy light and thy thunder." —Dr. Tagore's Gitanjali.

2. "திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்க மென்றது அழகு. இஃதென்சொல்லியவாறோவெனின், யாவ னொருவன் யாதொரு பொருளைக் கண்டானோ அக் கண்டவற்கு அப்பொருண்மேற் சென்ற விருப்பத்தோடே கூடிய வழகு. அதன் மேலவற்கு விருப்பஞ் சேறல் அதனிற் சிறந்த வுருவும் நலனும் ஒளியும் எவ்வகையானும் பிறிதொன்றிற் கில்லாமையால், திருவென்பது அழகுக்கே பெயராயிற்று." —திருக்கோவையார் உரை.

கொழுந்தெனத்திகழும் கவி முதலருங்கலைகளும், திருவுறை யும் கோயில்களேயாம். அறிஞர்கள் பெண்மகளின் சிறந்த திருவினை யுணர்ந்தே அவ்வுருவினைப் பற்றிப் பேசும் போதெல்லாம் மனக்கனிவோடு சித்திரித்துக் காட்டியுள்ள னர். தமிழிலக்கியங்களில் மாதருருவின் ஒரு பகுதியு மொருவாது ஓவியப்படுத்திக் காட்டும் வழக்குண்டு. எனவே அல்குலையும் போற்றி யெழுதுவதுண்டு. மேனாட் டுப் போக்கை யொட்டியவர் இவ்வழக்கை அசப்பியமென்று இழித்துப் பேசுவதும் உண்டு. அன்னார் தமிழரின் எழி லுணர்ச்சியின் மாண்பை யறியாதவர்களேயாவர். அல்கு லென்றபோதே அறிவு பொறிவயப்படுமென்ற குறுகிய நோக்கம் வேண்டுவதில்லை. அழகிலீடுபட்டு அதன் மாண்பும் கடவுட்டன்மையு முணர்ந்தார்க்கு அசப்பிய மென்ற அக்கருத்தே அசப்பியமென்று தோன்றும். கலை மகளின் அருளைக் கொள்ளைகொண்ட கம்பர் அவ்வம்மை யார் உருநலனைத் தம் அந்தாதியில் தம் ஆர்வத்திற்கேற்பச் சிறக்கப் புனைந்துரைத்திருக்கும் கோலத்தையும் அதனிடை [1]அத்தெய்வத்தின் அல்குல் உள்ளிட்ட எல்லா உறுப்பு களையும் ஓவியப் படுத்திக் காட்டியிருக்கும் வனப்பையு முணர்ந்த அறிவுடையோர் அதனை அசப்பியமென்றே கொள்வார்கள்? இனியும் துறவிகளா யிருந்து கடவுளின் அனுபூதி பெற்ற பெரியார்களும் இவ் வழக்கை யொட்டிப் பாடியுள்ளார்களென்றால் இதன் சிறப்பு இனியும் விளங்கா திருக்கக் கூடுமோ? மற்றும் திரு ஆண்டாள் தாம் பெண் ணாகவிருந்தும் தம் திருப்பாவையில்,—

"புற்றர வல்குற் புனமயிலே"

என்று கூறுவார்களேயானால் இவ்வழக்கு அழகின் மாண் பில் ஈடுபட்டதன் பொருட்டு ஏற்பட்ட தென்று யாவரும்

---

1 "சரோருக மேதிருக் கோயிலுங் கைகளுந் தாளிணையு
முரோருக முந்திரு வல்குலு நாபியு மோங்கிருள்போற்
சிரோருகஞ் சூழ்ந்த வதனமு நாட்டமுஞ் சேயிதழு"
மொரோருக மீரரை மாத்திரை யான வுரைமகட்கே
—கம்பர் கலைமகளந்தாதி.

ஒப்புக் கொள்வ ரென்பது திண்ணம். உலகின் பல நாடுகளிலும் பெண்ணுருவின் திருவில் ஈடுபடாதார் இல்லை. பொறியுணர்வின் வாய்ப்பட்டு ஆடவர் பெண்ணலனை விரும்புவதன்றி, அழகின் தனித்த சிறப்பால் பெண்ணழகைப் பெண்களே கண்டு அதனால் கவரப்படுகின்றனரென்றால் அதன் திருவின் மாண்பு சிறந்ததன்றோ? [1]சீதாபிராட்டியின் சிறந்த அழகால் அவரைச் சுற்றியிருந்த பெண்டிரெல்லாங் கூடக் கவரப்பட்டிருந்தனரென்று கம்பர் கூறுகிறார். [2]இன்னும், புலன்வழி யறிவு செல்லப் புலானுண்டும் காமத் தழுந்தியு மிருந்த சூர்ப்பனகையும் அன்னாரின் அழகைக் கண்டு மகிழ்ந்து பெண்ணாகிய தனக்கே அவ்வழகின் திரு அவ்வழியாயிற்றென்றால் ஆடவர்க்கென்னாமென்று போற்றியதாகவும் கம்பர் கூறுகின்றார். பல நாட்டுச் சரித்திரங்களிலும் பெண்ணழகை மகிழ்ந்து ஒழுக்கம் வழுக்கி அவ்வழகுடைய உடம்பை நயந்து கவரப் போர்கள் நிகழ்ந்தனவாகக் காணக்கிடக்கின்றன. பதுமினி யணங்கின் பொருட்டுச் சித்தூரிலும், எலன் மடவரல் பொருட்டுத் [3]தாயிலும் பெரும் போர்கள் நடந்தன. கிளிபத்திரையின் வனப்பின்

---

1 "கஞ்சத்துக் களிக்கு மின்றேன் கவர்ந்துணும் வண்டு போல
அஞ்சொற்கள் கிள்ளைச் செல்லா மருளினா ளழகை மாந்தித்
தஞ்சொற்கள் குழறித் தத்தந் தகைதடு மாறி நின்றார்
மஞ்சர்க்கு மாத ரார்க்கு மனமென்ப தொன்றே யன்றோ."

"இழைகுலா முலையி னாளை யிடையுவா மதியி னோக்கி
மழைகுலா வோதி நல்லார் களிமயக் குற்று நின்றார்,
உழைகுலா நயனத் தார்மாட் டொன்றொன்றேவிரும்பற்கொத்த
தழகெலா மொருங்கே கண்டால் யாவரே யாற்ற வல்லார்."

—கம்பர் இராமாவதாரம்.

2 "பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை யில்லையா மென்று நின்றாள்
கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி னஃதே கண்—
பெண்பிறந் தேனுக் கென்றா லென்படும் பிறருக் கென்றாள்."

—கம்பர் இராமாவதாரம்,

3 Troy.

வயப்பட்டுச் சீசரும் அந்தோணியும் தத்தங் கடமைகளை மறந்து அவளுடன் சிற்சில காலம் அயர்ந்து உறைந்தன ரென்று தெரிகின்றது. இவைபோன்ற செயல்கள் ஒழுக் கத்தின்பாற் படாவெனினும் திருவின் ஆற்றலை யுணர்த்தி நின்றன. அழகின் ஆற்றலை யுணர்ந்தே பெண்களி லிழிதக வுடையோர் ஆடவரை வயப்படுத்தத் தங்களைக் கோலஞ் செய்துகொள்வர். காமத்துழல்பவரையே அக் கோலம் வணக்குமல்லால் [1]அது அழகாகாது. என்னை? அது போலி அழகாதலால். அன்னவர் கோலஞ்செய்து கொள் ளல் இழிந்த நோக்கத்தோடாதலின் அந் நோக்கத்திற் கேற்பவே மெய்ப்பாடும் உண்டன்றே? அதை உற்று நோக்கின் கோலத்திற்கும் முகம் நவில் போக்குக்கும் வேற்றுமை தோன்றப் போலி யழகு புலனும். அழகை விரும்பும் பலர் அவ்வழகுடைப் பொருள்களையும், அழ குடையவர்களையும் தமக்கென்று விழைந்து அழகொழிந்த மறவொழுக்கின்பாற் படுவர். [2] உயர்தகவுடைய ஒருசிலரும் அயர்ந்தபோது வழுக்கி இழியச் செய்வதொன்றும் இவ் வழகின் ஆற்றல். ஆனால் பொருள்களையும் உயிர்களையும் விழையாமலே அவைகளிற் பொலியும் உண்மையின் அழகுச் சுடரை மகிழக் கூடும். செடியிலிருக்கும் மலரைக் கொய் யாதபடியே மலரின் அழகைக் கண்டு மகிழக்கூடும்; அவ் வண்ணமே பெண்ணின் உடலை விழையாதவாறே என் பெண்ணழகைக் கண்டு உவக்கக்கூடாது? இதனுனன்றே திருக்கோயிலில் பெண்களைக் காமத்தோடு நோக்கக்கூடா தென்று பெரியோர் கூறுவதும்? இப் போக்கு, கோயிலோடு

---

[1] "The true Beautiful, which however, I have said somewhere differs from the false, as Heaven does from Vauxhall!" —T. Carlyle.

[2] "But in the intervals of inspiration, and they may be frequent, without being durable, a poet becomes a man, and is abandoned to the sudden reflux of the influences under which others habitually live."

—Shelley.

நிற்காமல் மற்ற விடங்களிலும் மேற்கொள்ள வேண்டுவதே. சிறு குழந்தைகள் எப்பொருள் தம் கையிலகப்பட்டாலும் வாயிற்பெய்துவப்பர். அது போன்றே பலர் அழகுடைப் பொருள்களைக் காமத்தோடு நோக்கித் தம் வயப்படுத்த எண்ணுவர். காலை மாலைகளிலும் மதியுடை இரவிலும் இயற்கைக் காட்சியை, அக் காட்சியளிக்கும் பொருள்களைத் தம் வயப்படுத்தாமலே பலரும் மகிழவில்லையா? அது போன்றே என் எழிலுடைப் பொருள்களையெல்லாம் உவத்தலாகாது? [1]பெண்ணுருவின் திருவாற்றலைத் தக நயவார் வழுக்கி இழிதகவுற்றுத் தம்மழகைக் கெடுத்துக் கொள்ளாதிருக்கவும் உலக வாழ்வு அழகு சிறந்து திகழும் பொருட்டுமன்றோ திருவள்ளுவப் பெருமான் பிறர்மனை நயத்தலைக் கடிந்து உயர்தகவுடைய மற்றவரைச் சிறந்த வீரரென்று கூறினர்! இனி, காமம் தம் மனத்தே அரும்பப் பெறாத சிறு பருவத்தே பலரும் அழகுடையவர்களைக் கண்டு மகிழவில்லையா? மற்றவரும் பிள்ளைகளிடத்தும், உடன் பிறந்தோரிடத்தும் தாய்மாரிடத்தும் விளங்கும் அழகைக் கண்டு உவக்கவில்லையா? அழகு பொறியுணர்வைக் கடந்ததொன்றேயாம். சுவைக்கும் ஆற்றலுடைய நாவிற்கெட்டாத பாலின் வெண்மை போன்றே அழகு, அதனையுடைய பொருள்களை யறியும் பொறிகளை இகந்து நிற்கும் பண்புடையது. விரும்பத்தகும் பண்பும் செல்வமு முடையவையென்று கோயில் முதலியவைகளையும், அன்னவைகளையுடையரென்று மக்களையும் குறிக்கும்போது திருவென்று முன்னே வைப்பது, அழகின் திறத்தையும் மாண்பையு முணர்ந்து எவற்றினும் அதனைப் போற்றும் தமிழ் மக்களின் பெற்றியை யுணர்த்தாநின்றது.

---

1 "அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதைய ரில்."

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு." —திருக்குறள்.

கண்டாரால் விரும்பப்படும் அழகின் ஆற்றலை யுணர்ந்த நம் முன்னோர், கடவுளின்பால் அன்பு நிரம்பப் பெறுதவர்களும் அழகாற் கவரப்பட்டுத் திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுதலால் அன்பு மிகும் பொருட்டும், தாம் சிறந்தவைகளாகக் கருதிய பொருள்களைக் கடவுளுக்கு உரிமையாக்கும் பொருட்டும் போலும் அழகிற் சிறந்தவைகளும் உலகம் தந்த பெறற்கரும் பேறுகளுமாகிய அருங்கலைகளைத் திருக்கோயில்களிற் போற்றினர். சிற்பத்திறன் மலிந்த உருவங்கள் நிறைந்த கோபுரங்களும் மண்டபங்களுங் கொண்ட கோயிலை மலர் மாலைகள் முதலியவற்றாற் புனைந்து, தூபம் வெளியெலாம் கமழவும், பல்லியம் முழங்கவும், தீவட்டி முதலியவைகள் இருளைச் சிதைக்கவும், அன்பு ததும்பும் மலர்முகத்தோடு சுற்றிலுமிருக்கும் மக்களினிடையே பலவணிகள் நிலவு கால மின்னற்கொடி போன்ற ஒருத்தி அழகுபட நடிப்பதைக் கண்டபோது, பொருளை நசைந்தும் பல இன்னல்களை நினைந்தும் துயரத்தழுந்திக் கிடக்கும் மனம் பொருளை யிகந்து நிற்கும் திருவிலீடுபட்டு நின்று கடவுள்பா லன்புகொண்டு இன்புறுதற்கேற்ற செவ்வியடைகின்றது. நாட்டியம் திருக்கோயில்களிற் போற்ற வேண்டுவதன்றென்று ஒதுக்கப்பட்டு வழக்காறொழிந்ததற்குக் காரணம் இங்கு ஆராய வேண்டுவதொன்றன்று. ஆயினும் அது அக் கலையின் குற்றமன்றென்பது திண்ணம். திருக்கோயில்களில் நாட்டியமொழிந்த இந்நாளிலும், சிதைந்தவை யொழிய எஞ்சிய கோயில்களில், சிற்பத்திறன் மலிந்த உருவங்களை யணியும் அழகுப் பயிற்சியும், நாதசுரம் போன்ற நல்லிசையும் போற்றப்படுகின்றன.

திருக்கோயில்களில் கடவுளின்பால் அன்பை வளர்த்தற் கேதுவாய் நிற்பன அருங்கலைகள். கடவுளருளிய அறிவால் அவனைக் கருதி, அவன் நல்கிய அன்பைக் கொண்டே அவனை நினைந்து வழிபடுதல் போலவே, அவ்வன்பு தழைத்தற்குச் சார்பாய் நிற்கும் அருங்கலைகளும் அவனை முதலாகக் கொண்ட ஆக்க வியற்பெருங் கோயிற் சிகரியின் றலைநின்ற பொற்கலசங்களேயாம். தெய்வங்க

ளின் குணங்களைக் குறிக்கும் உருவச்சிலைகளை வைத்துப் பூசனை செய்கிறவர்கள், அவ்வுருவச் சிலைகள் இருப்பதற்கும், ஆங்குத் தெய்வங்களை நினைந்து பரவ வருபவர்களுக்கு வசதியாய் இருக்கும் பொருட்டும் திருக்கோயில்களைக் கோபுரங்களும் ஏனைய பகுதிகளிலுள்ள சிற்ப வேலையமைந்த உருவங்களுமின்றி ஏன் அமைத்தலாகாது? இன்னும் தெய்வ உருவங்களை, கண்டோர் கண்களையும் மனங்களையுங் கவரும்படி ஏன் புனைதல் வேண்டும்? ஆங்குக் கேட்போர் மனத்தை மகிழச்செய்யும் நல்லியங்களை முழங்கச் செய்வதேன்? இன்னும் ஆண்டு நம் முன்னோர்கள் ஆடல் பாடல் அழகு என்ற இம் மூன்று அருங்கலைகளிற் றேர்ந்த பூங்கொடி போன்ற நல்லியன் மாதரை நடிக்கச் செய்ததேன்? எண்ணரிய உயிர்களிற் சிறந்த மக்களுக்கெனச் சிறப்பாயுள்ள ஆறுவதறிவே களனாகவும் தத்துவங் கடந்து நின்ற அந்தணன் அருள் மணக்கவும் அரும்பி மலரும் சிற்பம், இசை, நாடகம் முதலிய அருங்கலைகளைத் தெய்வங்களுக் குரிமையாக்கிப் பூசனை செய்யவும், அக் கலைகளில் மணக்கும் சிறந்த எழிற்றன்மையில் மகிழ்ந்து பொருட் பற்றொழிந்து நிற்கும் மனம் தன்னை மறந்து தெய்வத் திருவின் அருள் வெள்ளத்திலே ஆழ்ந்து கிடத்தற்குமாம். பிற கலைகளைப்போல் கவி முதலிய அருங்கலைகள் பொருட் பயனைக் கருதி யுண்டானவையல்ல. இவ்வருங்கலைகள், ஆக்க வியலே புலவர்கள், தச்சர், ஓவர் ஆகிய அருங்கலைஞர் அறிவிற்றமைப்ப, மொழி, கல், அமுது முதலியவைகளைக் கொண்டு உருவானவை; கதிரவன் ஒளி விரிந்து அழகொடு மிளிருவதற்கு ஒரு நீர்த்திவலை எப்படி களனாகின்றதோ அவ்வாறே மொழி முதலியனவும் ஆக்கவியலின் விளக்கத்திற்குக் களன்களாக அமைவனவாம். ஆனால், ஒரு நந்தன வனத்தின் மண், நீர், காற்று முதலியவற்றிலுள்ள ஓரே பெற்றித்தான உணவுகளை உட்கொண்டு அவ்வனத்தின் பல வகைச் செடி கொடிகள் எப்படிப் பலவேறு வண்ணமும் உருவும், மணமுமுள்ள மலர்களைச் சொரிகின்றனவோ அவ் வண்ணமே ஆக்கவியலுங்கூடப் புலவர்கள் முதலிய அருங்

கலைஞரின் அறிவு, கல்வி, தனித்தன்மை முதலியவற்றிற் கேற்பப் பலதிறப்பட்ட பா முதலியவைகளாய் மலரும். [1]இறைவனுடைய ஆக்கற்றொழிலும் பயன் கருதாத எல்லை யற்ற மகிழ்ச்சியாலுண்டான விளையாட்டின் பொருட்டே யெழுந்ததென்று பெரியோர் கூறுவர். அவ்வாக்கற்றொழிற் கொழுந்துகளே பாமுதலிய அருங்கலைகள். எனவே அன்னவைகளின் வண்ணத்திலாழ்ந்த உள்ளம் அவைகளுக்கு முதலாகிய யாவையுங் கடந்து நிற்கும் உண்மையை யடைதற்கேற்ற செவ்வியடைகின்றது. உலகிற் காணப்படும் இயற்கை வனப்பின் சிகையே பா, சிற்பம் முதலிய அருங்கலைகளிற் றோன்றி நின்றதென்பது ஒருதலை. என்னை? பிற உயிர்களினும் மேம்பட்டு நிற்கும் மக்களுக்குச் சிறப்பாகிய அறிவிலே இறையின் அருள் மணக்க மலர்ந்த ஆக்கத்தின் எழில், பிறவற்றிற் றோன்றும் அழகின் சிகை யென்பதே.

## வடிவும் உள்ளப்போக்கும்

இப்படிஎழிலாய் மலர்ந்துநிற்பது இயற்கையின் உள்ளே நின்ற பண்பே யென்பது கண்டோம். ஆங்கில நல்லிசைப் புலவர் கீட்டு [2] "மெய்ம்மையே அழகு, அழகே மெய்ம்மை; உலகில் அறியலாவதும் அறியவேண்டுவதும் இதுவே" என்று கூறியுள்ளார். அவர் கூற்று நல்லியற்கையே அழகு அழகே நல்லியற்கை யென்று குறித்ததாகக் கொள்வது இழுக்காகாது. ஆனல் உருநலனுடைய ஒருவர் உள்ளப் பெற்றியும் அவ்வண்ணமே யமைந்திருக்குமோ வென்று

---

[1] "உலகம் யாவையுந் தாமுள வாக்கலு
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
வலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே."

—கம்பர் இராமாவதாரம்.

[2] "Beauty is Truth, Truth Beauty,—that is all ye know on earth, and all ye need to know." —Keats.

ஐயுறுதற் கிடமுண்டு. [1] உருவியற்கலை, வடிவ வேறு பாட்டை யொட்டி மக்களின் குணங்களையும் வாழ்க்கையில் அவர்கள் எய்தக்கூடும் நலன்களையும் கூறும். நம்முன்னோர் இக் கலையிற் றேர்ச்சி பெற்றிருந்தனர். இன்றுங்கூட நம்மவர் தக்க மணப் பிள்ளையையும் பெண்ணையும் தேர்வார் கர்ன பரம்பரையில் தாங்கள் இக்கலையை யறிந்த வண்ணமே பயன் படுத்துகின்றனர். இது இவ்வாறாகவும், அவ்வப்போது உள்ளத்தெழும் உள்ள நிகழ்ச்சி, மெய்ப்பாடு ஒழுக்கம் ஆகியவற்றிலேயே கண்டறிதல் கூடும். உயிர்களின் எழிலை இருகூறாக நோக்கலாம்: ஒன்று மன்னுமெழில்; மற்றொன்று பொங்குமெழில். மன்னுமெழில் என்பது வடிவு, நிலைத்த பண்பு ஆகியவைகளின் நலம் எனவும், பொங்கு மெழில் என்பது உள்ள நிகழ்ச்சிக்கேற்பஅவ்வடிவில் அரும்பி மலரும் மெய்ப்பாடும் ஒழுக்கமுமெனவும் கொள்ளலாம். எனவே உருநலனுடைய ஒருவர் போக்கு அதற்கு மாறுபாடாகவே காணப்படுகிறதென்று கொள்ளின், உருவியற் பண்பைச் செவ்வனே தெரிந்து நோக்காத குறையினாலோ, அல்லது மெய்ப்பாடறியும் ஆற்றல் போதாத குறையினாலோ அவர் போக்கு உள்ளபடி அறியக் கூடாமற் போயிற்றென்று கொள்ளலாம். உயிர்களின் குணம் அவைகளின் இயற் கைக்கு மாறான சார்புகளோடு இணங்க நேரின் மாறக் கூடு மாதலின் அவைகளின் போக்கையறிதற்கு அன்னவைகளின் சார்புகளையும் நோக்குதல் வேண்டும். ஆதலின் தோற்றத் திற்கும் உள்ளப் பண்புக்கும் பொருத்தமில்லையென்று கொள்ளுவதற்கில்லை.

---

[1] சாமுத்திரிகம்.

"இலங்கெழிலளவு குணமென உரைப்பர்"—நைடதம்.

"உயர்ந்த மூக்கொடு கடையகல் விழியினை யுடைய
நயந்த விம்முக மேதுவி னவைக்கிட னுகா
தியைந்த மானுடர் கரிபரி பசுக்களி னியல்பு
வயந்த வாதவவ் வடிவொடு பொருந்துதல் வழக்கே."

— மண்ணியல் சிறுதேர்.

"அழகியாரின் குணங்களும் பெரும்பான்மையும் அழகிய"

—இறையனார் அகப்பொருள் உரை.

இயற்கை நலன் திரண்டு உருவாகி, இறைவன் உள்ளத்திற் பொங்கும் உவகை இயக்கக் கூத்தாடுவன போன்று மிளிர்ந்து திரியும் விண்மீன்களிலும், கோள்களிலும், பாரின் பல இயற்கைப் பொருள்களிலும், உயிர்களிலும் பருவந்தோறும் மீண்டும் மீண்டும் பொங்கி வழியும் செவ்வியாம் இறைவன் அருள் மணக்கும் ஆக்கவியல் நலமாகிய எழில், ஒன்றேயாம். இதன் கூறு பொருள்களிற் றோன்றிடப் புலன்களைக் கொண்டு உணரப்படினும், இது அப் பொருள்களோடு கெட்டு அழியாது [1]என்றும் நிலவும் பெற்றியுடையது; தெய்வத் தன்மையுடையது. வனப்புடைய பாக்கள் இறைவன் அருளொடு மலர்ந்தவை யென்று பல நாட்டினரும் கருதி அவைகளைப் போற்றுகின்றனர். கடவுளை முருகெனக் கண்டு, காதலித்து வணங்கும் போக்கு, போற்றத் தக்கதே. அழகுக்கு எல்லையில்லை: [2]அழகுடையவைகளையும் அழகுடையவர்களையும் கண்டார்க்கு, உருவகப்படுத்தக் கூடும் ஏற்றத் தாழ்ச்சியுடைய ஆற்றலின் வரம்பலாது எழிலுக்கு வரம்பில்லை.

## நூலின் அமைப்பு

பருவத்தே பாரின் உள்ளம் பொங்கி யெழுந்து கொம்புகளையும் கொடிகளையும் திமிர்ந்து அரும்பிய மலர்களெனவும், களிப்பு மிக உள்ளம் வீங்கி வண்ணப் பறவைகளின் வாய்களிற் பொங்கிய அரிய இசைகளெனவும் சாயல்மிக்க மயிலின் மன்னுமெழில் கிழியப் பொலியும் நடன மெனவும், நல்லிசைப் புலவன் அறிவைத் திமிர்ந்தெழும் இயற்பாவெனவும், இசைப் புலவன் தொண்டையை யிகந்தெழும் இசைப்பாட்டெனவும், அருஞ்சீர்

---

[1] "ஐயோவிவன் வடிவென்பதோர்
ழியாவழ குடையான்" —கம்பர் இராமவதாரம்.

[2] "பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லால்
எண்பிறங் கழகிற் கெல்லை யில்லையா மென்று நின்றாள்"
—கம்பர் இராமவதாரம்.

பொங்கும் கூத்தியின் நிறை கிழியப் பொங்கும் மெய்ப் பாடும் நடனமுமெனவும், அண்டங்களும் அவை நிறைந்த பொருள்களும் பல்லுயிரும் பொலிய முருகொடு பொங்கி உண்மையின் அருள் மணக்க மலரும் ஆக்க வியலின் நலனைக் கூறும் இப்பாவில், அவ்வெழிலின் பண்பு, பொருள் களிலும் உயிர்களிலும் தோன்றும் அதன் வண்ணத்தைக் கொண்டே பெரும்பாலும் அறியலாவதையொட்டி, முறையே பாரின் உருநலன் நன்கு புலப்படாது மேன் மேலும் இருள் வீங்காநிற்கும் அந்தி வேளையில், மேலே மலரவிருக்கும் அதன் நலன் இருளில் மறைந்து பையில் கருப்போன்றிருக்கும் தோற்றத்தொடு துவங்கி, பின்னர் விண்மீன்கள் மலரவும் மதிதோன்றவும் காணப்படும் இவ்வுல கின் காட்சியும், அதன்பின், வைகறையில் உணர்வு மலரத் துயில் நீத்தெழும் உயிர்கள் இயற்கை நலங்களுக்கிடையே இயங்கும் பரிசும், பொழுது புலரும்போது நானிலத்தின் தோற்றமும், காலையில் முனிவர் வனத்திடை வைகும் பெற் றியும், செல்வம் சிறந்து நலன்பொலியும் நகரத்தின் காட்சி யும், திருக்கோயிலுக்குச் சிறுரொடு கூடிச் செல்லும் மாத ரின் பொற்பும், திருக்கோயிலின் வண்ணமும், கல்லூரியில் மக்கள் அருங்கலைகள் கற்றலும், அருங்கலைத்திறனும், கோயி லில் அமைச்சர் முதலியோர் சூழவிருக்கும் அரசன் போக் குப், அந்தப்புரத்தில் வைகும் அரசியின் சீரும், அன்னவள் அரசனுக்குத் துணைவியா யமைந்ததன் நலமும், சிறுர் விளையாட்டும், மாலை நேரத்தில் அமைந்த இயற்கைத் தோற் றத்திடைக் கடவுள் மாட்டும் துணைவர் மாட்டும் கனிந்து பெருகும் அன்பிற்றாழ்வார் தாழ, எஞ்சியோர் கண்டமும் அரங்கும் அடைய, ஆங்குநிகழும் இசைப்பாட்டின் திறமும், நிருத்தத்தின் வண்ணமும் கூறி, அழகு ததும்பும் அரு ளுள்ளத்தின் மேன்மையும் எழில் வடிவின் கவர்ச்சியும் மெய்ப்பாடுகள் அரும்பிப் பொலியும் பொற்பும், அற வொழுக்கத்தின் சீரும், இயற்கை வனப்பின் வளர்ச்சி யாகிய அருங்கலைகளின் மாண்பும் சிறிது குறித்துள்ளேம். நாள்தோறும் உள்ளமும் வடிவும் ஒழுக்கமும் மீண்டும்

மீண்டும் பொலியும் போக்கு, பொதுவாக இது போன்றதே யாம். எனினும் [1] துணையொடு மகிழ்தல் இளமைச் செவ் விக் கேற்றது போன்றும், நன்மை கடைப்பிடிக்கக் கூடும் அன்பானகன்ற உள்ளத்தே அரும்பி நாளொடு வளர்ந்த அந்தண்மை மணக்க மலரும் [2] முனிவர்ப்போக்கு முது மைப் பருவத்திற்குச் சிறப்பாயது போன்றும், முல்லை நிலத்தில் அந்தி வேளையில் வானத்தே முகிற்குருகுதிகள் உறைசிந்திப் படரவும், முல்லை மரமல்லி முதலியவை மலர வும், வாடைவீசவும், வெளியே பகலெல்லாம் திரிந்துகொண் டிருந்த புள்ளும் மாவுந் துணைகளை அணவி இருக்கை சேர வும் கண்ட மாதர் தங் கணவர் வரவை நசைந்து எதிர் நோக்குதலாகிய [3] முல்லைத்திணை கார்ப் பருவத்திற்கு ஏற் றதுபோன்றும், இயற்கைத் தோற்றமும் ஒழுக்கமும் பருவந் தோறும் சிறிது மாற்றமடையு மியல்பின வெனினும், அப் படி மாறுபடத் தோன்றினும் தன் மன்னும் நலன் மாறாது செம்மையுள்ளத்தும் வடிவிலும் ஒழுக்கிலும் மலரும் எழி லின்றிறத்தை ஒரு கோவைப்படுத்தி யமைக்கும் நோக்கத் தோடு மாறித்தோன்றும் பொங்குமெழிற்றிறனை அமையு மளவு கொண்டு யாக்கப் பெற்றுள்ளது இப் பா.

சே. முத்துவீராசாமி.
15-3-44.

---

1 "உடன் கழிக்கில் இளமை இனிது" —ஐங்குறு. 42:5.
"வறியவ னிளமைபோல்" —கலித்தொகை, 10:1.

2 "வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
........................
துனியில் காட்சி முனிவர்" —திருமுருகாற்றுப்படை.

3 "கல்லேர் புறவில் கவினிப் புதல்மிசை
முல்லை தளவொடு போதுஅவிழ—எல்லி
அலைவற்று விட்டன்று வானமும்; உண்கண்
முலைவற்று விட்டன்று நீர்." —ஐந்திணை எழுபது - 74.

# எழில்

## வாழ்த்து

உலகவை மலர்தரு தீஞ்சுவை மலிகலை
உலவைக ளலர்ந்திடுஞ் செவ்வியின் மலரன
உலர்தலி னலத்தன வாக்கிய கலைமகள்
உலவெழின் மலரடி சூடினன் தலைமிசை.

## வேறு

ஆக்கியன் முதலதா யலகில் வானவண்
போக்கிய லுலகெலாஞ் செறிந்து மீதுற
நீக்கமி லெழிலதாய்ச் சுடரு முண்மையை
மீக்கதழ் பரிவொடு நினைந்து போற்றுவாம்.

## வணக்கம்

அளித்தது வண்புவி பொங்கு பேரெழி
றிளைத்தன முள்ளமுங் கொண்ட வோகையிற்
களித்தனந் தந்தனங் கச்சி யூர்வயி
னிளித்திலர் மாண்பின ரென்னும் பான்மையின்.

---

உலகவை - உலகங்கள்; உலகங்களாகிய கிளைகளில் கலைகளாகிய மலர்கள் நிறைய இனிதாக மலர்ந்துள்ளன. அவை வாடாத நலத்தன; அங்ஙனம் விளங்கும் கலைமகளின் எழிலினைப் போற்றுகின்றனன் என்று இச்செய்யுள் வாழ்த்தும் வணக்கமும் வருபொருளும் உரைத்தபடி. உலவைகள் - கிளைகள். உலவு எழில் - விளங்கும் எழில். அவ்வெழிலுருவே திருவடி என உருவகமாக வந்தது.

ஆக்கியல் - சத்தி. முதலதாய் - ஆக்கியலுக்கு முதலதாய இறை; முதலதாய்ச் சுடரும் உண்மையை என்று கூட்டிக் கொள்க. போக்கியல் - சுழன்று திரிதலையுடைய. மீக்கதழ் பரிவொடு - மேலான விரைந்த வேட்கையோடு.

ஓகை - மகிழ்ச்சி. உலகு அளித்த எழில் கண்டு ஓகையிற் றிளைத்துக் களித்துத் தந்தனம் என்றபடி. காஞ்சீபுரம் என்னும் கச்சியம்பதியில் இந்நூல் இயற்றப்பட்டதாகலின், கச்சியூர்வயின் தந்தனம் என்றார். இளித்திலர் மாண்பினர் என்னும் பான்மையின் தந்தனம் என்க.

## நூல்

1 முருகமர் மாமலைக் குலமு மல்செறி
திருவரு கானமு மணிநீர்ப் பாழியு
முருமலர்க் கோடுறு மூருஞ் சேர்புவி
வருநலன் வீங்கிருண் மறைய வைகுமால்.

2 விளைபயிர் மிடறுறை மணிசே ரேனலி
னொளியிய றளைபட வுலத்தே காசென
விளவெயில் விரிமணி வளைகீண் டில்லதி
னளிர்நில வெரிநகை யிதழ்கீ றில்லதின்.

3 அணிநடைச் செறிபொருட் கவியா முன்னமு
மணியிதழ் வருமிசை யூழ்க்குஞ் சிந்தையுந்
திணியெழின் மனங்கவர் நடஞ்செ யுள்ளமு
மிணரெழி லோவியம் பொடிக்கு மெண்ணமும்.

---

1. முருகு - அழகு. முருகு அமர் - சேயோன் மேவிய; (தொல் - பொருள். ரு.). திரு - கவர்ச்சி; மாயோள் என்னும் மாயோன். மணி - நீலமணி; இது தன்னியல்பில் நீல நிறத்தை யுணர்த்தல், "மணிநிற மஞ்ஞை" (சிலப்) என்பதனாலுங் காண்க. குறிஞ்சி முதலிய நானிலங்களும் இச்செய்யுளில் நுவலப்பட்டன. குறிஞ்சிக்குச் சேயோனும் முல்லைக்கு மாயோனும் உரைக்கப்பட்டமை கொண்டு, ஏனை நெய்தல் மருத நிலங்கட்கும் முறையே வருணனும் இந்திரனும் தெய்வமாகக் குறிப்பின் அமைந்தன வென்க. தோற்றத்தின் முதல்நிலை இருள்நிலை யாதலால், இச் செய்யுளின் இறுதியடியில் புவி இருளின்கண் மறைய வைகுமெனத் தோற்றுவாய் செய்துகொள்ளப்பட்டது.

2. இச் செய்யுள்முதல் மூன்று செய்யுட்கள், இருளில் உலகம் மறைந்து கிடக்கும் நிலை, சில உவமைகள் வாயிலான் விளக்கப்படுகின்றது. என - என்னும்படி. இயல் - தன்மை. தளைபட - புறம் பரவாது அடங்கிக்கிடக்க. உலம் - கல்; மாணிக்க முதலியன. வெயில் - ஒளி. மணிவளை கீண்டில்லதின் - முத்து சங்கைக் கீறி வெளிப்பட்டிலதென; முத்தாகிய மணிகளைச் சங்கு ஈன்றில தென்னும்படி. நகை - பல்.

3. அணிநடை சொற்சுவை. செறிபொருள் - பொருட்சுவை. "செறுத்த செய்யுள்" என்பது புறநானூறு. முன்னம், கவியுள் உறையுந் தொனிப்பொருள்; இத் தொனிப்பொருளே ஈண்டு உவமை. ஊழ்க்கும் - மலரும். பொடிக்கும் - அரும்பும்,

4 இன்னன மனவெளி மறைந்து நின்றென
பொன்முகை முரலளி யிசையோர்ப் புள்ளினம்
துன்றிடு வேனிலும் பனியிற் றெக்கென
என்றிவை நிகர்க்குமா லிருளின் மண்ணரோ.

5 வேணவா வுந்திட வெழுந்த வோகையி
ஞணிகந் தெழுமிள வாணகை யொட்பமோ!
காணலாங் குறியிடைத் தலைவ னென்றுன
வாணகை படரிகந் தலருஞ் செவ்வியோ!

6 அளவிடா வுலகினி னியல்பு காணுவான்
வளமிலாக் கருத்துக ணிலவும் பெற்றியோ!
அளிநிற மலர்த்தொகை தோய்ந்த புல்வெளி
ஒளிநுத லெழிலவர் திரியும் பொற்பதோ!

7 மறைவபல் லூழிசே ரிருண்ட நீளிடை
நிறைமணி நூற்குலா மிளிருந் தன்மையோ!
பிறைநுதன் மலர்விழி யளவில் வாணகைக்
கறையறு பாவைமா ரிலஞ்சி தோய்கையோ!

---

4. நின்றென - நின்றதென. முரல்அளி - ஒலிக்கும் வண்டு.

5. வேணவா - வேட்கையவா (தொல்). ஓகையின் - மகிழ்ச்சியால். குறியிடை - குறியிடத்து. உன - உன்ன; கருத. நகை - மகிழ்ச்சி. படர் - துன்பம். இதுமுதல் ஐந்து செய்யுட்களால், இருளில் மறைந்துள்ள உலகத்துக்குச் சிறிது விளக்கமுண்டாகும்படி வானில் விண்மீன்கள் பூத்தல் சில உவமைகளால் விளக்கப்படுகின்றது.

6. காணுவான் - காணும் பொருட்டு. வளமிலாக் கருத்துகள் என்றார், ஒளிவளமில்லாத விண்மீன்கட்கு உவமையாதலின். அளி - மென்மை; இங்கே கவர்ச்சிதரும் என்னும் பொருட்டு. புல்வெளி - விண்ணுக்கு உவமை.

7. மறைவ - மறைவனவான. நீளிடை என்றது இங்கே நீண்ட காலத்தை. மணிநூற் குலாம் - அழகிய புத்தகத் திரள்; இங்கே அவற்றின் கருத்துக்களை உணர்த்தும். இலஞ்சி - பொய்கை.

8 அமைதியின் வெளியிடை விடியற் காலையி
லிமைகொளும் பறவைக ளிசைக டைத்தலோ!
கமையுறு பெருங்கவி மனத்தி னெண்ணிட
வமைவரு நினைவுகள் சுடர்ந்து பொங்கலோ!

9 யாதரோ பொருவுமென் றுள்ள மார்ந்தெழ
மீதுவான் கருவெளி செறியு மல்லிறச்
சீதமா லொளிசுடர் மீன்கண் மாக்குழு
தாதுலாங் கயிரவஞ் சிரிக்கப் பூத்ததே.

வேறு

10 அமைதர விருட்கட விருவெளி மீனின
மிமைபொரச் சிதைந்தத விருளென மேவிடு
மமைதிவன் கடலுறுங் கருவெளி துய்த்துணர்
வமைவரு மொருநலப் பெருவெளி மானுமே.

11 சூழ்தரு முடுத்திர ளிடைவரு மதியரோ
தாழ்பரு நிறைபரத் திறல்கனி திவலைகள்
வீழ்தரப் பரந்துடன் வெளியிடை நிறைந்திடக்
கேழ்மிளி ரளியின மொய்த்தநற் காட்சியின்:

---

8. தைத்தலோ - பிணித்தலோ; வெளியிடைத் தருவி வருதலோவென்க. கமை - பொறுமை. மனத்தின் - மனத்தில். அமைவரு நினைவுகள் என்றார், அடங்காது மேன்மேல் எழுந்து வரும் நினைவுகள் என்றற்கு.

9. யாதரோ - அரோ அசை. கருவெளி - நீல வெளி. விண் மீனொளியாதலின் சீதமால் என்புழி மால் மங்குதலையுடைய என்னும் பொருட்டு. கயிரவம் - ஆம்பல்; பூத்தது என்றார், குழு என்னும் ஒருமை கருதி.

10. அ விருளென - அவ்விருளென.

11. உடு - விண்மீன். அரோ - அசை. தாழ்பரு நிறைபரத்து இறல் - தொங்குகின்ற பருத்த நிறைந்த மேலிடத்துள்ள தேன்கூடு. அளியினம் - வண்டுக் கூட்டங்கள். திவலைகள் நிலவின் கதிர் கட்கும், அளியினம் உடுத்திரளுக்கும் உவமை,

12 அணியுடைப் பலபொரு டிகழ்தரத் தோய்ந்திடப்
பிணைபடு மொழுங்கொடு மிடனறிந் தணிகொள
விணர்க்கவித் தொகைபல பெயர்ந்திட வுள்ளுறை
பணிகொளு மிறைதனி நடுவுறும் பெற்றியின்:

13 விரும்பினர் கலைபயின் மாணவ ரவையிடை
பெரும்புலப் பண்ணவன் தோன்றிடு தகவினின்:
அரும்பிய நலத்தவர் கூடிய பண்ணையிற்
றிருந்தெழி லிறைமகண் மேவிடு செவ்வியின்:

## வேறு

14 உற்றனர் தேவர் வேந்தர் முற்றிய வாசை யுந்தக்
கற்றையிற் கதிர்கள் சிந்து மெற்றிற மணிகள் சான்ற
நற்றொழி னீலக் கோயில் பொற்றவி சமர்ந்து கன்ற
விற்பணி வீம னையை பொற்பினளிடைபேரொப்பின்:

---

12. திகழ்தர - திகழ்ந்து. பிணைபடும் - தொடர்புபடும். பெயர்ந்திட - எழுந்து தோன்றிட. உள்ளுறை என்றது இங்கே பாட்டின் அடிப்படையான கருத்து. உள்ளுறையாகிய இறை. நடுவுறும் பெற்றியின் என்க. பணி, ஏவலும் அணிகலனும். உள்ளுறைக் கருத்துக்கு ஏனைக் கருத்துக்கள் வாய்ப்பாக அடங்கி அணி கொள்ளுதலால் இங்ஙனம் ஏவலும் அணிகளும் என இரட்டுற உரைத்துக் கொள்ளப் படும்.

13. விரும்பினர்-விரும்பினராய். பண்ணவன் - ஈண்டு ஆசிரியன். நலத்தவர் அழகினையுடைய மகளிர்; என்றது தோழியர். பண்ணை - விளையாடுமிடம். இறைமகள் - தலைமகள்.

14. உற்றனர் - வந்து. எல் திறம் - ஒளித்திறம். கன்ற|- வேட்கை வெப்பத்தாற் கன்ற. விற்பணி - விற்றொழிலையுடைய வீமனெனும் வேந்தன் ; இனி ஒளிமிக்க அணிகலன்கள் என இரட்டுற உரைத்து ஐயைக்குங் கூட்டப்படும். ஐயை - என்றது அவன் மகள் தமயந்தி. தேவரும் வேந்தரும் உற்றுத் தவிசமர்ந்து கன்ற வீமன் ஐயை இடை வந்தென்ன வென்க. பேர் - பேர்தல் ; பெயர்ந்து வருதல்.

15 பெருந்தகை வேந்தர் வேந்தன்
திருவுடை கூல மக்கள்
விரும்பிய விஞ்சை மாக்கள்
விருந்தமை யெழிலின் பண்ணை
பெருந்தொகை யின்பத் தாழ
வருங்கலைப் பட்டி னத்தின்
திருந்தணி யரங்கி னல்லாண்
மாதவி நுழைந்த பண்பின்:

16 வானுறு சினைகள் பொங்குங்
கதிரிணர் மாவி னீழன்
மீனகக் கொள்ளை வெள்வீ
மல்லிகை முகைத்துச் சிந்தப்
பானகு மேனி மஞ்ஞை
நுசுப்படி யொசியுங் கோல
மானகு நோக்கு நங்கை
சகுந்தலை நடந்த பொற்பின்:

---

15. வேந்தர் வேந்தன் - இங்கே கரிகால் வளவன். விஞ்சை மாக்கள் - கலைஞர்; வித்தியாதரர்; உலகினருமாம். எழிலின் பண்ணை என்றது, நாடகம் என்னும் பொருட்டு. இனி, விருந்தமை எழிலின் பண்ணை என்பதற்கு விருந்தென உவத்தற்குரிய எழிலேந்திய மாதர் கூட்டம் என மற்றொரு பொருளும் உரைத்து நாடகத்துக்கு மாதர் வருகையுங் கூறிக்கொள்க. பட்டினத்தின் - காவிரிப்பூம்பட்டினத்தில் விளங்கிய. அரங்கில் - நாடக அரங்கில் என்க. பட்டினத்தை யொத்த சிறப்புமிக்க அரங்கின் நல்லாளான மாதவி எனினுமாம். பட்டினம் இங்குக் காவிரிப்பூம்பட்டினமாதலின், அருங்கலை என்னும் அடைமொழி கரிகால் வளவனது காலத்தின் செழுமை தோன்ற நின்றது.

16. கதிரிணர் - கதிர்கள் போன்ற பூங்கொத்துகள். வீ - மலர். பால் நகுமேனி - பால்போல் விளங்கிய மேனி; இதனால் உடம்பின் நிறம் பெறப்பட்டது. மேனியும் கோலமும் நோக்குமுடைய நங்கையாகிய சகுந்தலை மாவின் நீழல் நடந்த பொற்பின் என்க.

17 வண்மையி லளிக்க நாறும்
வெண்கதிர் பம்பிப் பொங்கி
விண்ணுறு சிகர மேந்து
நீலமால் வரையின் கூட்டம்,
மண்ணுறு சிகரி துன்று
மூர், வனம், பரந்த பௌவ
மொண்கதிர்க் கணங்க ளாழ
நிலவெரி நல்கித் தோன்றும்.

## வேறு

18 அந்தரந் தூங்கிடுஞ்
செறிவியன் மழைக்குலஞ்
சிந்திடுந் தூவுறை
யினமணி நிறத்தொளி
பம்பிட மேனிவந்
திருவிசும் புறவெழு
மம்முடிச் சீதவெண்
பனியருச் சிகரிகள்.

---

17. வண்மையில் - வண்மைப் பண்பினால். நாறும் - தோன்றுகின்ற. பம்பி - பரவி. மண்ணுறு சிகரி துன்றும் ஊர் என்றது-ஒப்பனை மிக்க கோபுரங்கள் பல இடையே விளங்கும் மருத நிலத்து ஊர்கள் என்க. வனம் - காடு; என்றது முல்லை நிலத்தை. ஒண்கதிர்க்கணம் - விண்மீன் கூட்டம். வரையின் கூட்டமும், ஊரும், காடும், பௌவமும், விண்மீன்களும் ஆழ என்க. இச்செய்யுள் வரையில் நிலவொளி மலர்ந்தமை நுவலப்பட்டது.

18. தூங்கிடும் - அசைந்திடும். மழைக்குலம் - மேகத்திரள். உறை, மணியொளி பம்பிட என்க. பம்பிட - நிறைந்து விளங்கவும் சிகரி-மலை முகடுகள். சிகரிகள் இரு விசும்புற எழும் என்பது.

19 நகுபளிங் கெனவின விளவெயில் கான்றிட
மிகுபனி வெளியிடைப் பரவொளி நைந்திட
வுகுபனிப் புனலிடை சுதையெனத் தங்கிடத்
தொகுமது படுமுறை பொரும்பனிக் கட்டிகள்,

20 களபமென் புனல்படு முடுக்குல மதிநிழ
லொளிபடக் கால்பொர வழுங்குவ மிதந்திடக்
களிமிகச் சுதைக்கடல் படிந்தன ரகன்றில
ரளவறத் திளைத்தன ருழந்தன ரொத்தவே.

21 வாலமால் நிலவொளி தங்குமா வெளிக்கடல்
நீலமால் வரைக்குலம் விலங்கிய பண்பரோ
கோலமான் மதமலைக் குலம்பல நயந்தன
சாலமாத் தடங்குடைந் தயர்ந்ததை மானுமே.

---

19. நகுபளிங்கு - விளங்குகின்ற பளிங்கு. வெயில் என்றது ஈண்டுப் பனிக்கட்டிகளின் ஒளி. கான்றிட - ஒளிர. பரவொளி நைந்திட - பரவு ஒளி மங்கிடவும். உகு பனிப் புனல் - சொரிகின்ற பனிநீர். உறைபொரும் பனிக்கட்டிகள் என்க. பனிக்கட்டிகள், திளைத்தனர் உழந்தனர் ஒத்த என்று, வருஞ் செய்யுளோடு முடிக்க.

20. என் - என்று கருதப்படுகின்ற. கால்பொர-காற்று அலைக்க. அழுங்குவ மிதந்திட - அசைந்து மிதந்திடுதலால்.

21. வாலமால் - தூய மிகுந்த. தங்கும் மாவெளிக் கடல் என்க. விலங்கிய - குறுக்கிட்டுக் கிடந்து விளங்கிய. மதமலை யென்றது யானை ; மதமலைக் குலம் - யானைத்திரள். நயந்தன - விரும்பினவாய் ; தடங்குடைதற்கு விரும்பினவாய் என்பது. வரைக்குலம் விலங்கிய பண்பு நயந்தனவாய் அயர்ந்ததை மானும் என்க.

22 மிடைவன மரச்சினை, யுகுபனி மலர்த்தொகை,
யிடையிடைத் துவன்றிடப் பசும்புதற் பெருவெளி
கடலென வலைசரி நிலவொளி யணிந்திட
யிடுநறுஞ் சிதச்சுண்ணம் புனைந்தென விலகுமால்.

23 துளித்தது கத்திகை மதுவென வருவிகள்
தெளித்தன சிகரம் சரிகிழித் திழிவன;
வளித்திற லசைவன நிழல்சிதை நிலவொளி
யளித்துணர் தாங்கின கலுழிகள் விரைவன.

24 கோடுறு பசும்புதல், புனல்படு சினைத்தொகை,
யேடுறு துறுநனை, மதுபடு கனிவகை,
பாடுறு பொழிலிடை, பசும்பயிர்ப் பெருவெளி,
யூடுற வருபுனல் வளநில வணிந்தவே.

---

22. பனிமலர்த் தொகை - குளிர்ந்த மலர்த்திரள். துவன்றிட - செறிந்து கிடத்தலும். புதல் என்றது, புதல்போல அடர்ந்து வளர்ந்திருக்கும் புல் செறிவு. மலர்த்தொகை, நிலவொளி யணிந்திடச் சுண்ணம் புனைந்தென இலகும் என்பது. சித - வெண்மையான. சுணம் - சுண்ணம்.

23. கத்திகை - மலர்மாலை. என - போல. சீகரம் - நீர்த்துளி. வளி - காற்று. திறல் - திறம். அளித் துணர் - மெல்லிய பூங்கொத்து. சரி - மலைச்சாரல். கத்திகை மது துளித்தது ஒத்து அருவிகள் நீர்த்திவலைகளைத் தெளித்துச் சரியைக் கிழித்திழிவன. காற்றின் வலியால் அசையும் காட்டில் நிழலைச் சிதைக்கும் நிலவையும் பூங் கொத்துகளையும் தாங்கிக் கலுழிகள் (காட்டாறுகள்) விரைந்து பாய்கின்றன.

24. கோடு - நீர்க்கரை. சினை - மரக்கிளைகள். ஏடு - இதழ். மதுபடு - மதுரம் சிறந்த. பாடுறு பொழில் - வனப்புமிக்க சோலை. கரையிலுள்ள பசுமை நிறமுள்ள புதர்கள், தாழ்ந்து புனலின்மேல் படியும் மரக்கிளைகள், இதழ்கள் செறிந்த பூவரும்புகள், கனிவகைகள் ஆகியவைகளும் பொழிலிடையும் பசும்பயிர்ப் பரப்பினூடேயும் ஓடி வரும் ஆறும் வளிவிய நிலவை ஏந்தின.

25 நனைவரு நீள்சினை விசும்புறத் தூங்கிடக்
கனைநிழ லைந்திட விடைமிளிர் மாண்டொழில்
வனைகொடி மாளிகை நிரல்பல வான்றெடு
புனைதொழிற் சிகரிக ணிலவொளி காலுமால்.

26 ஆர்கலி மருவயிர்ப் பெருங்கடற் பரப்பினி
லேர்வழை வளிபொரத் துயல்வர மலர்பட
வார்மணி நிறம்பயில் வளைபலத் துவன்றின
சேர்வன மணல்வெளி நிலவெரி புனையுமால்.

27 இப்பரி சுலகெலா மொளிர்ந்திட வெண்ணில
வப்புறம் வெளியெலாம் நிறைந்தொளி பம்புமால்
குப்புறற் கரியமாச் சுதைக்கட லன்னவிண்
செப்பருவருநலன் குறித்ததென் றுன்னுவாம்.

---

25. நனை - பூவரும்பு. பூவரும்புகளை யேந்திய வானளாவிய அசையும் மரக்கிளைகளின் நிழல் சிதைந்தபோது இடையிடையே காணப்படும் கொடியேந்திய மாளிகை வரிசைகளும் வானளாவிய ஒப்பனை மிக்க கோபுரங்களும் நிலவைத் தெறித்தன.

26. ஆர்கலி - கடல். அயிர் பெருங்கடல் பரப்பு - கடல் போன்று அகன்ற மணற்பரப்பு. ஏர் வழை - அழகிய சுரபுன்னை. துயல்வர - அசைய. மணற்பரப்பிலுள்ள சுரபுன்னைகள் காற்றினால் சிந்திய மலரொடு செழுமையுள்ள அழகிய நிறங்களுடைய சங்குகளும் சேர்ந்து கிடக்கும் மணல் வெளி நிலவைத் தாங்கியது.

27. குப்புறற்கரிய - கடத்தற்கரிய. இப்படி உலகெலாம் ஒளிர வும் வெண்ணிலவு ஆகாயவெளியிடமும் நிறைந்து ஒளி மிகுவிப்பத னால் அமுதக்கடலை ஒத்த ஆகாயம், இனிவரவிருக்கும் நலங்களைக் குறிப்பாக உணர்த்தியது போன்று இருந்தது என்று உன்னுவாம் என்க.

### வேறு

28 தகுநல னரும்பிய
பெருந்தகை மாதென வறிந்தவன்
மிகுநசை நுவலெனத்
தெருளன மேவிட வவள்வயின்,
நெகிழ்மனம் விழைநளன்
பெரும்புகழ் மாந்தின ணயந்திட,
நகுமுகம் நிறையொடு
மழுங்கிட நாணின ளுருவென:

29 கன்னிமெல் விடியொளி
கதிரவ ஞெற்றென வணைந்திட
மன்னிய விருளர
ணைந்திட விமைத்தெழுஞ் செவ்வியிற்
றுன்னிய பனியொடு முகிழ்மல
ரிளந்தளிர், நிறக்கனி,
பொன்கதிர் விரிகயம், வனம், செறு,
சிகரமொ டுருத்தெழ,

---

28. நலன் - அழகு. அறிந்தவன் - நளன். நுவல் எனத் தெருள் அனம் ஏவிட—(தனக்கு அவள்மீது உள்ள வேட்கையை) நுவல்க என்று செய்தி யறிந்த அன்னத்தை அவள்பால் ஏவிட.

இது முதல் நான்கு செய்யுட்களால் வைகறைப்பொழுதின் நலன் நுவலப்படுகின்றது.

29. நாணினள் உருவென (28) இமைத்தெழும் செவ்வியில் என்க. ஊைந்திட - மெலிந்திட. உருத்தெழ - தோற்றங் கொண்டு கட்புலனாக.

## வேறு

30 படர்பட வெழுநகை திகழ்மு கம்பொர,
வடரிதழ்த் தளைகெட நிறங்கால் வீயென,
மிடிபட வருந்திரு பொலியு மில்லென,
படுவிறை யகன்றிடத் தழைக்கும் நாடென:

31 பிரிந்தவன் மறைந்திடப் பெருகு மின்னலி
னிரிந்தன கலனொடு நகையு மீள்தர
வரும்பரி சுணர்த்திட நயந்த கற்பினள்
திரும்பினன் கரம்படப் பொடித்த நோக்கினே:

## வேறு

32 கதுவிய வைகறைச் சில்லொளி மருவிடத்
ததையிருள் நயந்திடை துயத்துருக் கரந்ததால்
பொதுளிய கதிரொளி நந்துபு விரியுமால்
பொதியெழி லவிர்புவி பொன்னொளி குடையுமால்.

---

30. படர்பட - துன்பங்கெட. மிடிபட - வறுமைகெட. படு இறை என்றது, கொடுங்கோன் மன்னன்.

31. பிரிந்தவன் - தலைவன்; இங்கே ஞாயிறு. பிரிந்தவனைய் என்க. மின்னலின், என்றது விரைவுக்கு. கற்பினள், ஈண்டு உலக மாகிய மங்கை. கரமென்றது ஞாயிற்றின் கதிர்.

32. ததை - நெருங்கிய. நந்துபு - நந்தி; தழைத்து. குடையும் - மூழ்கு மென்னும் பொருட்டு. உருத்தெழ (29), முகம்பொர, வீயென, இல்லென (30), நோக்கின் (31) புவி பொன் னொளி குடையுமென்க.

33 கண்ணுள ரரங்கிடை யாடலிற் களித்தென
மண்டெரி யிடைத்துகள் வெந்தொளி கனன்றெனத்
தண்டலாக் கவிச்சுவை யாழ்ந்தனர் மகிழ்ந்தெனத்
தண்செறி முகிற்குலங் காந்தொளி குளிப்பவே.

34 அளியினம் நயந்தன நறவிடைப் பொதிந்தென
வெளியெலாம் பொன்னொளி களபமொத் தமைந்திட
நளிரொளி யுடுக்குலத் தொகைபல பெருகொளி
வெளியிடைக் குளித்தன மயங்கின மறைபவே.

35 பருகிய முகிற்குலம் பொன்னொளி காலுன,
மருவிய மலைக்குலந் தாங்கிய வெள்ளுறைப்
பெருவெளிப் பனிக்குவை, தூங்கிய நீர்நிலை,
பரவிய கதிரொளி தேசவிர்ந் திலகுமால்.

36 கனமவிர் தூவுறை, யருவிகள் சிதர்துளி,
கனைநிழ னீண்மரச் செறிகட மிலைச்சிய
வினமல ராரிலை, கனித்தொகை, பொருந்திய
பனியுறை யின்னன மணியொளி யவிருமால்.

---

33. கண்ணுளர் - கண்பெற்ற பேறுடையோர். துகள் வெந்து கனன்றென வென்க. தண்டலா - நீக்கலாகாத. காந்து ஒளி - விளங்கும் ஞாயிற்றின் ஒளி. குளிப்ப - குளிப்பன. என முகிற் குலம் ஒளி குளிப்பவென்பது.

34. அளியினம் - வண்டுகளின் திரள். நயந்தன - நயந்தன வாய். குளித்தன - குளித்தனவாய். மயங்கின - அஞ்ஞாயிற்றின் ஒளியிற் கலந்து.

35. காலுன - ஒளிர்கின்றன. உறை - கட்டி. குவை - குவியல். தூங்கிய - பொருந்தி அசைந்த. தேசு அவிர்ந்து இலகும் - ஒளிமிகுந்து விளங்கும்.

36. கனம் - மேகம். உறை - மழைத்துளிகள். சிதர் துளி - சிந்துந் துளிகளும். கனைநிழல் - செறிந்த நிழலினையுடைய. கடம் - காடு. மிலைச்சிய - சூடிய. ஆர் இலை - நிறைந்த இலைகளும். இன்னன - இவைபோன்று ஒளி தெறிப்பன பிறவும். மணியொளி - மணியொளி போல். தூவுறையும், துளியும், மலர் முதலியவற்றிற் பொருந்திய பனியுறையும் இன்னனவும் அவிரும் என்க.

37 இரலைகள் பிணையொடு வெருவிய பெயர்ந்திட
மருவதர்ப் படுகொடி புதல்வகை சொரிதுளி
யருவியி னுழைக்குல மருந்திட வாயிழி
யருமணி நளிர்த்துளி கதிரொளி தெறிக்குமால்.

38 மென்பிணை பிரிந்தில கவர்மருப் புழையின
மின்றுணை பிரிந்தில புறவினம் பொதும்பரின்
மன்னிணை பிரிந்தில வெழினிறப் பறவைக
ணன்பணை பிரிந்தில குரக்கினங் களிக்குமால்.

39 கிள்ளைகள் குஞ்சொடுங் கொஞ்சிய பொய்விடா
கொள்ளையிற் பயிலுறும் பொன்பனித் தினைப்புனம்
நள்ளிரு ளிறையொடு மண்டிய மதுநய
முள்ளிய வஞ்சியர் மறுகின ரொசிவரால்.

---

37. வெருவிய பெயர்ந்திட - அஞ்சிப் பெயர்ந்திடுதலால்; அச்சம் அவற்றிற்கு இயல்பாய் நிகழ்வதாம். மருவு அதர்ப்படு - வழியிடை மருவிக் காணப்படுகின்ற. வாயிழி - வாயிலிருந்து உகும். மணி - மணிபோன்ற. சொரிதுளியும் நளிர்த்துளியும் கதிரொளி தெறிக்கும் என்க, தெறிக்கும் என்றார் வீசும் என்றற்கு. நீர்த்துளியும் ஒளியுடையதாகலின், அதன்கட் கதிரொளி பட்டுப் புறந்தெறிக்குமென்பது.

38. பிரிந்திலவாய் இவ்விளங்காலைச் செவ்வியை நுகர்ந்தின் புறும் என்றபடி. நன்பணை - உயர்ந்த மரக்கிளைகளில்.

39. பொய் - மரப்பொந்து. விடா - விட்டு. கொள்ளையின் மிகுதியாக. பொன்பனி என்றார், ஞாயிற்றின் செவ்வொளி பட்டுப் பனி பொன்னொளி விரித்தலின். இருள் - இரவில். இறையொடு தத்தங் காதலரோடு. மண்டிய - கலந்து மகிழ்ந்த. உள்ளிய - நினைவு வரப்பெற்ற. வஞ்சியர் ஒசிவராதலால், கிள்ளைகள் தினைப்புனம் கொள்ளையிற் பயிலும் என்பது.

வேறு

40 மருவுமைக் கருவரை யிழியுந் தண்புனல்
வெருவரு மொலிபட விரைந்து தாழ்பொறை
பொருதிடத் தெறிபுனல் பனியி னுட்செறிந்
தருமணி நிழறெரித் திலக வார்வனம்.

41 துன்னிய கற்றிர ளுலத்தின் மீதுறுப்
பன்னரும் விசையொடு சாய்ந்து பேவுற
வுன்னிய வகையலா தெழுநி கழ்ச்சியிற்
றுன்னுபு கன்றிடு மனத்திற் பொங்கியே.

42 பாடுறு மணியென வுறைக ளேந்திய
கோடுறு விரைமலர்ப் புதன்ம ரங்கொடி
யாடுற விரசுபு திரைந்து பாய்ந்தெனத்
தோடுறு புதல்வெளி புளினத் தாடுற.

43 வரைமருப் பேந்திய தகர்கள் முன்செல
விரைகொள மென்பிணை நிரல பின்செல
கரையறு மகிழ்வுடை மறியி னேர்த்தொகை
விரைவன துள்ளுன புதலி டையரோ.

---

40. மருவும் மை கரு வரை - மேகம் மருவும் நீல வரை. ஒலி பட - இரைச்சலுண்டாக. தாழ்பொறை - தாழ்ந்துள்ள பொற்றை மலைகளில். பொருதிட வென்றமையால் மிகுந்து விழுதல் பெறப் பட்டது. மணி நிழல்-மணியொளி. தெரித்து - புலப்படுத்தி. வனம்-நீர்.

41. உலத்தின் - சிறிய குண்டுக் கற்களின். மீதுறு - மீதுற்று. பன்னரும் - சொல்லரிய. பே - நுரை. எழுந்த - மாறுபட்டுத் தோன்றிய. துன்னுபு - படிந்து. கன்றிடு - வெம்பும். பொங்கி - முருக்குடையதாய்; உருத்து.

42. திரைந்து - அலை செறிந்து. விரசுபு - விரசி.; கலந்து நிறைந்து. தோடு - இதழ். புளினம் - மணற்குன்று. வனம் (40), உலகத்தின் மீதுறு பேவுற, மனத்தின் பொங்கி (41), புதல்கள் மரங் கொடி ஆடுற விரசுபு புளினத் தாடுற (42) என்க.

43. வரை மருப்பு - அறுப்புண்ட கொம்பு. தகர்கள் - செம் மறிக்கடா. நிரல - வரிசையாய். கரை - எல்லை. ஏர்த்தொகை - அழகிய தொகுதி. புதல் இடை - குறும்புதல்களையுடைய பசிய புல்வெளியிடத்திலென்க,

44 தொலைசெலக் குட்டிக ளழுங்குந் தாயின
மலைதரு மனத்தன வளிய கூவிடக்
கலையெனத் துள்ளுன வணங்கிச் சேர்ந்தன
நிலைமிகு மன்பொடு பருகும் பாலரோ.

45 சிலமணிப் பறவைக ளுவந்த விசைத்திடக்
கலகல வெனப்பயி லாறி யஞ்செய
மலிமணம் நறவமுண் டாட மெல்வளி
கலிபுற வின்குயில் கூவும் காட்டிடை;

46 புகைமணங் கதுவிடை முல்லை புல்லிய
நகைமல ரேந்துமாஞ் சோலை நாப்பணே
நகையிருண் மருவயிர்ப் பரப்பி னீர்க்கரை
சிகையனன் முந்துறு நறும்புற் சாலையே.

---

44. அழுங்கும் - வருந்தும். அலைதரு - கவலையுற்ற. அளிய - அளிக்கத்தக்கனவான அக்குட்டிகள். கலை என - மான்குட்டிகளென. வணங்கி - முதுகு நெளிந்து. தாய் இனம் அலைதரு மனத்தனவாய்க் கூவிட, அளியன துள்ளி அணுகி நெளிந்து அன்பொடும் பால் பருகும் என்பது.

45. இயம் செய்ய - வாத்தியம் உண்டாக்க. மணம் - மலர் மணம். நறவம் - தேன் துளி. உண்டு என்றது அதனை அடித்துக் கொண்டு என்றற்கு. ஆட - அசைய. வளி - காற்று. அதற்கு மென்மை நுவன்றது ஈண்டுக் காலை யிளங்காற்றிற் காணப்படும் இனிமை. மணிப்பறவைகள் - அழகிய பறவைகள். உவந்த - உவந்து. புறவு - புறு.

46. புகைமணம் - அகிற்புகை முதலியவற்றின் மணம். கதுவு இடை - கதுவப்பெற்ற இடைவெளி. முல்லை - மலரேந்திய முல்லைக் கொடி. இருளென்றது ஈண்டுச் சோலைகளின் அடர்த்தியுந் தழைவும் புலப்படுத்தியது. அயிர்ப் பரப்பு - நுண்மணற் பரப்பு. நீர்க்கரை - ஆறு முதலிய நீர் நிலைகளின் கரையில். சிகை - எரியின் கொழுந்து. புற்சாலை - புல்வேய்ந்த தவக்குடில். சோலைநாப்பண் புனற்கரைக்கண் விளங்கும் புற்சாலைகளில் என்க,

47 இரைதரும் வேர்கெட மாமு லர்ந்ததின்
கரையறு நசைபட மலங்க டீர்ந்தவ
ரரையுரி யசையின ரதளி ருக்கையர்
வரையறு தவத்தினர் முனிவர் வைகுநர்.

48 படிவமேற் றுறுமுடி தாடி மல்குநர்
படிவமேற் றுணவறக் குறைத்தூன் றேய்குநர்
படிவமாத் தவத்தனல் காந்துந் தேசினர்
படிவநீண் டகங்கனிந் தளிய நோக்கினர்.

49 பேசரு மருளறிந் தணிலும் புள்ளுமே
காசறு மேனியி னமர்ந்து நீங்குவ,
ஆசுரந் தளியமு துவந்து நல்கிட
வாசமங் கணுகுவர் முல்லை மாதரே.

50 தேசவிர் முகத்தினர் சிறுவ ரன்பம
ராசறுஞ் சிந்தையர் பணிக ளாற்றுவார்
வீசன லோம்புவ ருய்ப்பர் நீர்,மண
வீசொரி வனஞ்சமித் தீட்டி யாடுவர்.

---

47. கெட - கெடுதலால். நசைபட - அவாக்கெட; அதனுல் வேர் அவாவுக்கும் மரம் மலத்துக்கும் உவமை. உரி அசையினர் - மரவுரி உடுத்தவர். வரைஅறு - அளவில்லாத தவமுடையவராய் ஆண்டு உண்டு உறையும் முனிவர் என்பது.

48. படிவம் ஏற்று-தவக்கோலந் தாங்கி. உறுமுடி-மிக்க சடைமுடி. மல்குநர்-நிறைந்தவர். படிவம் ஏற்று-பட்டினிகொண்டு. உணவு அறக்குறைத்து-உணவை மிகவும் குறைத்து ஊன் தேய்குநர் என்பது. படிவமா - நோன்பாகிய பெரிய. காந்த - சுடர்விட. படிவம் - வடிவம். நீண்டென்றது மெலிவினுலே உடம்பு நீண்டு காணப்பட்டது என்றபடி. அளிய - அருள் கனிந்த.

49. காசு - குற்றம். அமர்ந்து நீங்குவ என்றது முனிவரின் தவ உறைப்பினை விளக்கிற்று. ஆ - ஆன். அளி அமுது - அளிக்கும் பாலமுது. வாசம் அங்கு அணுகுவர் முல்லைமாதர் - முல்லை நிலத்து மாதர் முனிவர் இருக்கையை அணுகுவர்.

50. சிறுவர் - குருகுலங் காக்கும் மாணவர். ஆசு - குற்றம். சிந்தையராய் என்க. உய்த்தல் இங்கே நீர் நிலைகளிலிருந்து கொண்டுவருதல். வீ-மலர். வனம் - காட்டில். சமித்து - வேள்விக்கு அரசு முதலிய வேள்விச் சுள்ளிகள்.

51 வரைமது தினையமு துய்க்க வேடரே,
வரையறு மதுக்கனி மூல மானதள்
வரையுறு சீரையுந் தந்து போற்றுவர்
வரைதரு சிலைப்புய மறவர் கானவர்.

52 இனையவ ரோம்பிட வுடலந் தாங்கினர்
வினைபட நோற்றிறை யருளைத் தாங்கின
ரெனையன வாயினு மவலந் தீர்ந்துயிர்
கனைநல னெய்திடச் சிறுமை நீத்தவர்.

வேறு

53 மறவிதான் றேய மீண்ட வாழியொ டிறைநி னைவின்
கறையறு மழகு நாறுஞ் சகுந்தலை யுருவு முல்லை
நறவுமிழ் வனத்தி னன்பு மன்றலு மெழுந்த பண்பிற்
செறியிரு டேய்க்கும் வெய்ய வாழியொ டுலகந் தோன்ற

---

51. வேடர் மது அமுது உய்க்க மறவர் கானவர் கனி கிழங்கு மான்தோல் மரவுரி தந்து போற்றுவரென்க. வரைமது - மலைத்தேன். வரையறு - அளவற்ற. மதுக்கனி - தீஞ்சாறொழுகுங் கனி. மூலம் - கிழங்குவகை.

52. வினைபட - வினைகெட. அருளைத் தாங்கினர் - அருளை வந்தினர். எனையன - எத்தகையன; அவலம் எனையனவாயினு மென்க. கனைநலன் - மிக்க அருள்.

53. மறவி - மறப்பு. ஆழி - மோதிரம். இறை என்றது ஈண்டு துசியந்த மன்னன். நினைவின் - நினைவுவெளியில். கறை - குற்றம். நாறும் - விளங்குகின்ற. வனத்தின் அன்பு என்றது முன்னர்க் கண்ணுவர் துறவிருக்கையருகிற் காதலித்த காதலன்பம் என்பது. எழுந்த-விளங்கி மலர்ந்த. வெய்யஆழி - ஞாயிற்றுமண்டிலம். மறவி இருளுக்கும், ஆழியோ டிறை நினைவு ஞாயிற்றோடு அதன் ஒளிக்கும், உருவு அன்பு மன்றல் முதலிய விளக்கத்து நிலைகள் உலகத்தின் மலர்ச்சிக்கும் உவமை. காலை நோத்தின் விளக்கத்துக்குச் சகுந்தலையின் வாழ்க்கை விளக்கமே ஈண்டு உவமையாக எடுத்துக் காட்டப் பட்டுள்ளமை கருத்திருத்துதற்குரியது,

54 நீலமுஞ் சிவப்பும் பொன்னும்
வெள்ளையுந் தோய்ந்த மால்செய்
கோலமென் மலர்கள் சூடி
நிரைமருங் கிசைத்துச் செல்வார்
பாலமர் புளினக் குன்றுங்
குறும்பொறை பலவுஞ் சேர்ந்து
வேலமர் நயன மங்கை
மாரொடும் பொதுவர் கூடி.

55 புதுமலர்த் தெரியல் கொண்டு
சூடினர் களிக்கக் கண்டு
மதுகுடித் தகவு நாக
மலரொடு கனியுஞ் சிந்தத்
ததைமல ருளருந் தேன்கள்
நறவமுண் டிசைத்து மொய்க்கக்
கதழ்வெளி மணமுந் தேசு
மிசையொடு வனப்பும் பொங்க.

56 பொலந்துணர்ப் புதலின் கோடு
வளர்மரக் கொம்பு கான்ற
விலங்கல ரீர்த்துச் செல்லு
நிறைபுன லாற்று நீத்தம்
நலங்கெழு மாத ராடத்
தெறிபுன லொளியி லாட
வலங்கொளி முத்த மென்னத்
திவலைகள் சிதறி மின்ன.

---

54. பொன்னும் - பொன்னிறமும். மால் - ஈண்டு மனந் தோய்கை, கோலம்-அழகிய. நிரைமருங்கு - ஆனிரைகளின் பக்கலில். இசைத்து-பாடிக்கொண்டு. பால் அமர் - பகுதி பகுதியாய்ப் பொருந்தி விளங்குகின்ற. பொதுவர்-கோவலர். கூடி இசைத்துச்செல்வார் என்க.

55. தெரியல் - மாலை. அகவும் - ஆடும். உளரும் - மலர்த்தும். தேன்கள் - வண்டுகள். கதழ் - செறிந்த.

56. கான்ற - சொரிந்த. இலங்கு அலர் - நிறம் விளங்கும் மலர்களை. நீத்தம் - வெள்ளம். மாதர் ஆட-மாதர் ஆடுதலால். ஒளியில்-கதிரவன் ஒளியில். அலங்கொளி முத்தம் - ஒளி அலங்கும் முத்தம்; ஒளியசையும் முத்தமென்க.

57 செய்யவொண் கழுநீர் வுண்ணத்
தாமரைக் காடு தூங்கும்
பொய்கையி னகல மேவு
நிறங்கிளர் புட்கள் கூடி
யொய்யென வொலிக்கப் பாங்கர்
மதர்த்தெழு மீன்க டுள்ள
மொய்கதிர் கதுவ வெல்லாம்
பொன்னொளி பொலிவ மாதோ.

58 பொலங்கெழு செம்பொற் கும்பந்
தலைநிவந் தொளிரப் பூண்ட
வலங்கருன் பொலியும் பண்பி
னிளங்கதிர் மிலைச்சத் தாங்கி
நிலங்கெழு பொங்கு மன்பு
வுருக்கொடு மெழுந்த பண்பின்
நலங்கெழு பதுமை துன்றுங்
கோபுர வண்ணந் தோன்ற;

---

57. கழுநீர், தாமரைக்காடு என்றது, செங்கழுநீர், தாமரை ஆகிய மலர்களின் மிகுதிபற்றி. அகலம் - பரப்பு. ஒய்யெனவென்றது, ஓர் ஒலிக்குறிப்பு. பாங்கர் - அருகில். மொய்கதிர் கதுவ - செறிந்த ஞாயிற்றின் பொன்னிறக் கதிர் பற்றுதலால். எல்லாம் - அம் மீன்களெல்லாம்.

58. பொலம் - அழகு. தலை நிவந்து - நுனிப்பகுதி மேலோங்கி. பூண்ட - உச்சியிற்பூண்ட - ஞாயிற்றின் செவ்விளங்கதிர் அணிசெய்ய. கோபுரம் வானளாவி உயர்ந்து போயதும் நுனியிற் பொற்கலசங்கள் தாங்கி நின்றதும் உலகத்திற் பொங்குமன்பு ஓர் உருக்கொண்டு கொழுந்தோடிச் சென்று மலர்ந்து விளங்குதல் ஒத்த தென்றபடி. அன்பு - கடவுள் மாட்டு எழுங் காதல். கோபுரவண்ணம் - கோபுரத்தின் தன்மை,

59 பத்திசெய் கொடிக டாங்கும்
வெண்சுதை நிரல வில்லம்
தத்திய வெளியை யென்ன
வானுற நிற்க வூடு
தொத்துறு மலர்க டுன்னு
நிழல்செறி மரங்கள் பாங்கர்
பொத்திய நியம மண்டு
மிளங்கதி ரணிந்து தோன்ற ;

60 உள்ளிடை யொட்ப மேந்துஞ்
சுவர்களும் வண்ணத் தூண்கள்
ஒள்ளிய தூங்கும் விட்டந்
தாழ்ந்திடும் வடங்கொண் மாட
மெள்ளரு முளரி யம்பல்
நிகர்விழி மலரப் பொற்பின்
பிள்ளைகள் தாயி னார்வ
மாடினர் பணிவர் தெய்வம்.

---

59. பத்தி - வரிசை. மரங்கள் பாங்கர் பொத்திய நியமம் - மரங்கள் பக்கங்களை மூடிய தெரு. மண்டும் இளங்கதிர் - செறிந்த ஞாயிற்றின் இளங்கதிர்.

60. ஒட்பம் - விளக்கம். வண்ணத்தூண்கள் - சித்திரத் தூண்கள். எள்ளரும் - இகழ்வரிய ; மதிக்கத்தக்க வென்றபடி. முளரி - தாமரை. அம்பல் - மலருந்தறுவாயிலுள்ள மொட்டு. முளரியம்பல் - தாமரை மொட்டு. முளரி மொட்டு நிகரும் விழிகளென்க. ஆடினராய்த் தெய்வம் பணிவர் என்பது. ஞாயிற்றைக் கண்டு தாமரை மலர்வதை யொப்பத் தாயின் ஆர்வத்தைக் கண்டு பிள்ளைகளின் தாமரைக்கண்கள் மலர்ந்தன. மாடத்தின்மேல் இங்ஙனம் ஆர்வநீராடித் தத்தம் வழியடு தெய்வத்தை வணங்கின ரென்று வைத்துக்கொள்க.

61 அன்பெனுந் தேனுஞ் செய்ய
வறிவெனும் பாலு மூறு
மன்னிய மூவா வுண்மை
போர்த்திடுங் காமர் கோயி
லின்னிய லளியுந் துப்பும்
பொங்குறும் வாயில் கொண்ட
தென்றமிழ் வண்ண மேந்துஞ்
சிகரியே பெண்மை யன்றோ?

62 எழவலை யிழிந்த பெற்றி
மீண்டுறத் தழைக்கக் காதல்
செழுமதி தென்ற லோம்பப்
பிரிந்தனர் புலரு மாதர்
குழையுநர் துணைவர் தேற்றப்
பொறுத்திலர் குற்ற மென்னு
யிழையொடு நலனும் போக்க
விடிபொழு தழுங்கு மூடல்.

---

61. மூவா உண்மை என்றார், இளமை என்றற்கு. காமர் - அழகிய. இன்னியல் அளியும் துப்பும் - இனிய வாழ்க்கையியலாகிய கனிவும் நுகர்வும். வண்ணம் - செவ்வி. அன்பும் அறிவும் ஊறுகின்ற இளமையே கோயிலாக, அளியும் நுகர்வும் அதன் வாயிலாக, தமிழின் சாயலே வண்ணமாகப் பெண்மை அவ்வாயிலைக் கொண்ட கோபுரமாய் விளங்குகின்றதென்பது.

62. எழ அலை - அலை எழும் பொருட்டு. பொறுத்திலர் குற்ற மென்னு - குற்றமென்று பொறுத்திலராய். இழை - அணிகலன். நலன் - மேனி நலன். அழுங்கும் ஊடல் - காதல் ஊடலில் அழுங்கும்.

63 மெல்லியன் மாதர் தங்க
ணுணங்கிடை கும்பந் தாங்கி
வல்லியி னசையு மெய்யு
மிழிபுன லாலி முத்தும்
நல்கிய கறவைப் பாலுங்
கன்றுவாய் நுரையும் பொங்கு
மெல்லொளி கதுவு மன்றம்
பொன்னென விலக மாதோ.

64 பம்புமி னொளிரும் வானப்
பெருங்குழா மசைந்த நோக்கிற்
கிம்புரி பொலன் மருப்புப்
பொன்மணி யோடை யேந்துந்
தும்பிகள் பெயர மண்ணு
நீர்க்குட மறையோர் தாங்கிப்
பொம்மென மறைக ளோதி
மறுகிடைப் பெயர்ந்து செல்ல.

---

63. நுணங்கு இடை - ஒசியும் இடையானது. கும்பம் - குடம். வல்லியின் - கொடிபோல. இழிபுனல் - குடத்தினின்று சிந்தும். நீராகிய ஆலி முத்தும் - நீர்த்துளியாகியமுத்தும். மெல்லொளி கதுவும் மன்றம் - ஞாயிற்றின் இளவொளி ஊடுருவிய தெருவில். மெல் லியலார் மெய்யும் ஆலிமுத்தும் பாலும் நுரையும் பொன்னொளி இல கும் என்பது.

64. பம்பும் மின் - விளங்கும் மின்சுடர். இது மேகத்துக்கு அடை. வானப் பெருங் குழாம் - முகிற்குழாம். அசைந்த நோக் கின் - அசைந்த காட்சியைப்போல. பொலன் மருப்பு - பொன்னிறக் கொம்பும். பொன்மணி ஓடை - பொன்னும் மணியும் இழைத்த நெற்றிப்பட்டமும். தும்பிகள் - யானைகள். முகிற் குழாம் அசைந்த காட்சியொப்பத் தும்பிகள் பெயர என்பது. மண்ணும் நீர்க் குடம் - திருமுழுக்குக் குடம். பொம்மென - ஓர் ஒலிச்குறிப்பு. மறு கிடை - தெருவூடு.

65 பண்ணிடை கதுவப் புட்கள்
தேனின மிசைத்துப் பொங்க,
நுண்ணிடை மடந்தை மார்க
டலைக்கடை நின்று நோக்க,
வொண்சுணம் பறக்கப் பாங்கர்
மணமலர் மரங்கள் சிந்த,
மண்ணியற் கதிர்ப்பொன் வெள்ளம்
யாவையு நுங்கிற் றன்றே.

66 வான்றொடு குடுமி மாடத்
தலைக்கடை யணிந்து தோன்ற
மீன்பொரு கண்ணு முல்லை
முகையுறு நகையு மல்கு
மான்பிணை யியலின் மாதர்
கேழ்கிளர் மலர்க ளன்ன
தேன்வரு மழலைப் பிள்ளை
யெழிற்குழு நயந்து துன்னி.

---

65. கதுவ - மேவ. தலைக்கடை - இல்லின் தலைவாயிற் படியில். சுணம் - சுண்ணம்; என்றது ஈண்டு மகரந்தப் பொடிகள்; வீட்டின் முன்னிடத்தைக் கோலஞ்செய்யும் சுண்ணத்தையும் கொள்ளப்படும். பாங்கர் - பக்கங்களில். சுண்ணம் பறக்கும்படி மலர்களைச் சிந்தவென்க. மண்ணியல் - ஒப்பனை செய்யும் பண்புடைய. நுங்கிற்று - விழுங்கியது; தன் வண்ணமாக்கிய தென்பது.

66. அணிந்து - அழகு செய்து. நகை - பல். இயல் - மருண்ட தன்மை. கேழ் - நிறம். மலர்களன்ன பிள்ளைகளென்க; பிள்ளைகளாகிய எழிற்குழு. துன்னி - கூடி.

67 நறுமணம் துன்னும் வண்ணம்
பலபடு முகைகள் பூத்துத்
துறுவெழின் மணக்கும் வேனி
லாற்றிடைப் பெயரும் போக்கிற்
செறிநிறச் சாயன் மஞ்ஞைக்
குழாமென மகிழ்ந்து கூடி
யுறுசினை தாது சிந்துந்
தெருவிடை யணிந்து செல்வார்.

68 திரைகடற் பவழ முத்தம் வலம்புரி முதல சங்கம்
வரைதரு வேழத் தந்தம் பலமணி பீலி கொங்கு
கருவயல் நெல்லின் குப்பை பாகிலை பாகுதெங்கு
திருநிழற் காடு தந்த பழமலர் முதிரை மூலம்;

69 இனையன கூலம் நொய்ய கம்பளங் கலிங்கஞ் சந்தம்
வனைகுழல் வாச நெய்கள் சிலம்படி யுண்ணும் பஞ்சி
கனையெழின் மாதர்பூணு மணிவகை சுண்ணமொட்ப
வினைமலி யினைய மல்கு மாவண மரிதிற் செல்வார்;

---

67. பலபடு - பலவாய்த் தோன்றிய. துறுவெழில் - அடர்ந்த எழில். மணக்கும் - விளங்கும். அணிந்து செல்வார் - அழகு தந்து செல்வாராய். வேனில் ஆறு - இளவேனிலாகிய வழி.

68. முதல - முதலிய. பலமணி பீலி - பலமணியும் பீலியும். பீலி - மயில்தோகை. கொங்கு - தேன். குப்பை - குவியல். பாகு - கருப்பஞ்சாறு. இலை - வெற்றிலை. பாகு - பாக்கு. முதிரை - பருப்பு வகை. மூலம் - கிழங்கு.

69. கூலம் - தானியம். நொய்ய - மெல்லிய. கலிங்கம்-ஆடை. சந்தம் - சந்தனம். வனைகுழல் - பலவகையாய்ப் புனைந்து அழகு செய்தற்குரிய கூந்தலின். பஞ்சி - செம்பஞ்சிக் குழம்பு. கனையெழின் - மிக்க எழில். ஒட்பவினை ஒள்ளிய தொழிற்றிறம். ஆவணம் - கடைத்தெருவூடு. அரிதின் செல்வார் - அங்காடியிலுள்ள பல பொருள்களும் தங்கள் மனங்களைக் கவர நடை மெதுவுபட்டுச் செல்லுதல்.

70 படுகணந் தேசு சிந்தி
மாதிரம் பெயர்ந்த வென்ன
விடுகலன் கதிர்கள் வீச
நகைநில வெழுந்து பொங்க
நெடுமறு கணிந்து சென்று
முழவொடு மிசைகள் பொங்கும்
கடிமதிற் கோயில் புக்கு
மலர்படு தேனின் மொய்க்க.

71 வடிவுடைத் தெய்வம் புட்க
ளிகல்செறி மாவின் கூட்டங்
கொடியொடு மலர்க டுன்னு
மெழில்செறிந் தவிருஞ் சென்னம்
நெடியதிண் கல்லிற் றேன்றப்
பத்தியி னின்ற தூண்கள்
கடியுடைச் சிகரி கொண்ட
மண்டப மேந்தி நின்ற ;

---

70. படுகணம் - பூத்த விண்மீன் திரள். தேசு - ஒளி. மாதிரம்- திசை. இடுகலன் - அணியப்பெற்ற கலன்கள். நகைநிலவு- மாதர் நகை சொரியும் ஒளி. அணிந்து - அழகு தந்து. தேனின் - வண்டுகளைப் போல்.

மாதர், பிள்ளை யெழிற்குழு துன்னி (66) தெருவிடை அணிந்து செல்வார் (67), முதிரை மூலம் (68), கூலம் மல்கும் ஆவணம் அரி திற் செல்வார் (69), நெடுமறுகு அணிந்து சென்று கோயில்புக்கு மொய்க்க (70) வென்பது.

71. இகல் செறி - ஆற்றல்செறிந்த. சென்னம் - உருவம். பத்தியின் - வரிசையில். கடியுடை - அழகுச் சிறப்புடைய. ஏந்தி நின்ற - ஏந்திநின்றன. ஏந்திநின்ற தூண்கள் என்க. புட்கள்மாமுதலியவற்றின் உருவம் தோன்றுங் கல்லினாலியன்ற தூண்கள் ஏந்தி நின்றன வென்பது.

72 தொடுகலின் றச்சர் தந்த
வருங்கலை தாங்கி நின்ற
படுதொழி லோவர் தங்கண்
மனத்திடை யரும்பு நோக்கு
மிடையெழி லொட்ப மேந்திக்
கல்லிடை யுருத்த தென்றே
யிடையிடை பொலியக் காலை
விழவெழின் மல்கு மாதோ.

73 எண்ணில வகைய மண்ணி
னுயிரிடைச் சீரின் மிக்கார்
நுண்ணுணர் வரிய மாந்தர்
மேனிவந் திலகும் பண்பின்
மண்ணிய லெழினற் பண்பி
னெண்ணுதல் சிறந்தா ளென்ன
நண்ணிய நறுங்கா நாப்ப
ணெழுஞ்சிகை கலைநற் கோட்டம்.

---

72. தொடுகலின் - கருவிகொண்டு தொட்டகல்லில், தொட்ட-செதுக்கி உரு எழுதிய. தச்சர் - கல்தச்சர். நின்ற - நின்றவை; பெயர். படு தொழில் ஓவர் - விளங்குஞ் சித்திரத் தொழிலையுடைய ஓவியக் காரர். அரும்பும் - அரும்புகின்ற கலைக் கருத்து. மிடை எழி லொட்ப மேந்தி என்க. உருத்த தென்றே - உருவெடுத்த தென்றே கருதும்படி. பொலிய - விளங்க. காலை விழ வாகிய எழில் நிரம்பு மென்க.

73. வகைய-வகையவான. சீரின் - சிறப்பின். அரியமாந்தர் என் றது, கலைஞரை யுள்ளிட்ட பெரியோரனைவரையும். எழுத எடுத்த உரு வத்தில் அக்கலையுணர்வு வந்து விளங்கும் பண்பினால் கலைஞர், மண் ணின்உயிரிடைச் சீரின்மக்கள் எனவும், எழில் நற்பண்பினால் ஒண்ணு தல் சிறந்தாள் எனவும் உரைத்தபடி. மண்ணியல் எழில் - இயற்கைஎழி லொடு ஒட்டிய ஒப்பனையோடு விளங்கும் எழில். விளக்கமாகிய இயல் பினையுடைய எழில் எனினுமாம். ஒண்ணுதல் - பெண். கா நாப்பண்-சோலை நடுவில். சிகை - உச்சி.

74 திரிபில திட்பஞ் சான்ற
சிற்பநற் கலைஞர் தந்த
புரையில துட்ப மேன்ற
சிலைபல மன்னுங் கோட்ட
முரைசெயற் கரிய பொற்பி
ஞேவியம் போர்த்தச் சோலை
கரையறு காதற் பூத்த
நங்கைதன் கற்பிற் றேன்றும்.

75 ஆக்கிய லுள்ளந் தோய்ந்து
செந்தெரு ளறிவிற் றைத்து
நோக்கியற் பொருள்கண் மொய்ய
வணிகொளத் தாங்கிச் செய்ய
நாக்கிசை பயின்று யாப்பிற்
றகுமொழி யுருவிற் பூத்துத்
தேக்கரு மருளின் மாண்பு
மணப்பதே செய்யு ளென்ப.

---

74. திரிபு இல - மயக்கவுணர் வற்ற ; தெளிவுடைய. புரையில- குற்றமற்ற ; இயற்கையொடு மாறுதலில்லாதனவான. கோட்டம் - கோயில். கரையறு - எல்லையற்ற. சோலை கற்பின் தோன்றுமென்பது. காதல் வழி யெழுந்த கற்புடை நங்கைக்கண் வியக்கத்தக்க அருஞ் செயல்கள் தோன்றி விளங்குதல் போலச் சோலை நடுவில், கலைநற் கோட்டம் மேவித் திகழ்ந்த தென்க. சோலைக்குக் காதலும் கோட்டத் திற்குக் கற்பும் உவமைகள்.

75. ஆக்கியல் - படைப்பியல். உள்ளம் . புலவர் உள்ளம். செந் தெருள் - நடுவுந் தெளிவுமுடைய. தைத்து - பற்றி. மொய்ய - செறிந்த. செய்ய - பொய்யாத. தேக்கரும் - தடுத்தற்கரிய. பூத்து மணப்பதே செய்யுளென்க.

வேறு

76 உருவுற வாக்கியல் பூத்த தண்டமே
மரவகை யேந்திய நறுமென் கேழ்மல
ரருநிற முரண்வகை யுயிர்த்த முத்தினம்
திருநனி தும்பிகள் கோபந் தாங்கிய.

77 துறுநிறப் பறவைக ளிசைப்ப வாடுவ
மறுவறு முருகுறப் பொலிவர் மாதரா
ரறவியன் மக்களி னுள்ள மண்டவே
நிறைமொழி யொழுகியல் சால வோங்குமால்.

78 இன்னன செறியிய லொட்பந் தேர்ந்தவர்
கன்னலி னுண்ணயங் களிக்கும் பெற்றியர்
நுண் ணுணர் வூழ்த்ததா லருளின் சால்புறப்
பன்னரும் பொற்பின மன்னும் பாக்களே.

79 அரியமை கண்ணிணை யொளிர்ந்து கோல்பெய
வரிதவழ் பொன்னிறக் கன்னஞ் சேந்திட
யிரிதுவ ரிதழிடை முல்லை நாறிட
விரிநகை யெழின்முகம் பொலியும் பண்பினின்:

---

76. பூத்தது - எழுந்து விரிந்தது. தும்பி என்றது தும்பியின் பன்னிற இனங்கள். கோபம் - செம்பட்டுப் போன்ற தம்பலப் பூச்சிகள். முரண் - இப்பி.

இவ்விரு செய்யுட்களிலும் ஆக்கியலால் எழுந்த அண்டத்தில் ஓரறிவுடைய உயிர்கள் முதல் ஆறறிவுடைய மக்கள் வரையில் இடனுகக் கொண்டு திகழும் அழகின் வீக்கம் கூறப்பட்டபடி.

77. இசைப்ப இசைப்பனவாய். ஆடுவ - அவ்விசைத்தலால் திளைத்து நிற்பன. முருகு - அழகு. அறவியன் மக்கள் - அறவோர். மண்ட - செறிதலால். நிறை மொழி - ஆணை. ஒழுகியல் - அதன் நடை முறை. ஆக்கியல் அண்டம் பூத்ததனுல் உலகில் மலர் முதலியன பொலிகுவ (76), பறவைகள் இசைப்பன, மாதர் பொலிவர், அறவோர் நிறைமொழி யொழுகியல் சாலத் திகழும் (77) என்பது.

78. ஒட்பம் - விளக்கத்தின் உண்மை. ஊழ்த்தது - பூத்தது. ஆல், அசை

79. அரி - செவ்வரி. இரி - விலகுற்ற. முல்லை நாறிட - பற்கள் விளங்கிட. நகை - மகிழ்ச்சி,

80 ஊழிகள் பலசெல வமைந்த மன்பதை
யாழியொத் தளப்பரும் வாழ்வின் சீர்வளப்
பாழிகண் டுளமகிழ்ந் தவர்தம் மாட்சியின்
சூழியென் றொருகவி நல்கும் பாக்களின் ;

81 செந்தளிர் பாசடை விரிக்குங் கொம்பரி
னும்பரின் வனவிள வேனிற் செவ்வியில்
வம்பவிழ் பொன்னிற மலர்கள் பூத்தென
வம்புறப் படத்திடை யரும்பு மோவியம்.

வேறு

82 சவிகலை யினைய மல்கு
நிலைபமங் கிலகுங் கோட்டத்
தவிதினைத் தெழுந்த தீயின்
கலைநயந் தொளிருந் தேவர்
கவிமுதற் கலைக ளூட்டச்
சிந்தையி னங்கி காய்ச்சத்
தவவடுந் தருக்கந் தீட்டக்
கூர்ந்தசெம் புலத்தின் வல்லார்.

---

80. மன்பதை - மக்களினம். பாழி - மேம்பாடு. சூழி - நெற்றிச்சூட்டு. ஈண்டுத் தலைமை புலப்படுத்திற்று. ஒரு கவி - ஒருபுலவர்.

81. பாசடை - இலை. கொம்பரின் உம்பரின் - கொம்பின் மேலிடத்தில். வம்பு - மணம். வம்புற - புதுமை உற. படம் - திரை. கொம்பரின் உம்பரின் பூத்தென என்பது. பண்பினின் (79) பாக்களின் (80) ஓவியம் அரும்பு (81) மெனக் கொள்க.

82. சவி - குளிர்ந்த ; இனிய வென்னும் பொருட்டு ; எழில் என்றுமாம். அவி - நெய். தீ - வேள்வித்தீ. நெய்யை உண்டு ஓங்கும் தீயைப் போன்று கலைநலம் உண்டு அறிவின் சுடர் ஒளிரும் ஆசிரியன்மார் என்றபடி. தேவர் - இங்கே ஆசிரியர். கவி முதற் கலைகளென்றார், கலைகளிற் றலைமையானது கவியாதல் தோன்ற. சிந்தையின் அங்கி-சிந்தித்தலாகிய தீ. தவ அடும் தருக்கம் - ஒன்றோடொன்று மிகவும் முரணித் தாக்கும் அளவை முதலிய இலக்கணங்கள். கூர்ந்த - நுணுகிய. கலை நுகர்ச்சியை உண்ணுதலொப்பவும், சிந்தித்தலைக் குளிர் காய்தலொப்பவும், தருக்கந் தெளிதலை எரியுண்ணலொப்பவும் நுவன்று ஆசிரியர் அவ்வவற்றின் இயல்பு புலப்படுத்தியிருத்தல்காண்க. தேவர் ஊட்ட, காய்ச்ச, தீட்ட கூர்ந்த புலத்தினையுடையா ரென்க,

83 நவ்விபூங் கொடியின் மாதர்
சதிர்க்கலை நயந்து கொள்வார்
வவ்விசைக் குயிலி னல்லா
ரிசைக்கலை தேரும் பண்பார்
செவ்விதிற் சிலைக ளோவஞ்
சமைதிறக் கலைகள் கற்பா
ரவ்வயி னுயி ரத்தி
னயந்தவர் நகையி லுய்வார்.

வேறு

84 அன்புகொண்ட தன்பிணையுந் திண்குருளை நண்ணவே
துன்னுளைகள் காற்றசைய மீதுயர்த்தி மாத்தலை
மின்னெறியுங் கண்ணிணைகளங்கியொத்து நோக்கிட
வன்மையொன்றுஞ் சீயவேறு பீடமைந்திருந்தென.

85 மேவிநின்ற மெல்லுழைகள்
தன்னரணை யேன்றிட
வாவியொன்று மன்பினேறு
பொன்னுளை சிலிர்த்திடா
யாவதூறென் றுன்னிநோக்கிக்
காதுகண்முன் சேர்த்திடா
காவலேற்று வெம்மருப்புச்
சென்னியேந்தி நின்றெனு;

---

83. சதிர்க்கலை - நாட்டியக்கலை. வவ்வு இசைக் குயிலின் நல்லார் - கவருந்தன்மையை யுடைய இசைக் குரலையுடைய குயிலை ஒத்த நல்லாரென்க. நயந்தவர் நகையில் உய்வார் - விரும்பிய பொருளைப் பெற்றுத் திளைத்தவரின் மகிழ்ச்சியோடு ஒத்து உவகையோடிருப்பர் என்பது. வல்லாரும் (82) கொள்வாரும், பண்பாரும் கற்பாரும் நயந்தவர் நகையில் உய்வார் என்பது.

84. பிணை - பேடு. குருளை - குட்டி. துன் உளைகள் - அடர்ந்த பிடரிமயிர்கள் காற்றசைய - காற்றிலசைய. தலை மீதுயர்த்தி யென்க. மின் - மின்னலைப்போல. சீயவேறு - சிங்கவேறு.

85. ஊறு - துன்பம். இருந்தென (84) நின்றெனு (85) நின்றதே (86) என்க.

86 ஆர்கலியு மால்வரையுங் காடுகளுஞ் சுற்றுறக்
கார்புனல்கொ ளாழகழி சூழ்ந்தவாரை நாப்பணே
கார்கடோயு மாடமன்னு மந்நகரின் மையமே
வார்மணிக டுன்னுதோகை யேந்துகோயி னின்றதே.

87 துய்யவெண் பளிங்குகொண்
டமைந்துவா னளாவிடா
செய்யகாசு நித்திலத்தி
னொண்வடம ணிந்துமுன்
மொய்யதேசுப் பொன்னினுகி
மன்னறத்தி னுறதாய்
வெய்யமால சூழியானை
மள்ளரோம்பும் வாயிலே.

88 அன்னகோயி லுள்ளிடத்தின்
வெண்பளிக்குப் பித்திகை
துன்னமாழை வண்ணமணி
யிற்குயின்ற மாலைவான்
பொன்முளரி வாவிபுட்கண்
மாவினங்கொள் காணிட
மின்னகைப்பெண் மீன்மதிய
மின்னவோவ மன்னிட;

89 வெண்ணிலவெ ரிக்குமுத்தக்
காழ்வடங்கள் நாறுமென்
வண்ணமலர்க் கத்திகைக
ளேந்துமண்ட பம்பல
நண்ணநாப்ப ணன்னயாவி
னேங்குபொற்பி னுதைத்
தண்கவிகை மன்னணைய
மைந்தமன்று நின்றதே.

---

86. ஆர்கலி - கடல். தோகை - விருதுக்கொடி.
87. மள்ளர் - வீரர் ; ஈண்டுக் காவலாளர். அறத்தின் ஆறதாய் ஓம்பும் வாயில் என்க.
88. பித்திகை - சுவர். ஓவம் - ஓவியம்.
89. நாறும் - விளங்கும் யாவின் - யாவற்றினும். மன்னணை - மன்னனுடைய அரியணை, அணை அமைந்த மன்று என்க.

90 மன்பதைகள் தம்மொழுக்கங்
குன்றிடாம லின்புற
வன்புகொண்ட றத்திறு
சென்றுதெய்வ மஞ்சுவோ
னின்னியனன் றொல்குலத்தான்
செம்புலத்தோன் கல்வியான்
வென்றிவேலன் வீங்குதோளன்
செல்வமிக்கான் வள்ளலே.

91 மானலத்த வின்னியல மாக்களைக் டேர்ந்தவர்
வானறிவர் மன்பதைகள் செல்லுமாறு கண்டவர்
கோனறத்திற் கூறணுகா தாற்றுமாண்பு லத்தினர்
மானவர்க டேசிந்தை செல்லுமாறு செல்பவர்.

92 ஒகைவந்த போதுமன்றி வன்சினம டுப்பினு
மாகமுட்குந் துன்பநேர்ந்த வேலையுந் துளக்குறு
தாகுமுண்மை கண்டுறுதி வேந்திடித்து மாற்றுவா
ரேகநல்ல வாறமைக்கு மாக்குறளின் பெற்றியர்.

---

90. அறத்தின் ஆறு - அறமுறைமை. புலம் என்றது, அறிவு. வீங்கு தோளன் - வெற்றியால் பூரித்த தோளன். வள்ளல் என்றது ஈண்டு அரசன்.

91. மால் நலத்த இன் இயல-விரும்பத்தக்க நலத்தவான இனிய இயற்கைத்தன்மையுடையவான. வான் அறிவர் மன்பதைகள் செல்லும் ஆறு - உயர்ந்த அறிஞராகிய அமைச்சரும் ஏனைய மக்களினங்களும் ஒழுகும் அறிவியல் உலகியல் நெறிகள். கண்டவர்-தெளிந்தவர். கோன் அறம் - அரசனது ஆட்சிமுறை. ஆற்றும் - தம் அமைச்சுத் தொழிலைச் செய்யும். மானவர் - சிறந்தோர். இச்செய்யுளும் மேற்செய்யுளும் அமைச்சர் இயல்பு உணர்த்துவன.

92. ஓகை - மகிழ்ச்சி. ஆகம் உட்கும் - உடம்பு நடுங்கும். வேலையும் - நேரத்திலும். துளக்குறூஉ - அசைதலில்லாது. ஆகும் உண்மை - பொருந்திய உண்மை. உறுதி - உறுதியாக. இடித்தும் ஆற்றுவார் - உண்மைகளை இடித்துரைத்தும் அறிவுறுத்துவார். ஏக நல்ல ஆறமைக்கும் - ஒழுகும்படி நல்ல வழிகளை அமைக்கும். மா குறளின் பெற்றியர் - சிறந்த திருக்குறள் என்னும் நூலைப் போலும் இயல்பினர்.

93 அன்னவர மைச்சராகச் செவ்வியல்ப மைந்திடும்
பொன்மணியும் வேகடம மைந்தொளிசி றந்தென
வன்றிறற்ப டையுமற்றுஞ் சுற்றநட்பு மொற்றுமே
கொன்புலவர் பொன்னுரவு பெற்றரசு மோங்குமால்.

94 இன்னதன்மை வானிறையி
னாட்சியின மைந்தவர்
நன்னராக்க வங்கமெய்தி
யின்பவேலை யுய்ந்திடத்
தன்னிறகிற் காத்தகுஞ்சு
வாழவோங்குங் கோழியின்
மன்னுமோகை மாந்திவீங்கி
யோங்குமன்னர் மன்னனே.

95 வெண்மணற் பரப்பினூடு
சீதநீரி சைத்துற
வண்ணமென் மலர்களேந்தும்
பைங்கொடிகள் புல்லிடுஞ்
சண்பகம டர்ந்தசோலை
புல்லினம ளாவிடப்
பெண்ணரசி யில்லமூடு
பாவையொத்து நின்றதே.

---

93. வேகடம் - சாணை. சுற்றம் - ஐம்பெருங்குழு முதலியன. நட்பு - நட்பரசர் முதலியோர். ஒற்று - ஒற்றர். கொன்புலவர் - மதிக்கத்தக்க புலவோர்.

94. வான் இறையின் - உயர்ந்த அரசனின்; முடிமன்னனின் என்பது. நன்னராக்க வங்கம் - தீவினைவிட்டு ஈட்டிய பொருளாகிய வங்கம். வேலை - கடல். உய்ந்திட - சென்று மகிழ்ந்திட. ஓங்கும் - அதனால் மகிழ்ச்சி மிகும். மன்னும் ஓகை - நிலைபெற்ற உவகை. மாந்தி - உள்ளத்தே கொண்டு. வீங்கி ஓங்கும்-உள்ளம் பெருமையுற்று மகிழும். மன்னர் மன்னன் வீங்கி ஓங்கும் என்க.

95. இசைத்துற - ஒலித்துக்கொண்டு வந்தெய்த. வண்ணம் - நிறம். கொடிகள் புல்லிடும் சண்பக மரங்கள் அடர்ந்த சோலையில் என்க. பெண்ணரசி இல்லம் - உவளகம். ஊடு - சோலையினூடு.

96 பன்னிறம லர்களொன் றுந்
தண்டலையின் மாடமே
பொன்வடிவ மேந்திவண்ண
வோவியங்கள் போர்த்ததா
லின்கலவைத் தொய்யிலோடு
மெல்லிதழ்கள் புல்லிடு
மின்னிமைக்கும் பூணுலாவுங்
கொங்கையாக மொத்ததே

97 ஏழ்நிலைகொண் டோங்குமாடச்
சாளரங்கள் வாயிலிற்
சூழ்பொழிலின் கொங்குமண்டிச்
சீதமாடிக் காலுமே
கேழ்சுடரின் வெப்புமேன்று
மாறுகொண்டு முந்துவான்
வாழ்வரக்கு நோயுமூப்புஞ்
சார்ந்திடாமற் காக்குமால்.

---

96. ஒன்றும் - பொருந்தும். தண்டலையின் - சோலையின் நடுவண் அமைந்த. சூழ நிறைந்துள்ளமையின் போர்த்ததால் எனப்பட்டது. புல்லிடும் - பொருந்தும். தொய்யிலும் மெல்லிதழ்களும் புல்லிடும் கொங்கை என்க. ஓவியங்கள் போர்த்த மாடம் தொய்யில் பூண்கள் முதலியன அமைந்த மகளிருடம்பை ஒத்து விளங்கியது என்றபடி.

97. கொங்கு - மணம். காலும் வெப்பும் என்று என்று தொடர்க. காலும் - காற்றும். கேழ் சுடரின் - விளக்கம் மிக்க ஞாயிற்றின். வாழ்வ அரக்கும் - வாழ்க்கையைத் தேய்க்கும்.

98 வெள்ளையன்னம் பேடொடாடும்
வாவிகொண்ட மாடமே
கள்ளைநாடி வண்டினம்பு
குந்துகோதை மொய்த்திடும்
வெள்ளமாத ரேவலாற்றக்
கிள்ளைதோகை மாடுறக்
கொள்ளைமாமை சிந்தவாண்டு
சாயனங்கை வைகுவாள்.

99 நஞ்சமெய்கண் செவ்விரோச
மர்தளவி னின்னகை
குஞ்சமால முல்லைதூங்கும்
வார்நறும் பனிச்சையே
மஞ்சுமுத்தந் தோய்பணைமென்
கொங்கைதாங்கு மெல்லிடை
பஞ்சியுண்ட மெல்லடிசி
லம்பமேங்கும் வஞ்சியே.

---

98. கள்ளை - தேனை. கோதை - கூந்தலில். வெள்ள மாதர் - கூட்டமான மாதர்கள். மாடுற - பக்கத்தில் அணைய. மாமை - அழகு. சிந்த - தோன்றி விளங்கவென்னும் பொருட்டு.

99. எய் - சிந்துகின்ற என்றபடி. செவ்விரோசு அமர் தளவு இன் நகை எனக் கொள்க. இரோசு - உரோசா மலர். இதழைக் கருதிற்று. பனிச்சை - மயிர்முடியின் ஒருவகை. மஞ்சு முத்தம் - அழகிய முத்துமாலை. பணை - பருத்த. பஞ்சி - செம்பஞ்சிக் குழம்பு. ஏங்கும் - ஒலிக்கும்.

100 வம்புவண்ண மென்மலர்கள்
கொங்குசீத மின்னிசைச்
சந்தமுண்டு மிக்குலகு
வக்கவீசுந் தென்றலின்
சந்தமண்டு மொண்ணுதல்பொற்
பாவைநண்பு வந்தவ
னம்புவியின் மக்களுய்ய
வாளுமாண்ட கையரோ.

வேறு

101 வீழ்மணிப் பிள்ளைச் செவ்வி
மேற்றதி கரந்த தென்ன:
மாழ்மட மெழுந்து பொங்கு
மறிவினி ஞேய்ந்த பண்பின்:
கேழ்கிளர் மலர்தன் பொற்பி
னனையுரு தொக்க பெற்றி:
தாழ்வது குறைவின் றேங்கும்
வாழ்வினிற் றேய்ந்த வண்ணம்;

---

100. வம்பு-புதுமையும் மணமும் செறிந்த. உலகு உவக்க என்க. சந்தம் மண்டும் ஒண்ணுதல் - அழகு நிரம்பிய ஒள்ளிய நுதலையுடைய. பாவை நண்பு உவந்தவன் - அரசியின் கேள்வன். கொங்கு சீதம் சந்தம் உண்டு மிக்க தென்றல் உலகு உவக்க வீசுவது போன்று சந்தம் மண்டும் ஒண்ணுதல் பொற்பாவையாகிய அரசியின் நண்பை உவந்து மக்களுய்ய உலகை ஆளும் என்க.

101. வீழ்மணி - விரும்பத்தகுந்த அழகினையுடைய. ததி - பருவம். இச் செய்யுளின் உவமைகளும் அடுத்த செய்யுளின் முத விரண்டு உவமைகளும் அதன் பின்னிரு வரிகளில் பொருளுக்குக் கொள்ளப்பட்டன.

102 அன்புதான் றழைத்து மிக்க
வருளினிற் செறிந்த செவ்வி:
நன்மனை யறந்தான் புத்தன்
றுறவற முண்ட போக்கின்:
பொன்படு கதிரின் காலைப்
புனையொளி மிகுந்து பொங்கித்
துன்னெழின் மண்ணும் விண்ணு
மணிந்துமேல் வெளுத்த தன்றே.

103 மலையென வெழுந்து மீண்டுந்
தலைமடிந் தழுங்கி வீழ்ந்து
மலைதிரை யலகில் கோடி
மலைவன வுருமும் பௌவம்
கலைமதி முகத்தா ணீங்கி
யலைநளன் மனமே யொப்ப
வலைவளி யுடற்றப் பொங்கி
வெள்ளியின் மிளிரு மன்றே.

104 கானனீர் நார மேந்து
மலைகட லென்று லாவ
மீனமூர் பௌவ மேவு
மயிர்வெளிப் பரப்பிற் றுன்னும்
வானனீர் வளைகள் வண்ணம்
பலவணி யிப்பிக் குப்பை
தேனவாம் வழைபொன் புன்னை
மலர்படு கானன் மாதோ.

---

102. செவ்விபோலவும் என்று உரைத்துகொள்க. போக்கின் - போக்கைப் போலவும். கதிரின் - சூரியனின். துன் - செறிந்த.

103. அலைதிரை - அலைத்து வருகின்ற அலை. மலைவன - முரணுவனவாய். முகத்தாள் - தமயந்தியை. அலை வளி என்க. உடற்ற - சீறி வீச.

104. நாரம் - நீர். அயிர் - நுண்மணல். வால் நல் நீர் - வெண்மையான உயர்ந்த தன்மையையுடைய. வளைகள் - சங்குகள். இப்பி - சிப்பி. தேன் - வண்டுகள்.

105 பானகுங் குருகின் கூட்ட
மார்வழை பயிலப் பொன்னின்
றேனகு மலரின் கொள்ளை
யின்னிரன் மீது சிந்துங்
கானலி னிழலிற் சிற்றில்
கோலினர் சிறுவ ராட
மானகு கண்ணின் மாதர்
முன்றிலி னமர்த லூற்றுர்,

106 அலைகட லேக்கி யுள்ள
மிடைதர முகமும் வாட
மலையுறு மலைக ளூர்ந்து
சென்றதங் கொழுந ருள்ளி
கலிபுற விழந்த பேடே,
யன்பிலா மனமே, நோக்குங்
கலையிலாக் கண்ணே யென்ன
வயர்வுட னுழல மாதோ,

107 பிரிவினின் மல்குந் துன்பிற்
காதலும் பெருகப் பெண்மைக்
கருமணிக் கற்பு மற்க
வணிதுறந் துழலு மாத
ரிருமணி மலருங் காயு
மிலைகளு மிழந்து மஞ்சின்
மருவினி லமுங்குஞ் சாலம்
வேனிலை விழைவ வொத்தார்.

---

105. வழை - சுரபுன்னை.

106. இடைதர - நினைவு இடையீடுபட்டு. மலையுறும் அலைகள் ஊர்ந்து என்க. கலி புறவு - கிளர்ச்சி மிக்க ஆண் புறு. கலையிலா - ஒளியிலாத; நோக்கும் ஆற்றலுடைய ஒளி இலாத.

107. மல்கும் - நிறையும். கருமணி - கண்மணியனைய. அற்க - தங்க. மஞ்சின் - பனியின். மருவினில் - முயக்கில். சாலம் - மரஞ் செடி முதலியன.

108 நலங்கவர்ந் தகன்ற காதற்
றுணைவரை நினைந்து நைந்து
கலங்குமெ முள்ளம் போல்வா
யலைந்தலைந் துழன்று விம்மி
மலங்குறுங் கடலே யென்னை
நலங்கெழு பவழ முத்த
மிலங்குமீன் கொண்டார் செல்ல
வொசிந்தைகொ லென்ற ரற்ற ;

109 அடுவன லுழக்குங் கன்ன
லிரங்கிசைக் குயிலு மேனை
வடிவுடைப் புள்ளும் பாடக்
கொம்பரும் புதலு மாலப்
படுவெயின் மருமம் பாய்ந்த
வடியயி லன்ன தென்றல்
கொடும்பரி விரிய வந்த
காதலர்த் தூதின் மேவ;

110 மாலைவந் திறுத்த தென்னக்
குடதிசை யடைந்த வெய்யோன்
வேலைவா யலைக ளன்ன
முகிற்குலா மிடையிற் செல்லச்
சேலையேய் கண்ணு ரோகைச்
செம்முக மன்ன செக்கர்
சோலையும் புனலுங் கல்லும்
வெளியெலாம் புல்ல மாதோ;

---

108. மலங்குறும் - நிலை கலங்குறும். ஒசிந்தைகொல் - தளர்ந்தனையோ?

109. அடு அனல் - தீய்க்கும் வெயில். கன்னல் - கரும்பின் சுவையைப் போன்ற. ஆல - ஆட. மருமம் -மார்பில். வடி அயில் - கூரிய வேற்படை. பரிவு இரிய - துன்பம் நீங்க. காதலர்த் தூதின் - காதலருடைய தூதைப்போல. மேவ - வந்து பொருந்த.

110. இறுத்ததென்ன - தங்கியதென்னும்படி. அரற்ற (108) மேவ (109) மாலைவந்திறுத்த தென்க. குட திசை - மேற்குத் திசை. வெய்யோன் - சூரியன். வேலைவாய் - கடலினிடத்து. செல்ல - சென்று மறைய. சேலை ஏய் - சேல்மீனை யொத்த. ஓகை - மகிழ்ச்சி. மேவிய செக்கர் - செவ்வான ஒளி. புல்ல - பரவிப் பொருந்த.

வேறு

111 ஈன்றவர் மகிழ்வுறு மின்ப மாவெளி
மீன்குல மரும்பிய வன்ன பிள்ளைகள்
வான்மணற் பரப்பினில் வளையின் குப்பைக
ளான்றபொன் னுவந்துபுள் ளிரிய வீசுவர்.

112 இசைமுகைத் தின்புற வெழுந்தென் செவ்விய
ரசைபனிக் கால்நறுந் தாதி னாடுவர்
நசையினர் மணல்வெளி யில்லங் கோலுவர்
வசையறு பொற்பின ருள்ளந் தூயவர்.

113 மரகதக் கடன்மணி தெறித்த செவ்வியி
னரைமல ரேந்துவ தும்பைப் பைவெளி
விரைநற வீட்டுவ வண்ணப் பூச்சிக
ளிரிவன கொண்டனர் மகிழ்ந்து நீக்குவர்.

114 திரைகடற் றட்பமுண் டகவும் மெல்வளி
விரைமலர் மணநசைந் துலவுஞ் சோலைவாய்
மரைவனம் நுழைந்தென வண்ணப் பிள்ளைகண்
முருகுடைப் புள்ளின மலையச் செல்லுவர்.

---

111. மீன்குலம் அரும்பிய என்றது : மிகுதி, சிறுமை, விரைவு முதலியவற்றிற்கு. வளையின் - சங்கின். ஆன்றபொன் - பெருமை யமைந்த சொக்கப் பொன்னிறம் ; அழகுமாம் ; சங்குகளின் உருவழகு. இரிய - நீங்க.

112. முகைத்து - அரும்பி. எழுந்தென் - மலர்ந்தது போன்ற. அசை பனிக்கால் - அசையும் குளிர்ந்த காற்று. அசையும் குளிர்ந்த காற்றில் ஆடும் பூந்தாது போன்று ஆடுவர் என்க. நசையினர் - விரும்பி.

113. மணி - இங்கே முத்து. தும்பைப் பை வெளி - தும்பை மலர்ச்செடிகளையுடைய பசிய புல் வெளிகள். விரை நறவு - மணம் பொருந்திய தேன். இரிவன கொண்டனர் - அஞ்சியோடும் வண்ணப்பூச்சிகளைக் கையிற் கொண்டனராய்.

114. அகவும் - அசையும். மரை வனம் - தாமரைக் காடு. முருகு - அழகு.

115 தேனுகர் வண்டின மிரிய வொய்யென
கானவி ரிணர்த்தொகை மெய்யிற் சூடுவர்
மாணெழி லோவியப் பண்ணை பூத்திடும்
வாணகை பொருவுவர் திரிவர் சோலையே.

116 நலந்துறு மென்னடை யன்னங் கொக்கினம்
பொலந்துணர் விரித்திடுங் கோடு திரிதரக்
கலம்படு பொருளென விலையிற் பூவுற
வலம்புறு புனற்கழிப் போக்கி நின்றவர்,

117 உறுமலர்க் கலஞ்செல வசைந்து விந்தையி
னருகிருந் தலவனு மாமை நோக்கிடப்
பொருதிலை கவிழ்த்திட மீன்கள் துள்ளுநர்
பரிவறு சிந்தையர் மகிழ்வர் பிள்ளைகள்.

118 மகிழ்வெனும் பொழிலிடை மலர்ந்த பூக்களோ !
வகமுவந் தவண்பயில் கிளியின் கூட்டமோ !
நகுமிசைப் புட்களோ ! களிக்குந் தேன்களோ !
தருமவை யாவையே வோகை மக்களே?

---

115. இணர்த்தொகை - மலர்க்கொத்து. ஓவியப் பண்ணை - ஓவியம் போன்ற பண்ணை. பண்ணை முகைத்திடும் - மகளிர் கூட்டம் அரும்பிடும். பொருவுவர் - ஒத்து விளங்குவர்.

116. துறு - சேர்ந்த. கலம், இலைக்கும்; அதனிடையே விளங்கும் அழகிய பொருள், மலர்க்கும் உவமம். அலம்புறு புனலையுடையன என்க.

117. மீன்கள் கவிழ்த்திட என்க. பரிவு அறு - துன்பங் காணாத.

118. பூக்களோ, கிளியின் கூட்டமோ, புட்களோ, தேன்களோ என்றது, மக்களின் மலர்ச்சிக்கும், மழலைக்கும், விளையாட்டுக்குஞ், செயலுக்கும் என்க. ஓகை - உள்ளக்கிளர்ச்சி மேவிய.

வேறு

119 நீளிணர் விரிமா நாக
மனம்படுஞ் செம்பே யன்ன
வாளணி தளிர்கள் நாறுந்
துறுமலர் மரங்க ளேந்த
நாளலர் பல்கேழ் தாங்கும்
பசும்புதற் றொகுதி துன்னும்
பாளைகள் செம்பொன் காலுந்
தென்னையுங் கமுகு மார்கா.

120 நிலமுறு மலர்க டைக்குஞ்
செந்தளி ரடிக ணோவ
வுலவிடும் பாவை மார்க
ளுணங்கிடை நலியத் தாங்கும்
நிலவணி செம்பொன் கால
வாரெழில் வழையின் கொம்பர்
பலநிரன் மலர்க டுன்னக்
காவிடைப் பெயர்வ வொத்தார்.

121 விளரியங் குதலை மாதர்
நிலவெரி மூரல் கால,
மிளிரிணைக் கண்க ணோக்கி
யினமெனச் சேல்க டுள்ள,
முளரியம் மலர்க ளாடக்,
கரையுறு நீலம் நோக்க,
வுளரிதழ்க் குட்டந் தேன்கள்
புட்குல மலையத் தோய்வார்.

---

119. வாள் - ஒளி. தளிர்கள் - தளிர்களும். செம்பொன் காலும் - செம்பொன் னிறத்தைச் சொரியும். ஆர் கா - நிறைந்த சோலை.

120. நிலவு அணி - ஒளியினையுடைய அணிகலன்கள். செம்பொன் - செம்பொன்னிறத்தை. நிரல் - வரிசை. நோவ நலிய பெயர்வ ஒத்தார் என்பது.

121. விளரி அம் குதலை - நிரம்பிய இனிய குதலை. மூரல் - பற்கள். குட்டம் - நீர்நிலை. தேன்கள் - வண்டுகள். தோய்வார் - நீர் விளையாடுவர்.

122 புனலிடை யழுந்தத் தைப்பார்
மரைவன மொளித்து நிற்பா
ரினமணி சிதரி யன்ன
புனற்கர மிரைத்துச் செல்வா
ரனலிடை மெழுகின் பெற்றி
மனம்படத் துணைவர் நோக்கிக்
கனமரைக் கயத்தி லுற்ற
வணங்கரென் றயிர்க்கும் பொற்பார்.

123 ஆடினர் களிப்பி லாடி
யரிதினிற் கரையைச் சேர்ந்து
கூடிய பண்ணை மற்றுந்
துணைவரோ டளவ ளாவி
நாடிய வண்டின் கொள்ளை
தோய்மண மலர்க டேர்ந்து
சூடியுந் தெறித்தும் பின்னர்ப்
பொதும்பரின் மகிழ்வர் மன்னே.

124 ஆடக மிளிரக் கான்ற
நீள்சுட ரென்னத் தாழைக்
காடுகள் மலர்க ளேந்த
விடைபயி லாற்று நீத்தம்
பாடலக் குழம்பே யொத்து
நிறமல ரீர்த்துச் செல்லச்
சேடவிர் மாதர் கண்ணின்
மீன்குலம் பிறழு மாதோ.

122. தைப்பார் - நீரின் உள்ளே நீந்திச் செல்வார். மரை வனம் - தாமரைக்காடு. புனற்கரம் - புனலைக் கரத்தால். மரை - தாமரை. அணங்கர் - தேவ மாதரோ. அயிர்க்கும் - ஐயுறும்.

123. பண்ணை - ஆயத்தார். வண்டின் கொள்ளை - வண்டு களின் கூட்டம். தோய் - பொருந்தப்பெற்ற. தெறித்தும் - வீசி யும். பொதும்பர் - சோலையில்.

124. ஆடகம் - பொன். நீத்தம் - வெள்ளம். சேடு - திரட்சி, அழகுமாம்.

125 நிறைபுன லலம்புங் குட்டக்
கோடுறு மரத்தி னீழ
னறையுமிழ் கஞ்சங் காவி
யலைதிரை தேனின் மேவ,
வுறைமணி யிலைக டாங்கப்,
பசும்புத லலைய, வெள்ளைச்
சிறைவிரி புட்க ணீங்க,
மீனின மும்பர்த் துள்ள,

126 நீரிடைக் கும்ப மேவ,
நிறைந்தவை நுசுப்பிற் றுங்க,
வாருமென் றிவலை சிந்த,
நூபுர மரற்றத், துன்னும்
வாரொளி முறுவல் பொங்க
முரலிசை யளியின் கூட்டந்
தாரணி கொண்டை மொய்ப்ப
மங்கையர் பெயர்ந்து செல்வார்.

127 கதுமெனப் பெயரு நீர்புட்
பெருங்குழாம் வான மொய்ப்ப,
வதருடைச் சோலை மல்கு
மின்னிசைத் தொழுதி பாடத்,
ததைமலர்க் கொள்ளை சிந்தத்,
தாதெலாம் வெளியி லூரப்,
பொதுளிய யாழி னோசை
யிடையெழும் பாட லொத்தார்.

---

125. கோடுறு மரத்தின் - கரையிற் பொருந்திய மரத்தினது. நறை - மணம். தேனின் - தேன்போல; யாலை ஞாயிற்றின் பொன்னிறம் தோயப் பெற்றமையின் நீர் தேன்போன்றதாயிற்று. கஞ்சமும் காவியும் என்க. கஞ்சம் - தாமரை. உறைமணி - நீர்த்துளியாகிய மணிகளை. உம்பர் - மேலே.

126. ஆரும் மென்திவலை என்க. நூபுரம் - சிலம்பு. அளியின் - வண்டுகளின்.

127. அதருடை - வழியையுடைய. இசைத்தொழுதி - இன்னிசை பாடும் பறவைக் கூட்டம். ததை - ததைத்த. ஊர - பரக்க.

128 இருவயற் பரப்பிற் றங்கு
நீர்நிலை, யுழவு செல்லு
மெருதுகள் காலிற் றுழ்ந்த
திவலைகள், காலிற் பாயு
மெருமைக ளெறிந்த நீரம்,
நுடங்கிடைக் கடைச்சி யர்க
ளிருவனக் கயத்தி னீந்தத்
தெறித்தநீர்க் கொள்ளை மன்னே;

129 விசும்பரி யலையிற் பொங்கும்
வெண்முகி லுலவுங் கொள்ளை,
தசும்பெலை கவர்ந்த தன்ன
திரைமணி யாழிப் பப்பு,
பசுங்கட லழுவ மன்ன
நெற்பயி ரலையும் பண்ணை,
யசைந்தொளிர் செம்பொன் வாரி
நிகர்மணி யேனற் பாழி;

130 செறிமரச் சாலை மல்கும்
புட்குல மினிது பாட,
நறுமலர் வாகை சிந்தத்,
தேன்படு மலர்க டாழ,
நெறிபடுஞ் சிவப்பும் வெள்ளைப்
பன்னிற நிரைகள் செல்லப்,
பறிதுக ளும்ப ரூரக்
கோவல ரிசைத்துச் செல்வார்;

---

128. காலில் பாயும் - கால்வாயிற் பாயும். நீரம் - நீர். கடைச்சியர்கள்-உழத்தியர். வனம் - நீர். நீர்க்கொள்ளை-மிகுதியான நீரும்.

129. தசும்பு எல்லை என்க ; பொன் வண்ணமான திசைகள் என்றபடி. தசும்பு - பொன். பப்பு - பரப்பு. அழுவம் - பரப்பு. பண்ணை - கழனியில். செம்பொன் வாரி என்றது, தினைக் கதிர்களின் ஈட்டம். ஏனற் பாழி - தினைப்புனத்தின் பரப்பு.

130. வாகை-வாகை மரம். தாழ-சிந்த. நிரைகள்-பசுக்கூட்டங்கள் பறி துகள்-பிரிந்தெழுகின்ற புழுதிகள். உம்பர் ஊர - வானிற் பரக்க.

131 இவ்வணம் யாரும் யாவும்
விரிசுடர் நல்கும் வாமச்
செவ்வண மிகுதி யாடிச்
சுடரொளி மிலைச்ச மாதோ
செவ்வணங் கன்ன மாந்தி
மன்றிடை யயர்ந்தார், வீங்குஞ்
செவ்வணச் சாறு தோய்ந்து
களித்தனர் செவ்வி யேய்ப்ப;

132 அசைவளி தண்மை யுய்ப்ப
வானிடைச் செறியும் வானந்
திசையுறப் பரவி யாலி
யினமணி சிந்தப் பைம்புற்
பசுவெளி திரியும் புட்கள்
நிரையின மிரியப் பண்ணை
யிசைதரத் தேரை யொய்யென்
றில்லிறை வாரிபொங்க;

133 மன்றவிர் முல்லை பூப்பக்
கலுழிகள் பொங்கக் கொம்ப
ரின்றுணைப் புட்கள் கூடி
யளாவிட வார்வ முந்தக்
கன்றுக ளாவைக் கண்டு
கரைந்திடக் கற்பின் மாதர்
சென்றதங் கணவர் சேருஞ்
செயலறிந் துவப்பர் மன்னே.

---

131. வாம - அழகிய. மிலைச்ச - சூட. செவ்வணங் கன்னம் மாந்தி - செவ்வண்ணம் காதாற் பருகி. வண்ணம் என்றது இங்கே இசைப்பாட்டு ; சந்தம். செவ்வணச் சாறு - ஒப்பனை பொருந்திய விழா.

132. வானம் - மேகம். ஆலி - மழைத் துளிகளாகிய. இனமணி என்றது, கதிரவனது மாலை யொளியில் பன்னிறமணிகள் போன்று ஒழிரும் மழைத்துளிகளை. பண்ணை - வயலில். தேரை - தவளை. இல்லிறை வாரி - வீட்டின் இறப்புகளிலிருந்து இழியும் மழைநீர் வெள்ளம்.

133. கலுழிகள் - காட்டாறுகள்.

## வேறு

134 உலகெலாஞ் சுடரொளி காலுந் துள்ளியி
னலகிலா வெழிலணிந் தொழிய வல்லுற
விலகுமாண் வையத்திற் களித்த வுள்ளமே
விலகித்தன் னிலையினிற் றைத்த தொத்ததே.

135 மீண்டன புட்குல மிருக்கை சேர்ந்தன,
மீண்டன வுடுக்குலம் விசும்பின் பப்பெலா,
மீண்டது நறுமணந் தாங்கித் தென்றலே,
மீண்டது காதலர் முகத்திற் செவ்வியே.

136 துன்னிய சண்பக நீழன் வீதியிற்
றுன்றிய சுண்ணமும் புனைய முன்றிலைத்,
தென்றலிற் கொம்பரு நிழலுந் தூங்கிட,
வின்னிய லிசைப்பயி றும்பி மாலுற;

137 மின்னிடும் பூணொளி மல்கிற் சிந்திடப்
பின்னியற் பனிச்சையு மலரொ டாலவே
பன்னிற வாடைக ணுனைகள் பாவிடத்
துன்னிய வளைகளுஞ் சிலம்ப மெல்லெண;

138 மேகலை தாங்கிய வணங்க மெல்லிடை
நோகுமெல் லடியெனப் புலம்ப நூபுரம்
பாகலை யின்னிசை நல்கச் செவ்விதழ்
தோகையர் மணிச்சுடர் வலம்வந் தேத்துவார்.

---

134. தைத்தது - பொருந்தி யடங்கியது.

135. முகத்திற் செவ்வி மீண்டது என்க.

136. தூங்கிட - அசைந்திட.

137. பனிச்சை - ஒரு வகை மயிர்முடி. நுனைகள் - நுனிகள்.

138. பாகு அலை - பாகை ஒத்த; பாகு ஒத்த இசை.

139 மண்டுபே ரெழிலவ ணலமன் காதலிற்
கண்டன னம்பிகா பதியென் செவ்வியிற்
கொண்டது வையமு நிலவின் வீக்கமே
வுண்டது காதலே யன்ப ருள்ளமால்.

140 வண்ணமா லலைபயில் கடலின் பப்பெலா
மண்ணுலாஞ் சிகரியிற் றவள வில்லமேல்
விண்ணளா வியமலைக் கோட்டின் வல்லிக
ணண்ணுபூங் கரையிடைப் பயிலு நீத்தமேல்;

141 அசையுநீண் மரப்பொலன் கொம்பர் முற்றநீண்
மிசையினி னீண்டிய மாதர் கோதையி
னசையுலாம் நகையமர் முகத்தின் மெய்யினிற்
றிசையன மறுகினி னிலவின் வெள்ளமே.

---

139. எழிலவள் என்றது, சோழன் புதல்வியை. அவள் நலம் என்றது, அவள் அன்பு அழகு முதலியன. மன் - ஆக்கமுணர்த்தும். அம்பிகாபதி - கம்பர் புதல்வன். வீக்கம் - மலர்ச்சி.

140. மண் உலாம் - ஒப்பனை விளங்குகின்ற. சிகரியின் - கோபுரங்களுடைய. வல்லிகள் - பெருங்காடுகள். நீத்தமேல் - வெள்ளத்தின்மேல்.

141. பொலன் - அழகிய. மிசையினின் - மேலிடத்தில். கோதை-கூந்தல். நிலவின்வெள்ளம் மிளிரும் என ஒரு சொல் வருவித்துரைக்க.

## வேறு

142 ஆகந்தரு மிருமாநகி லணிகச்சுடை மடவார்
பாகந்தரு குதலைதரு கனிவாயுடை யிளையார்
மாகந்தரு மழைமாட்சியின் மனமன்னிய களிப்பா
ராகங்கவர் வனமஞ்ஞையி னியலார்புனை கலனூர்;

143 மொய்வார்நில வெரிதந்திடு
தளவின்னிர னகையார்
பெய்யேர்சரி யலர்தந்திட
விறைதூங்கிடு மெழிலார்
நெய்யார்புனை மலர்மொய்த்திடு
மளியார்நறுங் குழலார்
வெய்யார்கணைத் துணையெய்திடும்
வெருள்கண்ணுழை பொருவார்;

144 மாகந்தொடு குடுமிப்புனை மனைமாநிரன் மருகே
நாகம்பிடி மதமாமலை யொடுசெல்லுறு பரிசி
லாகம்முறத் தமைநண்ணிய துணைவர்மருங் குறவே
யேகும்பொழுதலர்மெல்லடி யலம்பும்மணிச்சிலம்பார்;

---

142. நகில் - கொங்கை. மாகம் - விசும்பு. இளையார் - இளைய மகளிர்.

143. மொய் - செறிந்த. தளவின் நிரல் - முல்லையரும்பொத்த வரிசையான. பெய் ஏர் சரி அலர் - முன்கையில் பெய்யப்பட்ட அழகிய வளைகள் ஓசையை உண்டாக்க. நெய் - நறுமணப் பூச்சு. அளி ஆர் - வண்டுகள் நிறைந்த. கணை - கணையால். கணையால் துணையை எய்திடும் என்க. உழை பொருவார். மானினை ஒப்பார்.

144. நாகம் பிடி - இளைய பெண்யானை. மத மா மலை-களிறு. பரிசில் - தன்மை யொத்து.

145 நேயங்கனி மணிக்கண்ணகு
மணிமென்னடைப் பெடையோர்
போயொன்றிட மனமோங்கிய
கலிப்போக்குடைப் புறவின்
தோயஞ்சிறை பொலிமெல்லியன்
மடவார்பொரு பெடையின்
வாயண்மிய மதர்ச்சேவலின்
சிலர்மாதரொ டகல்வார்.

146 சென்றார்சிலர் துணைதம்மொடு
நிழல்சென்றிடு தகவின்
மின்னார்வளை நனிதுன்றிடு
மயிர்வெண்பரப் படைந்தார்
பொன்றுதகு வழையார்நிழ
லமர்வாருரை கனிவார்
முன்னாலைத் திவலைதரு
மமுதப்பனி துய்ப்பார்.

147 வண்பொன்மலர்க் கணைதந்தன
னிளையார்மன மலைப்பான்
திண்வன்மன மநங்கன்பணி
கொண்டானென மதியோன்
தண்டுன்கதிர் சொரிவானணி
வெளிமாக்கட றார்ப்பக்
கண்மைபடு மனமேயெனப்
பொலிபாரிடை யுறுமால்.

---

145. கலிப்போக்கு - கிளர்ச்சி மிக்க போக்கு. 'மடவார் பொரு பெடையின்' என்னுமிடத்து, மடவார், உவமைக்கண் வந்தது.

146. நிழல் சென்றிடு தகவின் என்றது உவமை. அயிர் - நுண்மணல். அமுதப் பனி - உடம்புக்கு நலந்தருந் தண்மை.

147. அலைப்பான் - அலைக்கும் பொருட்டு. வெளிமாக்கடல் - வெளியாகிய மாக்கடல். கண்மை - காட்சி. கண்மை படும் மனம் - கவரப்பட்ட காட்சியில் வயமாயிருக்கும் மனம்.

148 சோழன்றரு திருமாமகள் கற்பின்மணி யழகி
ஞழன்பினன் விழைவானிறை நிலையான்மன நிலையின்
வேழம்கனி பலகோடிகண் மலையும்பரி சலையென்
கேழம்வெளி கையேந்துபு மதிவேட்டது கடலே.

149 மதிதந்திடு மிகுவெண்ணில
வயிர்வெண்கடல் படிவார்
கொதிவெங்கணை யுருகட்கடை
யனமென்னடை மடவார்
கதிமாவெழி லமுதக்கட
லுழல்காமனைப் பொருவார்
பொதிதண்மலர் மணமாக்கட
றிரிவண்டினை யனையார்.

---

148. சோழன் மகளை விரும்பிய அம்பிகாபதியின் மன நிலையைப் போல என்றற்கு, மனநிலையின் எனப்பட்டது. யானைகள் பல கோடி, தம்முள் மலையும் பரிசு அலைக்கு உவமை. கேழ் அம் வெளி கை - ஒளிமிக்க அழகிய வெள்ளிபோன்ற கைகளை. ஏந்துபு - ஏந்தி.

149. அயிர் வெண்கடல் - நுண்மணலாகிய வெண் பரப்பு. எழிலமுதக் கடல் - எழிலாகிய அமுதக்கடல் என்க. காமனை ஒப்பார் என்றது இளைஞரை. பொருவார்-ஒப்பார். மண மாக்கடல் - மணமாகிய பெரிய வெளியில். படிவாராகிய மடவாரது எழிலமுதக் கடல் எனவும், காமனைப் பொருவார் திரிவண்டினை யனையா ராயினர் என்பது.

வேறு

150 அரிமலர்ச் சாந்தக் கான்மென்
கால்கொளக் காதல் வெள்ள
விரிகட லாழும் பெட்பர்
வெறிமலர் புனையு முத்த
மெரிசுடர் நிலவு மாந்திப்
பாவையர் குதலை நல்க
அரிதுணர் மனத்தின் மக்கள்
துய்த்தன ருயங்கி நிற்ப.

151 அலைகொடி துவளு மாட
மணிநில விருந்த வண்ணர்
நிலைதிரி கடலின் பாங்க
ரடைந்தன ரினிய ராகக்
கலைமலி தேவர் கோயி
லுற்றன ரன்பிற் றாழக்
கலியிசை நடனந் துய்ப்பார்
கண்டமு மரங்கு முற்றார்.

---

150. அரி - அழகு. சாந்தக் கான் - சந்தன மணத்தை. மென் கால் கொள - மெல்லிய காற்றுக்கொண்டு அசைய; என்றது, தென்றல் வீச என்னும் பொருட்டு. பெட்பர் - விரும்பினர். புனையும் - புனையப்பெற்ற. நிலவு - நிலவினை. குதலை என்றது, அவர்தம் இளைய இனிய மொழிகள். மனத்தின் - மனத்தினால். துய்த்தனர் உயங்கி நிற்ப - துய்த்து அதன்கண் தம்மை மறந்து நிற்க என்பது.

151. நிலவு - நிலவொளியில். நிலைதிரி - எஞ்ஞான்றும் அலையினால் நிலைதிரிதலையுடைய. கலைமலி தேவர் கோயில் - சிற்பம் முதலிய கலைகள் நிறைந்த தேவரது கோயில். அன்பில் தாழ - தெய்வ அன்பில் மனம் ஆழ. கலி - கிளர்ச்சி மேவிய. இசையும் நடனமுந் துய்ப்பார் முறையே கண்டமும் அரங்குமுற்றார் என்க.

152 செம்மையி லாழ்ந்த பண்பா
ருயர்மனத் தினிது தந்த
தொய்ம்மையில் புலமை சான்ற
வருட்கவி மாட்சி யேய்ப்பப்
பொம்மெனச் சுரும்பு மொய்க்கு
நறுமணத் தெரிய லுங்கி
யும்பரிற் றோயுங் கும்பஞ்
சுடரவிர் மாடக் கண்டம்.

153 பதுமைக டுவன்றி நிற்ப
நறுமணக் கோதை தூங்கப்
பொதுளிய லவிர மின்னு
மணிச்சுடர் நிலவை யேய்ப்பப்
புதுமண வின்பந் துய்த்தா
ருள்ளுறு நலமே யென்னக்
கதுவொளி பொலியுங் காழின்
மண்டப மதனின் மன்னோ.

154 மடலவிழ் புதிய மொய்ய
நறுமண மலர்கொள் கூந்தல்
சுடரொளிப் பூண்கொண் மேனி
களிர்மதி முறுவ னல்லார்
மடமுணு மறிவின் மாந்தர்
குழுவொடும் பயில நாப்பண்
படரொளி மணிகண் மின்னு
மாடக மேடை மீதே.

---

152. தொய்ம்மை - என்றது, ஆற்றலின்மை. ஏய்ப்ப - ஒப்ப. பொம்மென - பொம் என்னும் ஒலிக்குறிப்பு. தெரியல் - மாலை. உம்பரில் - வானுலகில். தோயும் - எட்டும்.

153. துவன்றி - நெருங்கிப் பொருந்தி. தூங்க - தொங்கி அசைய. கதுவு ஒளி - படிந்த ஒளி. காழ் - பளிங்கு.

154. களிர் - குளிர்ச்சி மேவிய. மடம் - பேதைமை; மென்மையுங் கொள்க. ஆடகம் - பொன் வண்ணமான நடமிடும் இடமாகிய.

155 மெல்லியல் பொலிய லுற்றாண்
மறுவிலாச் செம்பொன் மேனி
வில்லிடு மணிக டாங்கிப்
புதுமணத் தெரியல் சூடி
யெல்லிடு முறுவல் கானு
முகமதி யிலகக் கஞ்சச்
சொல்லிசை நங்கை யன்னா
ளின்னிசை முரல மாதோ.

156 தளையவிழ் மலரி னுப்பண்
புதுமணங் கமழ்ந்த பண்பின்
திளையின்பப் பெருக்கிற் றேன்றுங்
கணிப்பரு நலக்கொ ழுந்து
தளவுறு முறுவ லென்னத்
துவரிதழ் வீறும் பொற்பின்
முளையிசை செவ்வி நல்லாள்
கனியித ழிடையின் மேவ.

157 மணிவடஞ் சாந்து தோயும்
பணைநகி லுழையின் கண்ணார்
திணிதடந் தோளர் மாந்தர்
விழைமன மிசையின் மொய்ப்பக்
கணைபயி லீலுண் கண்ணு
மரிபடர் கமலக் கண்ணும்
பணைத்தெழு மிசையி னல்லா
ணல்லுருத் தோய மாதோ.

---

155. வில்,எல்-ஒளி. கஞ்சச் சொல்லிசை நங்கையென்க. கஞ்சம் - தாமரை மலரில் வீற்றிருக்கின்ற. மண்டப மதனின் (153) ஆடக மேடை மீதே (154) நங்கையன்னாள் இசை முரல என்பது.

156. தளை - கட்டு. கணிப்பரு - அளப்பரிய. தளவு - முல்லையரும்பு. முளை இசை - முகிழ்க்கும் இசை. இசை, இதழிடையின் மேவ என்பது.

157. கண்ணாரும் மாந்தருமாகிய அவையினர் மனம், இசை மாதின் இசையிற் செறிய, அவ்விரு திறத்தாரது கண்ணும் அவள் நல்லுருவிற் படிய என்றபடி.

158 அவிழித ணடுவி னின்ற
குவியித ழுருவ மென்ன
விவர்மணிச் சிறகின் றேன்கண்
மொய்த்திடுந் தேனே யொப்பச்
சுவைகொள நசையு முள்ளந்
தோய்ந்திடுங் கவிச்சி ரென்ன
வவைநடு விருந்தாள் கொங்கி
னிசைதரு மலரி னல்லாள்.

159 தினையன விதையிற் ருேன்றும்
வனைமலர் மரமே யன்ன
நனையுறும் பருவம் பூப்ப
நிறநறும் வீவந் தென்ன
மனதினற் கருத்துப் பொங்கி
சீர்கவி யான பண்பிற்
கனையெழின் மங்கைச் செவ்வி
பெதும்பைநின் றெழுந்த பொற்பின்.

---

158. அவிழ் இதழ் - விரிந்த இதழ்களின். சிறகின் தேன்கள் - சிறகினையுடைய வண்டுகள். கோங்கு மலரைப் போன்ற நல்லாள் என்பது. மலரொன்றின் வெளியிதழ் சில விரிந்து உள்ளிதழ் சில அவிழாது நடுவில் கூம்பி நிற்குங் காட்சியே முதலடியில் வந்த உவமை.

159. 'தினையன' என்றது சிறுமை புலப்படுத்திற்று. பெதும்பை நின்று - பெதும்பைப் பருவத்திலிருந்து. இச் செய்யுளில் வரும் உவமைகள் அடுத்த செய்யுளில் வரும் பொருளொடு பொருந்தும்.

160 மஞ்சையி னிறங்கொ டோகை
விரிந்துவிண் வில்லொத் தென்ன
நெஞ்சையு ணிலவின் வீக்கம்
நிறைமதி யெழுந்த வண்ணம்
கஞ்சமொண் வதன நல்லாண்
முரலிசை தளிர்த்து வீங்கிச்
செஞ்சவே பொலிந்து தோன்றும்
கழைப்புத னிகர்த்த தன்றே.

161 இயனலஞ் செழித்த நங்கை
மகிழ்மன மெழுந்து பொங்கி
மயனல மேனி தாழ
விழைகருத் தலர்ந்த பெற்றி
பெயனலத் திவலை தாழ
வுண்ணிவந் தொளிருஞ் செய்ய
நயமணிக் கதிரின் பொற்பி
னியத்திடை யிசைத விர்ப்ப.

---

160. மஞ்சை - மஞ்ஞை; மயில். விண் வில் - வானவில். நெஞ்சை உண் - மனத்தை விரும்பச் செய்யும். கழைப் புதல் - மூங்கிற் புதல்; அதனை உவமை கூறினர், அடி சிறுத்துத் தலைவிரிந்து உருநலன் மிக்க காட்சியாய்த் தோன்றுதலின்.

161. இயல் நலம் - இயற்கை நலம். மயல் - மயல் விளைக்கும். பெயல் நலத் திவலை - உருநலமுள்ள மழைத்துளி. மழை பெய்யும் போது கதிரவன் ஒளி மழைத்துளிகளை மிளிரச் செய்யும். அது போன்று பல வாத்திய ஒலிகள் வளம்பெற அவைகளைக் கதுவி எழும் இசைப்பாட்டென்பது.

162 கழைவருஞ் சாறு மொய்ய
தண்ணொளி முத்தத் தூறும்
விழைமன மதர்க்குஞ் செய்ய
பெண்ணுரு வேந்து மாண்பும்
தழைசுவை மழலைச் சொல்லு
மடர்ந்தெழு முல்லைக் கொங்கு
மிழைநலம் பெருகும் பண்பி
னிசைத்திறம் பெருக மாதோ.

163 வலியனுங் குயிலு மோகைக்
கலிங்கமு மின்ன புள்ளுங்
கலிமனத் திசைத்த வோசை
பொருமெனச் சொல்லப் போமோ?
மலிசுவை யிசையின் பெற்றி
நங்கையின் சுடரும் வாம
மலர்மதி முகமு மேனி
யெழிலலா னிகர்ப்ப தென்னோ?

---

162. சாறு, ஊறு, உரு, சொல், கொங்கு என்பன முறையே சுவை முதலிய ஐம்புல வின்பங்களை உணர்த்தும். அவை ஐந்தும் இழைநலம் பெருகும் பண்பின் என்பது.

163. ஓகை - உவகையுடைய. கலிங்கம் - வானம்பாடி. கலி மனத்து - தம்முடைய கிளர்ச்சி மிக்க உள்ளத்தில். பொரும் என - அப் பறவைகளின் இசையை நங்கையின் இசை ஒக்கும் என. வாம- அழகிய. முகம் மேனி எழிலை நிகர்ப்பதன்றி வேறு நிகர்ப்பதென்னோ வென்பது.

164 கலைவளர் துய்த்து வீங்கு
மனப்பரி சுயர்ந்த மாடங்
கலையிய லாற்று நன்றி
னிலவிடுந் தசும்பு தாங்கி
யலைகட லழுவ முண்ட
மண்டபம் காழிற் கொண்டு
சிலையுரு முகிழ்க்குந் தூண்க
ளாயிடை நின்ற பொற்பின்.

165 நறுமணத் தெரிய ருழப்
பலவண மமைய மாதர்
முறுவலின் சுவரிற் செய்ய
வோவியந் தூங்க வெண்ணின்
மறுவினன் மணிக ளேந்துஞ்
சிதநெய் விளக்க மின்னத்
துறுநில வெரிக்க வும்பர்
நிவந்தொளி ரரங்கு மன்னோ.

---

164. நன்றின் - நலத்தை யொப்ப. அழுவம் - பரப்பு. அலை கடல் அழுவம் உண்ட - அலை கடலின் பரப்பை ஒத்த.

165. தெரியல் - மாலை. வணம் - வண்ணம்; நிறம். துறு - செறிந்த. நிவந்து ஒளிர் - உயர்ந்து விளங்குகின்ற.

166 நிறைநலன் வதியுங் கற்பின்
கன்னியின் மகிழு முள்ள
மிறைதன துள்ள முண்டான்
காதலே தைத்த தென்ன:
வறைகலா வாழப் பௌவ
வெழிலிடை மனமே யென்னக்
கறையிலா நிலவு மீன்க
ணிகர்வடந் தாங்கி நிற்ப.

167 நடுவிடை பொலியுந் துய்ய
பளிக்குநன் மணிகண் மின்னும்
வடுவிலாச் சதுக்கமொய்ய
மணிச்சுடர் மிலேச்ச நின்றாள்
கடுவுமிழ் கண்கள் பூத்த
முகமதித் தாழுங் கோதைப்
பிடியிடைப் பொன்னின் மேனி
தளிரடிப் பணைத்தோ ணங்கை.

---

166. கற்பின் - கற்பினையுடைய. அறைகலா - சொல்ல முடியாத; மிகுந்த என்னும் பொருட்டு. ஆழப் பௌவ எழில் - ஆழமாகிய கடல் போன்ற அழகு. கறையிலா - ஒளி மிக்க என்னும் பொருட்டு. மீன்கள் என்றது இங்கே விண்மீன். நில விடை நின்ற அரங்கு (165) கன்னியின் உள்ள வெளியிலே நிலைபெற்ற காதலுக்கு உவமம். மீன்கள் நிகர்வடம் தாங்கி நிற்ப - அரங்கு, விண்மீன்களை யொத்த மணிவடங்களால் புனையப்பெற்று நிற்க.

167. சதுக்கம் - மேடை. மிலேச்ச - சூட. கடு - நஞ்சு. நங்கை நின்றாள் என்க.

## வேறு

168 அல்லனைய மஞ்சனைய நெய்த்தநறுங் கோதை
புல்லவடி யறலனைமென் வார்பனிச்சை தாழ
மல்லிகையி னீணிரலு மீதிவர்ந்து மொய்ப்பச்
சில்லொளிப்பொற் குஞ்சமொரு மூன்றுநுனை யால.

169 பில்குமொளி தெள்ளுவயி ரத்தினிரல் கொண்ட
யெல்லவிரு மீர்கதிரி னார்தலையின் கோல
மெல்லொளிசெய் சீர்பதக்க மொண்ணுதலி னாலப்
பில்லையணி நல்கவொளி சுற்றுமுகை விள்ள.

170 வில்லிடையு மென்வரையின் மைப்புருவக் கீழ
கொல்லயிலின் கூர்துதியி னார்கணைக ளெய்யும்
புல்லுமளி கொண்டவிரு தேன்மலர்க ளன்ன
மெல்லிமைகள் புல்லுமிரு மான்மதர்க்குங் கண்கள்.

---

168. அல் - இருள். மஞ்சு - மேகம். கோதை - மாலை. மாலையையுடைய பனிச்சை என்க. அறல் - கருமணல். பனிச்சை - மகளிரின் பின்னி விட்ட சடை. புல்ல - பொருந்த. வடி - வடிந்த. கோதை தம்முட் புல்ல அதனால் உருவான சடை தாழ என்க. நிரல் என்றார், மல்லிகையின் அரும்பு வரிசையாக வைத்துத் தொடுக்கப்பட்டிருத்தலின். நுனை ஆல - பனிச்சையின் நுனியில் அசைய.

169. பில்கும் - சிந்தும். ஒளி - ஒளியையுடைய. நிரல் கொண்ட கோலம் என்க. பில்லை யணி - பில்லையாகிய அணிகலன். முகைவிள்ள என்றார் அப் பில்லையைச் சுற்றிலும் மலர் அரும்புகள் இருந்து மலர என்பதற்கு.

170. இடையும் - ஒக்கும். மென் வரையின்-மெல்லிய கோடு போன்ற. கீழ - கீழன; கண்கள் கீழன என்பது. மால் மதர்க்கும் - மாயஞ் செழிக்கும்.

171 பொன்முளரி மீதிமைக்கும்
நீலவிணை யூடே
யெண்மலரை யொன்றுநுழை
மெல்லுயிர்ப்பின் மூக்கின்
நுண்வரையின் கீழ்முல்லை
யொண்ணிரல தோன்றக்
கொண்டுமுகிழ் மாதளையின்
செவ்விதழ்க ளவிழ.

172 சுக்கையென மின்னுசுடர் வெள்வயிரத் தோடு
பக்கமுறு செஞ்செவிய காதுபுனைந் தொளிர
பக்கமதி வாணுதலி னுப்பணுறு திலக
மிக்கதுங்கச் சிரமுஞ்சில் வாய்கனிமான் முறுவல்.

173 கோடுவரை கொண்டனைய
பொன்றிரள்கொள் கண்டம்
கோடுதுவர் கிம்புரிகொள்
பந்துறமென் கொங்கை
பாடுறுவெண் முத்துவடம்
கச்சமணிந் திலக
வாடுமயின் மென்கழுத்திற்
றேயுமிடைப் பிடியே.

---

171. பொன் முளரி - பொன் நிறத் தாமரை; என்றது முகம். இது, இல்பொருளுவமை. நீல இணையூடு - இரண்டு கரு விழிகளினிடையே. எண் மலர் - எள்ளின் மலர். உயிர்ப்பின் - மூச்சுவிடுதலையுடைய. வரை - மூக்கின் கீழுள்ள இரு வரைகள். மூக்கினது வரையின் கீழவான எனத் தொடர்க. முல்லை நிரல் என்றது, பல்லின் வரிசையை நினைந்து.

172. சுக்கை - விண்மீன். செவிய - செவ்விய. பக்க மதி - எட்டாம் பிறைத் திங்கள். அமுஞ்சில் - அமுஞ்சிற் பழம்; இதழ், நிறத்திற்கு உவமை.

173. கோடு - சங்கு. கோடு - கொம்பு. துவர் - பவழம். கிம்புரி-பூண். பவழக் கிம்புரி என்றபடி. பாடு உறும் - சிறப்புப் பொருந்திய. கச்சம்- கச்சு,

174 மாடுருவப் பொன்மருப்பின் றொய்யிலமென் றோள்
சூடுவங்கி யொண்மணிகள் மென்னிலவு காலத் [கள்
தோடுபொன்ன வுட்சிவப்பு விண்முளரிக் கைக
ளாடகப்ப லெல்வளைகள் சீரிறைகள் பொங்க.

175 வாரிடைய வீங்குநகி லுங்குமிடை யேந்துஞ்
சீரகிலங் கீழுறுமென் கானமஞ்ஞை யுருவின்
வாரொளிசெய் பன்மணிசெய் மேகலைசெய் பூசல்
தேரிடைக்குஞ் சித்திரத்தி னேந்துமணி யல்குல்.

176 கஞ்சமுறு பொன்னிதழ்க ளுட்சிவந்த வன்ன
பஞ்சியொளிர் மெல்லடிகண் மென்மலரி னொய்ய
துஞ்சுமொளி மென்பளிக்கு வுள்ளுறைக்கு மென்ன
வஞ்சிமணிச் சீறடியின் பொற்சிலம்பு தேம்ப.

---

174. மாடு - இருபக்கமும்; பொன்மருப்பு - பொன்நிறமுள்ள யானைத் தந்தம். தொய்யில - தொய்யிலையுடையன; தொய்யில் எழுதப்பட்டனவான. தொய்யிலமைந்த பொன் மருப்பின் உருவமென்றோள்கள் என்க. மெல் நிலவு கால - மெல்லிய ஒளியினை உமிழ. தோடு - இதழ். விள் முளரி - இதழ் அவிழுந் தாமரை யொத்த. ஆடகம் - பொன்னாலாகிய. சீர் இறைகள் - ஒழுங்கான முன்னங் கைகள். பொங்க-சிறிது அசைந்து ஒலிக்க.

175. நகில் - கொங்கை. சீர - சீரையுடைய; அழகையுடைய. கிலம் - கில்லம்; கழுத்து. மயிலின் கழுத்துக்குக் கீழுள்ள உருவத்தைப் போன்ற அல்குல் என்க.

176. கஞ்சம் - தாமரை. சிவந்த அன்ன - சிவந்தன போன்ற. கஞ்சத்தின் இதழ்கள் வெளியே பொன்னிறமும் உள்ளே சிவப்புநிறமுமுடையனவாக இல்பொருளுவமையாய்ப் பாதங்களுக்குக் கொள்ளப் பட்டன. பஞ்சி - செம்பஞ்சிக் குழம்பு. நொய்ய - நொய்யன; மெல்லியன. துஞ்சும் ஒளி - ஒளி தங்கும். பளிக்கு - பளிங்கு. உள் உறைக்கும் என்ன - பாதத்தின் உட்புறமுள்ள மெல்லிய இடத்தே உறைக்குமென்று அஞ்சித் தேம்ப என்க. தேம்ப - ஒலிக்க.

177 துப்புசுதை பொற்சரிகை
வேய்கலிங்கம் புனையு
மொப்பிலெழின் மெய்யளணி
காலிலவி னுள்ளே
யிப்பரிசி னின்றமயல்
செய்யணங்கின் பெற்றி
யெப்பரிசெம் நொய்யசொலின்
மெய்ப்பரிசு விள்வேம்?

வேறு

178 மஞ்சையு மதியுஞ் செய்ய
முளரியுந் துகிருஞ் சேலுங்
கொஞ்சிசைக் குயிலுமஞ்சு
மன்னமும் பொருவு மென்னல்
செஞ்செவி மாதர் மாதர்க்
கொப்பமை வல்ல வென்னின்
விஞ்சவாத் தூரப்பச் செய்யும்
வழக்கலாற் பண்பு முண்டோ?

---

177. துப்பு - தூய. சுதை - வெண்ணிறம் உள்ள. கலிங்கம் - ஆடை. மெய்யள் - உடம்பினை உடையவள். அணி கால்- அணிகள் உமிழும். நொய்ய சொலின்-புல்லிய மொழிகளால். விள்வேம்-விதந்து சொல்லுவேம்.

178. மஞ்சை - மஞ்ஞை ; மயில். செய்ய - சிவந்த. துகிர் - பவழம். மஞ்சும் - மேகமும். செஞ்செவி மாதர் - திருந்திய அழகினை யுடைய மாதர். மாதர் மாதர்க்கு - மாதர்கள் மாதர்களுக்கே. ஒப்பு அமைவு - பொருந்திய ஒப்புமை. விஞ்சு அவாத் தூரப்பச் செய்யும் - மிகுகின்ற ஆவல் உந்த அதனால் ஒப்புமை செய்யும். பண்பும் - பிற இயல்பும்.

179 அழகெனு மிருலிற் றேய்ந்து
கனிந்திழி நறிய தேனே!
தழைசுவை பெருகு மத்தேன்
வாரிதோ யுருவ மொன்றோ!
எழிலெனும் வனமான் மஞ்சு
தோய்ந்திழி யாலி முத்தோ!
செழுவிய லரிய மாதர்
மெல்லியற் கோலப் பண்பே.

180 ஒப்பிடை செய்ய நங்கை
யிப்பரி சிடையி னிற்பத்
துப்புடை யறிவின் மாந்த
ரப்புடை விழியின் மாத
ரெப்புடை யிடனு மேவிப்
பப்புடை யரங்கு மொய்ப்ப
வெப்புடை யலைகை யேந்து
முப்பிடை யாற்றை யொப்பாள்.

---

179. இருல் - தேனடை. தேன் வாரி - தேன்பெருக்கு. உருவம் ஒன்றோ - ஓர் ஒப்பற்ற உருவமோ! வனம் மால் மஞ்சு-உணர்வை மயக்கும் அழகாகிய மேகம். வனம் - அழகு. எழில் என்னும் அழகு என்றபடி. தோய்ந்து இழி ஆலி முத்தோ - உறைந்து பெய்கின்ற மழைக் கட்டிகளாகிய முத்துக்களோ?

180. உப்பு-உப்புக் கடல். உப்புடைமையின், கடல், நீர்வேட்கை கொண்டு தன் அலைகளாகிய கையை ஏந்தி நன்னீருடைய ஆற்றை வரவேற்ப தொப்ப, அரங்கிலுள்ளோர் வேட்கையோடு இடையில் நின்ற நங்கையுருவை ஏற்று உவந்தனர் என்றபடி.

181 நல்லியற் கயத்தின் மேவு
பாசடை முகையி னுப்பண்
புல்லிதழ் முளரிப் போது
தளையவி ழரிய செவ்வி
சொல்லிடை யவிரு முன்னம்
கல்லிடை யவிருஞ் செண்ணம்
வில்லிடு மூரி னுப்ப
ணல்லிடை மதிய மொத்தாள்.

182 நாடகத் திடையின் மேவு மால்புரி செய்ய காட்சி
வாடகத் திடையின் மேவு மமுதினு மினிய வுன்னம்
தோடகத் துருக்கொள் வீயி னூறிய வினிய தேறல்
காடகத் தரிய புட்க ளிடையுறு மஞ்ஞை யொத்தாள்.

183 இளந்தலை யுற்றூர் வேட்குந்
திருவென மன்று நின்றாள்
வளம்படு மறிவின் மாந்த
ரிடையுறும் புலவ னன்னாள்
கொளுந்தொளி கனலி னாப்ப
ணோங்கிய சிகையு மொய்ய
வளந்துறு வாழ்வின் மாட்சி
நடுவுறுங் காதல் போல்வாள்.

---

181. பாசடை முகையின் - பசிய இலைகள் முகைகள் என்பவற்றின் நடுவில். செவ்வியையும், முன்னத்தையும், உருவத்தையும் மதியத்தையும் ஒத்தாள் என்க. சொல்லிடை அவிரும் முன்னம் என்றது, புலவர்களின் பாக்களாகிய வாய்மொழியினிடையே விளங்குங் கருத்துக் குறிப்பு. கல்லிடை அவிரும் செண்ணம் - கல்லின்கண் செதுக்கப்பட்டு விளங்கும் உருவம். வில் - ஒளி. ஊர் - மதியைச் சுற்றித் தோன்றும் வட்டம். அல்லிடை வில்விடும் ஊரின் நாப்பண் மதியம் என்க.

182. மால்-மயக்கம். வாடு அகத்து இடையின் - வாட்டத்தோடு கூடிய உளத்தில். உன்னம் - கருத்தின் தோற்றம். தோடு - இதழ். தேறல் - தேன்.

183. இளந்தலை யுற்றூர் - எளிமை யுற்றாரது. வேட்கும் - விரும்புகின்ற. மன்று-அரங்கில். கொளுந்து ஒளி என்க. கனலி - தீ. சிகையும் - கொழுந்தும். சிகையும் காதலும் போல்வாள் என்பது, காதலும் என உம்மை கொள்க.

184 சீருறு வவையின் மக்க
ணசைமனந் தேனின் மொய்ப்ப
வேருறு கண்க ளன்னார்
மனமொடும் பிறழ வன்னாள்
பேருறுங் கைகள் பாத
மிடையொடும் பெயர வன்ன
வாருறு நகில்க ளோடு
மசைதர வவர்க ளுள்ளம்.

185 சரம்பயில் கண்க ளேறுண்
டனைவரு மயங்கி வாட
வரங்கிடை நிறையு மக்க
ளனைவரி னுயிரொன் றேபோ
னிரம்பெழி னங்கை நின்றா
னியஞ்சதி யிசைப்ப வுள்ளின்
வரம்பிகந் தெழுந்த வோகை
யுருவென வாட லுற்றாள்.

வேறு

186 பொங்குசினை வல்லிசினை போர்த்தமென வாகம்
நுங்குகுய மாம்பொழுதின் மீதுருத்த பொற்பிற்
றங்குமணம் வீயவிழ மேலெழுந்த பரிசிற்
கொங்குமிக்குக் கூடொருவி மேற்பிதிரும் வண்ணம்;

184. நசை மனம்-விருப்ப உள்ளம். தேனின் - தேனீக்களைப் போல. ஏருறு கண்கள் பிறழ என்க. அன்னார் என்றது, அவையின் மக்கள். பேர் உறும் - பெயரும். பாதத்தோடும், இடையோடும் பெயர என்றபடி. அன்ன - அவையோர் கண்கள். அன்ன பெயர என மாற்றுக. அவர்கள் - அம் மக்களுடைய.

185. இயம் சதி இசைப்ப - வாத்தியங்களும் தாளமும் இசைக்க.

186. சினை இரண்டனுள் முன்னது கொடியின் கிளை, பின்னது அரும்புகள். ஆகம் நுங்கு குயம் - மார்பை விழுங்கும் கொங்கை; என்றது, பரந்த கொங்கை என்றற்கு. ஆம் பொழுது என்றது ஈண்டுப் பருவகாலம். உருத்த - எழுந்து தோன்றிய. வீ - மலர், வீ அவிழ மணம் மேலெழுந்த என்க. கொங்கு-தேன்.

187 ஆரநில வெஞ்சவிதழ் கிறுநகை யென்னக்
காரிருளிற் காவலுகக் காதலிரும் போக்கி
ஞாணிகொள் பாச்சுவைமன் சொல்லிகந்த நோக்கிற்
கூரிசையு நுங்கியது மன்னமைதி யென்ன:

188 மன்னுமெழி னுங்கியெழு
பொங்குமெழில் பொலிய
மென்சுருள்கள் புல்லுகலை
யொண்ணுதன்மெ னெரியத்
துன்னுகணை யெய்யும்விலின்
கார்ப்புருவம் வாங்கி
மின்னுமயிற் கட்கடைகள்
மொய்யசரம் பெய்ய.

189 பங்குமதி யுற்றதென முத்துநகை நிலவத்
தங்குபிட ரோதிசடை குஞ்சமொடு மாட
வங்கைமரைத் தோடுநிகர் மெல்விரல்க ளோடு
பொங்குவளை வங்கிபுனை மென்பணைத்தோள் வாங்கி.

---

187. ஆரம் நிலவு எஞ்ச - முத்துவடம் காலும் ஒளி குறைய; ஆரம் - முத்துவடம். உக - கெட என்னும் பொருட்டு. இரும் - மேல் ஊர்ந்து போகும். அணி - அணி இலக்கணங்கள். இகந்த - கடந்த. இசையும் அமைதியை நுங்கியது என்ன என்பது; நுங்கியது, ஈண்டு வென்றது என்னும் பொருட்டு. முற்செய்யுளிலும் இச் செய்யுளிலும் வந்த உவமைகள் மேற்செய்யுட்களில் வரும் பொருள்களுக்குக் கொள்ளப்படும். நங்கைபாற் பின் வருமாறு நாட்டிய எழில் எழுந்த தென்பது கருத்து.

188. மன்னும் எழில் - நிலைத்த அடிப்படை எழில். பொங்கும் எழில் - அவ்வடிப்படை எழிலிலிருந்து மேற் கிளர்ந்து எழும் எழில். மென்சுருள்கள் என்றது மயிர்ச்சுருள்களை. கலை - பிறை. விலின் - வில்லாகிய. அயில் - வேல் ஒத்த. மொய்ய சரம் - செறிந்த அம்புகளை.

189. பங்கு மதி - பிறை நிலவு. ஓதி சடை - மயிர்ச்சடை. மரைத்தோடு - தாமரை யிதழ். வாங்கி - வளைத்து.

190 வம்புபுனை சந்தனமுண் பீனகுயந் தாங்கும்
வம்புமுல்லை யேந்துகொடி யன்னநுசுப் பொசியப்
பம்புமணிப் பன்மணியின் மேகலையுந் திரிய
வம்புயச்செஞ் சீறடிகள் பொற்சிலம்போ டாட.

191 பாணியொடு செல்லிசையின்
பொற்கருத்துட் கொண்டாள்
பேணுமவை யுண்மகிழப்
பொற்பவிழத் தெரிப்பாண்
மாணுருவ மஞ்ஞைமுகில்
கண்டதெனக் குனிப்பாள்
பூணுமல ரேந்துவழைக்
கொம்பரெனப் பொலிவாள்.

192 தேசுகுமொண் சுக்கைமண
வீசொரிமென் முல்லை
பாசடையி னூடுபொலி
செங்கனியே ரழுஞ்சின்
மாசடையச் சீர்சொரியு
நேரினல நங்கை
வீசுதென்றல் வேனிலிடைப்
பார்மதர்ப்ப தொப்பாள்.

---

190. வம்பு புனை – கச்சுப் புனைந்த. பீன குயம்-பெரிய கொங்கையை. தாங்கும் நுசுப்பு ஒசிய என்பது. ஒசிய - வளைய. பம்பு - ஒளி பெருகுகின்ற. அம்புயச் செஞ் சீறடிகள். தாமரை போன்ற சிவந்த சிறிய அடிகள்.

191. பாணியொடு - தாளத்தோடு. பொற் கருத்து - அழகிய கருத்தினை. உள் மகிழ-அவையினர் உள்ளம் மகிழும்படி. குனிப்பாள்-வளைந்து வளைந்து ஆடுவாள்.

192. சுக்கை - விண் மீன்கள். வீ - மலர். சுக்கை முல்லை அழுஞ்சிலைப் போல. நேர் இல் நல நங்கை - தனக்கு ஒப்புமையில்லாத நலங்களமைந்த அம் மாது. பார் மதர்ப்ப ஒப்பாள் - உலகம் கிளர்ச்சி கொள்வதைப் போன்று விளங்கினுள்.

193 தாடிமுடி வற்கலைகொள் மெய்யரிடை யுற்றாள்
கோடுமயிற் சாயலுடை கௌசிகனேர்ச் செல்வி
பீடுடைய மாவெழிலன் வேந்தையெதிர் கண்டாள்
சேடுடைய மெய்ம்முகமு ளற்புதந்தெ ரித்தென்.

194 பொன்னிறமென் மெய்புளக
மெய்த, மயிர் குளிர்ப்ப,
மென்பணைத்தோள் சோர்ந்திடச்செவ்
வாயுரையு மொல்க,
கன்னிமுறை கான்பிணையு
மக்களெதிர் கண்டென்
கொன்கணிணை சால்புறவே
யெல்லவிர விழிப்பாள்.

195 எல்லிரவி கண்டெழொளி மங்குமதி யென்ன
மல்லனங்கை நம்பியெதிர் நாணவியல் குவிந்தென்
வில்லழியக் கோடுடம்பு சென்னிநனி கவிழ
வெல்லதகர் பின்னடைந்தென் சிந்தைபட நடிப்பாள்.

---

193. வற்கலை - மரவுரி. மெய்யர் என்றது, இங்கே கண்ணுவரும் அவர் மாணவரும். கௌசிகன் ஏர்ச் செல்வி - விசுவாமித்திர முனிவனது அழகிய புதல்வியாகிய சகுந்தலை. வேந்தை என்றது, துசியந்தனை. உற்றவளாகிய செல்வி புதுமை பூத்துக் கண்டாள் என்னும்படி எனத் தொடர்ந்து, மேற் செய்யுளில் விழிப்பாள் எனக் கூட்டுக.

194. குளிர்ப்ப - சிலிர்ப்ப. உரையும் - மொழியும். கான் பிணை - கானிலுள்ள மான். மான் மக்களை எதிரே கண்டாற்போல விழிப்பாள் என்க. கொன் - பெருமை மிக்க. கண் இணை என்பது. எல் அவிர - ஒளி விளங்க.

195. எல் இரவி - ஒளிமிக்க கதிரவனை. மல்லல் - வளம் மிக்க. இயல் - இயல்பு. வில் - ஒளி. கோடும் உடம்பு - கோணும் உடம்புடன். தகர் - ஆட்டுக்கடா. இச்செய்யுள் நாணத்தின் அவிநயம் உணர்த்திற்று.

196 முன்பெயன்மன் றுய்த்தமுல்லை
வீயலர்ந்த சைந்தென்
பொன்னிலவிற் புல்லிதுணை
யுண்மகிழ ணங்கென்
றின்பநவில் கண்ணொளிர
வீங்குநகி லேந்தி
மென்மருங்கு லொல்கநடித்
தின்முறுவல் செய்வாள்.

197 பேணலர்கைக் காதலர்கள் வெப்படைந்தொ சிந்தென்
நாணமரி தொல்கவெய்ய காமமுற்ற பெண்ணின்
பூணொசிய வாற்றலறக் கண்வெதும்பி நோக்கி
மாணுருவம் நையவுடல் வெப்பியறெ ரிப்பாள்.

198 ஆவியன தன்கணவன் தீர்ந்துதம யந்தி
கூவுகுயின் மென்பிணையொ டாற்றியுரை காட்டில்
மாவுடலப் பாம்புநனி சுற்றியுட னைய
நாவுரைபொய்த் தல்லறரு வேடனலி யுற்றென்.

199 ஒல்கவுடல் கண்மலங்க வின்னுளன்க லங்கச்
சொல்லனுங்கக் கைமறுக்க வச்சமிகை காட்டி
யல்லலடச் சோரவுடல் நுண்வியர்வு தோன்றப்
பல்லுயங்க வாயுலரத் துன்புநனி தெரிப்பாள்.

---

196. முன் பெயல் - தலைப்பெயலால். மன் துய்த்த - மிகத் துய்த்த. அணங்கு - தலைவி.

197. பேணலர் கை - தம்மைப் போற்றாதவர்களிடையே. அரிது ஒல்க என்க. வெப்பியல் - வெப்பமுற்றோரின் தன்மை.

198. இச்செய்யுளில் உவமையும் வருஞ் செய்யுளிற் பொருளும் வருகின்றன. அன - அன்ன. தீர்ந்து - பிரிந்து என்னும் பொருட்டு. ஆற்றியுரை - உரை ஆற்றி; உரையாடி இருந்த. மா உடல் - பெரிய உடம்பினையுடைய. உடல் நைய - தனது உடலை வருத்த. வேடன் நலியுற்று என. வேடனால் வருந்தினாற்போல.

199. அனுங்க - ஈண்டுத் தடுமாற என்க. துன்பு - துன்புக் குறிப்பினை.

200 பொற்பழிய வன்பனியி னூடுபடு பாரின்
பொற்பணிக ளார்நகைக ளூடலிரி மாதின்
சொற்குறியு முள்ளசைவுந் தீர்நிலையின் முனியி
னெற்பொலிவு தீர்ந்திடையின் மக்கண்மனம் வாங்கி.

201 மீண்டுவருங் காதலுறப் பூண்டொளிரும் பொற்பி
னீண்டுமெழில் பொங்கியுறப் பொற்சிலம்பு பொங்க
மூண்டகன னெய்சொரிய வுண்டுகிளர் பண்பி
னுண்டமக்க ளுட்களிப்பக் கண்மதர்ப்ப நடிப்பாள்.

202 விந்தையொடு நோக்குமவை நோக்கிடையி னடிப்பா
ணந்துமலை நந்தவொளி நந்துபுனன் மீதி
னிந்துபொர வன்னமெனச் சீர்நிருத்தக் கூத்தி
தந்ததிஃதெ மாசையுறச் சொல்லிகந்த பண்பை.

---

200. படு பாரின் - மூடப்பட்டு அடங்கிய உலகைப்போலவும். ஊடல் இரி மாதின்-ஊடற் காலத்தில் நீக்கிய மாதைப் போலவும். உள் அசைவும் - உள்ளத்தின் முயற்சியும். தீர் நிலையின் - நீங்கிய நிலையி லுள்ள. முனியின் - முனிவனைப் போல. பொலிவு தீர்ந்து - ஒளி விளக்கம் நீங்கி. வாங்கி - கவர்ந்து.

201. மதர்ப்ப - கிளர்ச்சி கொள்ள. இச் செய்யுள், மீண்டும் மலரும் பொற்பைக் குறித்தது.

202. அவை நோக்கிடையில் அவையத்தாரது நோக்கினிடையில். நந்துதல் - தழைத்தல். ஒளி நந்தும் - ஒளி மிகும். அலை நந்த என்னுமிடத்து, நந்துதல் உடைந்து கெடுதலாகும். இந்து பொர-திங்களை ஒப்ப. அன்னம் - அன்னம் விளையாடினாற் போல. புனல் மீது கண்ட மதியையும் அன்னத்தையும் போன்ற கூத்தி என்றபடி. சொல் இகந்த பண்பை - இச் சொல் கடந்த இயல்பை.

வேறு

203 நிழலிகந் தளவின் வீங்கி முழுமதி தேய்ந்த பெற்றி
கழிநலக் காத லூட லிகந்ததி லொசிந்த வண்ணம்
தழையிசை நடன மற்றும் பல்கலை யுணர்வி னோடு [றே
மெழில்வள மயங்க மீண்டு மிருண்முயக் கமைந்த வன்

204 நிறம்பல மணமுந் தேனும்
விரிமலர் குவிந்த தன்ன
சுரும்பரும் புள்ளு மாவு
மக்களோ டுலக டங்க
நிரம்பரு ளிறையின் செவ்வி
மீண்டது மனமு மென்னத்
திறம்பல காட்சி கண்டே
மின்னன செப்ப லுற்றேம்.

205 மையவி ழுலகம் பூத்த
வருட்கலை யீட்ட மென்ன
மைவிசும் புலவி மின்னுஞ்
சுக்கைகாள் கோள்கா ளுய்வீர்
மொய்யெழி லவிரும் வையம்
கண்டுளீர் சொல்வீ ரொப்போ
பையவி ழொளிசெ யுங்கண்
மண்டல மலரும் பொற்பு?

---

203. நிழல் இகந்து - இருள் சிதைய ஒளி மிகுந்து. ஊடல் இகந்து - ஊடலை வென்று. மயங்க - மங்க. மீண்டும் இருண் முயக்கு - மீண்டும் இராப்போதின் அணைவு.

204. விரி - விளங்க வைத்த. உலகு அடங்க - உலகமும் அடங்கி நிற்க. இறையின் செவ்வி மீண்டது மனமும் என்ன-இறையின் உலகியல் அழகினை நோக்கி இறையினிடம் மனமும் மீண்டு அடங்கியது என்னும்படி.

205. உலகம் பூத்த - உயர்ந்தோர் தந்த என்னும் பொருட்டு. மை விசும்பு - நீலவானில். சுக்கைகாள் - விண்மீன்களே! பை அவிழ் - பைய அவிழ்ந்து; மெல்லென மலர்ந்து. பை - அழகுமாம். உங்கள் மண்டலங்களில் மலரும் பொற்பு, இவ் வையத்தில் அவிரும் எழிலுக்கு ஒப்போ சொல்வீர் என்றபடி.

206 இனையவோ வுயிர்க ளெந்தோ
புலன்கடா மிகையோ தாழ்வோ
வனையெழி லுருவ மிற்றே
கண்டிலா வகையோ கொண்டீர்
கனைவெளி யூடே நிற்ப
நுஞ்செவி காண கில்லே
மெனையன வடிவ மாயி
னுயிரன செவ்வி யொன்றே!

207 அரும்பொடு போது தூங்குஞ்
செறியிணர்க் கொடியு மொன்றே
வரம்பில வுயிரிற் பொங்கும்
வேனிலின் செவ்வி யொன்றே
யரும்பொல முகமெய் பூக்குஞ்
செவ்வியு முள்ளத் தொன்றே
யிரும்பொழின் முதல வண்டந்
தனியிறைப் பாவே யன்றோ!

---

206. கொண்டீர் - உங்கள் மண்டலங்களுட் கொண்டீர். நும் செவி - நுமது செவ்வியை. வடிவமாயின் - வடிவமாயினும் என்க. உயிரன செவ்வி ஒன்றே - எல்லா உலகங்களின் எழிலுக்கும் உயிர் போன்ற அடிப்படையான மலர்ச்சியுண்மை ஒன்றேயாகும் என்பது.

207. போது - மலர். தூங்கும் - தங்கும். வரம்பில உயிரின் - அளவில்லாதனவான உயிர்களின் உள்ளத்தில். செவ்வி - இன்பம். பொலம் முகம் - உள்ளத்தின் அழகு காட்டும் முகம். முதல - முதலாகிய. அண்டம் - அண்டங்களின். இறை - கடவுளது. எழிலின் மலர்ச்சியில் எல்லாம் ஒத்தலின் இவையனைத்தும் ஒன்றே என்பது.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | | **மதிப்புரை.** | |
| 15 | 13 | எழில் | எழிலை |
| | | **முன்னுரை.** | |
| 2 | 8 | இளை | இள |
| | 9 | வெரிக்கும் | வெறிக்கும் |
| 6 | 14 | குறித்தோ | குறித்ததோ |
| 9 | 23 | தன் | தம் |
| 16 | 19 | கடந்து | கடிந்து |
| 20 | 22 | காரணமாய் | காரணமாய |
| 23 | 10 | சூர்ப்பனகை | சூர்ப்பணகை |
| 29 | 5 | கர்னபரம்பரை | கர்ணபரம்பரை |
| 32 | 5 | முனிவர்ப் போக்கு | முனிவர் போக்கு |
| | | **செய்யுள்** | |
| 4 | 11 | சிதைந்தத | சிதைந்ததவ் |
| 12 | 12 | துயத்துரு | துய்த்துரு |
| 14 | 9 | பொய்விடா | பொய்விடாக் |
| 16 | 11 | ஙீர்க்கரை | ஙீர்க்கரைச் |
| 17 | 14 | ராசறுஞ் | ராசறு |
| 27 | 14 | காதலன்பம் | காதலன்பும் |
| 28 | 13 | பயின்று | பயின்றி |
| 29 | 15 | யிரிதுவ | இரிதுவ |
| 31 | 14 | மெல்லுழகைள் | மெல்லுழைகள் |
| 31 | 19 | சேர்த்திடா | சேர்த்திடாக் |
| 32 | 21 | வெரிக்கு | வெறிக்கு |
| 36 | 15 | மெல்லடிசி | மெல்லடிச்சி |
| 40 | 21 | சோலை | சேலை |
| 52 | 4 | வெளி | வெளிக் |
| 53 | 20 | விரும்பினர் | விருப்பினர் |
| 56 | 13 | பொங்கி | பொங்கிச் |
| 61 | 21 | கல்ன் | கலன் |